கல்கி

KALKI 12.7.87 ரூ. 1.50



அடுத்த இதழில் பொன்னியின் செல்வன் இரண்டாம் பாகம் ஆரம்பம்

ஜெயசக்தி

துவங்கும் புதிய சீட்டு குருப்புகள்

மாதங்கள்	உறுப்பினர்கள்	சந்தா தொகை	சீட்டு தொகை
25	25	200	5,000
25	25	400	10,000
25	25	1000	25,000
25	25	2000	50,000
25	25	4000	1,00,000
100	100	250	25,000
100	100	500	50,000

குறிப்பு :-

1. சீட்டு குருப்புகளில் பணம் எடுப்பதற்கு நல்ல வருமானம் உள்ள 2/3 தனி நபர் ஜாமீன் அளித்தால் போதும்.
2. உறுப்பினர்களை அறிமுகம் செய்வோர், எண்ணிக்கை அடிப்படையில் குறைந்த வட்டிக்கு கடனும் மற்றும் சீட்டுகளை அட்வான்ஸாக பெறவும் தகுதி பெறுவார்கள்.

விபரம் வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :-

சென்னை : 39, நடேசன் தெரு, (2வது மாடி) சிவா விஷ்ணு கோயில் அருகில், தி.நகர், சென்னை-600 017, போன் : 442218/445494.

திருச்சி : 22, மதுரை ரோடு, (முதல் மாடி) ராஜா தியேட்டர் அருகில் திருச்சிராப்பள்ளி-620 008, போன் : 31376/33397

கோயமுத்தூர் : 666, ராஜா தெரு (முதல் மாடி) கோயமுத்தூர் 641001, போன் : 34369.

மதுரை : 41, வடக்கு வெளி வீதி, (முதல் மாடி) மாடர்ன் வாட்ச், ஸ்டாம்பிங், மதுரை-625 001, போன் : 36004/34508.

பாண்டிச்சேரி : 11, நேரு தெரு, (கனரா வங்கி எதிரில்) 2வது மாடி பாண்டிச்சேரி-605 001, போன் : 6493/6471.

திருநெல்வேலி : 9-G திலக் நகர், மதுரை ரோடு, திருநெல்வேலி-627 001, போன் : 25785.

தஞ்சாவூர் : எண் 2 & 3 முதல் மாடி, ஜி.ஏ. கனால் ரோடு, தஞ்சாவூர்-613 001, போன் : 21626/22286.

பெங்களூர் : 24/1 A, மார்கோஸா ரோடு, (10-வது கிராஸ்) மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003, போன் : 366971.

கும்பகோணம் : 12, கிழக்கு சாரங்கபாணி தெரு, கும்பகோணம்-612 001, போன் 22647.

திருவண்ணாமலை : 14/A, ஆனைக்கட்டி தெரு, திருவண்ணாமலை-606 601, போன் : 2483.

பட்டுக்கோட்டை : 121/B தலையாரி தெரு, பட்டுக்கோட்டை-614 601, போன் : 453.

ஜெயசக்தி சிட்ஸ் & பைனான்ஸ்

நிர்வாக அலுவலகம் :- 39, நடேசன் தெரு, (2-வது மாடி)
(சிவா-விஷ்ணு கோயில் அருகில்) தி.நகர், சென்னை-600017.
போன் :- 442218/445494

LOTUS/JCF-III/Tam/87



இலங்கைத்
தமிழர்களின்
பிரச்னைகளைப்
பின்னணியாகக்
கொண்டு

வாஸந்தி

எழுதும்

நிற்க நிழல் வேண்டும்!

பரபரப்பான
தொடர்கதை

கல்கி

ஆகஸ்டு 2
ஆண்டு மலரில்
ஆரம்பம்



காவல் துறையிலிருந்து ஓய்வு பெற்ற சி.வி. நரசிம்மன், தமிழ்நாடு காவல் துறையின் டைரக்டர் ஜெனரலாகவும், சி.பி.ஐ. தலைவராகவும் பணியாற்றியவர். காவல் துறை அனுபவங்களுடன் தேசிய போலீஸ் கமிஷனின் உறுப்பினராக இருந்து இவர் பெற்ற அனுபவங்களும் இப் பேட்டியில் வெளிப் படுகின்றன.

காவல் துறையைக் கட்டிப் போடும் அரசியல் ஆதிக்கம்

கே: மக்கள் தொகை:—போலீஸ் விகிதாச் சாரம் எந்த அளவினதாக இருப்பது நல்லது? அந்த அளவில் நம் நாட்டில் இருக் கிறதா?

ப: நிர்ணயிக்கப்பட்ட சரியான விகிதாச் சாரம் என்று ஒன்று கிடையாது. போலீஸ் படையின் அளவு ஜனத்தொகையை மட்டும் அடிப்படையாகக் கொண்டிராமல்மக்களின் இயல்பான குணநலத்தையும் கட்டுப்பாட் டையும் அடிப்படையாகக் கொண்டும் இடத்துக்கு இடம் வேறுபடும். உலகெங் கும், 500 பேருக்கு ஒரு போலீஸ்காரர் முதல் 1000 பேருக்கு ஒரு போலீஸ்காரர் வரை விகிதாச்சாரம் வேறுபடுகிறது. இந்தியாவில் தற்போது ஆயிரம் பேருக்கு ஒரு போலீஸ் காரர் என்ற விகிதாச்சாரம் நிலவுகிறது. கிராமங்களில் உள்ளதைக் காட்டிலும் நகரங்

* சட்டத்தின் தேவையோடு சந்தர்ப்பத்தின் தேவை யையும் அனுசரித்து.....





* டி.வி. நரசிம்மன்

களில்தான் போலீஸ் படை அதிகம்.

கே: நம் நாட்டு நிலைமைக்கு இது போதுமானதா?

ப: இல்லை. போதுமானதில்லை!

கே: மக்கள் சக்தி நிறைய உள்ள நம் நாட்டில் போலீஸ் படையை அதிகரிப்பதில் என்ன பிரச்னை?

ப: போலீஸ் படை வருடா வருடம் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அது சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் தனிப்பட்ட பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அதிகரிக்கப்படவில்லை. புதிதாக வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போலீஸார் வி.ஐ.பிக்கள் பாதுகாப்பு, பந்தோபஸ்து, சட்ட—ஒழுங்குப் பாதுகாப்பு, வேலை நிறுத்தம், கலவரம் போன்றவற்றைக் கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளுக்கே திருப்பிவிடப் படுகின்றனர். சாதாரண மனிதனின் சைக்கிள் திருட்டையோ, சங்கிலிப் பறிப்பையோ கவனித்து, உடனே நடவடிக்கை எடுத்து இழந்த பொருள்களை அவன் விரைவில் திரும்பப் பெறப் போலீஸ் படை அதிகரிப்பு உதவவில்லை. அண்ணா சாலையில் நடக்கும் ஊர்வலத்தையோ பேரணியையோ கட்டுப்பாட்டில் வைத்திருப்பது ஓர் அரசாங்கத்தின் 'இமேஜ்' ஐ நிர்ணயிக்கிறது. அதனால் சாமானிய மக்கள் பால் கவனம் குறைகிறது. அவர்கள் அதிருப்தி அடைகிறார்கள்.

கே: சராசரி மனிதனின் அதிருப்தியும் அரசாங்கத்தின் 'இமேஜை'ப் பாதிக்குமே?


ப: ஒரு பொது இடத்தில், பொது நிகழ்ச்சியில் சட்டம் ஒழுங்கு மீறல்கள் நடப்பதால் ஓர் அரசாங்கத்தின் 'இமேஜ்' பாதிக்கப்படுகிற அளவுக்கு ஒரு தனி மனிதனுக்கு இழைக்கப்படும் அநீதியால் பாதிக்கப்படுவதில்லை. காவல் நிலையங்களில் குற்ற வழக்குகளைப் பதிவு செய்து ஆராயும் பொறுப்பில் உள்ளவர்கள் கூட பந்தோபஸ்து வேலைகளுக்குத் திருப்பிவிடப் படுகிறார்கள். அதனால்தான் பிரச்னையே எழுகிறது. சராசரி போலீஸ்காரரின் வேலை நேரத்தில் எண்பது சதவிகிதம் பந்தோபஸ்து பணிகளுக்கே செலவாகிறது. மீதி இருபது சதவிகிதமே குற்றப் புலனாய்வுப் பணிகளுக்கு ஒதுக்கப் படுகிறது. நமது பொது வாழ்க்கையின் தன்மை அத்தகையதாக இருக்கிறது. எப்போது பார்த்தாலும் பொதுக் கூட்டங்கள், தேர்தல், ஊர்வலம், பேரணி என்று ஏதேனும் நடந்து கொண்டே இருக்கிறது. தனிப்பட்ட குற்றங்களைக் கவனிக்க, குற்றப் புலனாய்வு செய்ய என்றே காவல் துறையில் புதியவர்களைச் சேர்ப்பதோடு அவர்களை வேறு பணிகளுக்குத் திசை திருப்பாமல் இருக்க வேண்டும். இவர்களை ,குறிப்பாகக் குற்றப் புலனாய்வுத் துறையினரை, அடிக்கடி டிரான்ஸ்ஃபர் செய்யாமலும் இருக்க வேண்டும்.

கே. அப்படிச் செய்தால் போலீஸின் திறமை பாதிக்கப்படும் என்று கூறுகிறீர்களா?

ப: ஆமாம், குற்றப் புலனாய்வு செய்பவர்கள் ஒரு கேஸை ஒரே நாளிலும் கண்டு பிடிக்கலாம், நீண்ட காலமும் ஆகலாம். அடிக்கடி டிரான்ஸ்ஃபர் நடந்தால் புதிதாக வருகிறவர் அந்தக் கேஸை மறுபடி ஆரம்பத்திலிருந்து ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டும். இதனால் கால விரயம் ஏற்படுகிறது. சட்டம் ஒழுங்கு நிர்வாகத்தில் இவர்களுக்கு இந்தப் பிரச்னை இல்லை.

கே: டிரான்ஸ்ஃபர் விவகாரத்தில் அரசியல் தலையீடு அதிகம் இருப்பதாகக் கருதப் படுகிறதே?

ப: நினைத்த மாத்திரத்தில் காவல் படையினர் டிரான்ஸ்ஃபர் செய்யப்படுகின்றனர் என்பதும் அதற்கு அரசியல் காரணங்கள் இருக்கின்றன என்பதும் இப்போது எல்லோரும் அறிந்த உண்மை. ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் உள்ள ஒரு காவல் துறை அதிகாரியின் நடத்தை, அரசியல் பலம் படைத்த ஒரு சிலருக்குத் திருப்தி தராத வகையில் இருப்பதாகக் கருதப்பட்டால், அந்த அதிகாரி உடனடியாக மாற்றல் செய்யப்படுகிறார்!



• களவு போன பொருள் உரிமையாளரிடம் திரும்பித் தரப்பட்டால்தான் வழக்கை மூடலாம் என்று விதி செய்ய வேண்டும்.

அந்த வட்டாரத்தில் உள்ள பிற பொது மக்கள் அவரைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது முக்கியமாகக் கருதப்படுவதில்லை. எல்லோருக்கும் கருத்துச் சுதந்திரம் உண்டு. அரசியல் பலம் படைத்தவர்களின் கருத்துக்கும் செவி சாய்க்கத்தான் வேண்டும். ஆனால் அவர்கள் கருத்து மட்டுமே முக்கியத்துவம் பெற்று விடுகிறது. இதற்காகத்தான் காவல் துறையை ''ஸ்டேட் செக்யூரிடி கமிஷன்'' என்ற அமைப்பின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டுவர வேண்டும் என்று தேசிய போலீஸ் கமிஷன் சிபாரிசு செய்தது. இந்த அமைப்பில், மாநில முதன் மந்திரியின் தலைமையின் கீழ் ஆறு உறுப்பினர்கள் கொண்ட குழு இருக்க வேண்டும். குழுவினரில் இருவர் மாநிலச் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அவர்களில் ஒருவர் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். மற்ற நால்வர் ஓய்வு பெற்ற நீதிபதிகள், பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் போன்ற மதிப்பிற்குரிய, பொது வாழ்வில் அனுபவம் பெற்ற நபர்களாக இருக்க வேண்டும் என்று போலீஸ் கமிஷன் எடுத்துச் சொல்லியிருக்கிறது. கமிஷனின் அறிக்கை எல்லா மாநிலங்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கே: சமர்ப்பித்து எத்தனை நாட்கள் ஆகின்றன?

ப: கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் எந்த மாநில அரசுமே அதை அமுல்படுத்தத் தயங்கும். காவல் துறையின் மீதுள்ள நேரடிக் கட்டுப்பாட்டை எந்த அரசுமே இழக்க விரும்பாது. இருப்பினும் என். டி. ஆர். ஆந்திராவில் இதை ஓரளவுக்குச் செய்திருக்கிறார். ஸ்டேட் செக்யூரிடி கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு, அதில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவருக்கும் இடம் தரப்பட்டுள்ளது. ஆனால் இந்த அமைப்புக்குப் போதுமான அதிகாரங்கள் இன்னும் தரப்படவில்லை. போகப் போகத் தரப்படும் என்று நம்புவோம். ஆரம்ப முயற்சியைப் பாராட்டுவோம். இப்படி ஓர் ஏற்பாட்டை முழுமையாகச் செய்தால் போலீஸ் துறை சுதந்திரமாக இயங்குவதோடு பொறுப்போடும் இயங்கும். இதைப் போன்ற அமைப்பு ஜப்பானில் வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

கே: காவல்துறையின் செயல்பாடு திருப்திகரமாக இல்லை என்று பொதுவாக மக்களால் கருதப்படுகிறது. குறிப்பாகத் தாங்கள் கொடுக்கும் புகார்கள் மீது தீவிர நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்று எண்ணுகிறார்கள். இந்தக் குறையை நீக்க என்ன வழி?

ப: ஒரு காவல் நிலையம் திருப்திகரமாக இயங்குகிறதா என்பதைப் புள்ளி விவரங்களைக் கொண்டு தற்போது கணித்து வருகிறோம். அதிலும் அந்தக் காவல் நிலையத்தில் பதிவாகியுள்ள புள்ளி விவரங்களைக் கொண்டே கணிக்கிறோம். போன வருடம் பத்து திருட்டுக்கள் பதிவாகியிருந்தன. இந்த வருடம் ஒன்பது வழக்குகள் தான் பதிவாகியிருக்கின்றன. எனவே இவ்வருடச் செயல்பாட்டில் முன்னேற்றம் இருக்கிறது என்றுதான் தற்போது கணக்கிடுகிறோம். உண்மையில் இந்தப் புள்ளி விவரம் காவல் துறை அல்லது காவல் நிலையத்தின் செயல்பாட்டுத் திறனுக்கு அளவு கோலாக முடியாது. குற்றங்களைப் பதிவு செய்ய மறுப்பதன் மூலம் சாதகமான நிலைமையை ஒரு காவல் நிலையத்தினர் உருவாக்கிக் கொள்ளலாம். காவல் நிலையத்தின் சிறந்த செயல்பாட்டுக்கு உண்மையான அளவுகோல் அந்த வட்டாரத்து மக்களின் கருத்துதான். அமெரிக்காவில் சில

> **இப்போதெல்லாம் மேலதிகாரிகள் திறமை அடிப்படையில் மட்டுமே நியமனமாவதில்லை. பலர் வேலை தெரியாமலே மேலிடத்துக்கு வந்துவிடுகிறார்கள்.**



மாநிலங்களில் காவல் துறை பற்றிப் பொது மக்களிடம் opinion poll நடத்துகிறார்கள். நம் நாட்டிலும் காவல் துறையின் செயல் பாட்டை மதிப்பிட இதைப் போன்ற கருத்து சேகரிப்பு முறைகளைக் கையாளலாம். ஆனாலும் இதிலும் அரசியல் கலப்பில் லாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நோக்கம் வெற்றி பெறாது. அந்தந்த வட்டாரக் காவல் நிலையங்கள் பற்றி அப்பகுதி வாழ் மக்களையே கருத்துக் கேட்க வேண்டும். அப்போதுதான் காவல்துறையினருக்கும் மக்களைத் திருப்தி செய்யும் வகையில் செயல்பட வேண்டும் என்ற எண்ணம் பிறக்கும். இப்போது அப்படியில்லாமல் ஒரு சிலரை — அதிகார பலம் படைத்த ஒரு சிலரை — மட்டுமே திருப்திப்படுத்தினால் போதும் என்று எண்ணிச் செயல்படுகிறார்கள்.


கே: கீழ்மட்டங்களில் காவல் துறை அலுவலர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? அவர்கள் எந்த மட்டம் வரை உயர முடியும்?

ப: கான்ஸ்டபிள் மட்டத்தில், அதற்கான பயிற்சி மையங்களில் தேர்ச்சி பெறுபவர்களும், வேலூரில் உள்ள Police Recruitment School இல் பயின்று தேர்பவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். சமீபத்தில், ஒவ்வொரு வருடமும் ஆயிரம் கான்ஸ்டபிள்களைக் காவல் துறை புதிதாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அரசு தீர்மானித்த பிறகு ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்சி மையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த உயர் மட்டமான சப்—இன்ஸ்பெக்டர் மட்டத்திற்குத் தேர்வு செய்யப்படுவோர் குறைந்தபட்சக் கல்வித் தகுதியாக பி. யூ. சி. பயின்றிருக்க வேண்டும். இவர்கள் நேரடித் தேர்வு செய்யப்படுகிறார்கள். கடந்த ஆறு வருடங்களாக சப்—இன்ஸ்பெக்டர்கள் தேர்வு செய்யப்படவேயில்லை என்பதால் இப்போது ஒட்டு மொத்தமாக 800 முதல் 900 பேர் வரை இதற்குத் தேர்ந்தெடுக்கப்படவிருக்கிறார்கள். டி. எஸ். பி. பதவிக்கு சர்வீஸ் கமிஷன் மூலம் நேரடித் தேர்வு செய்யப்பட்டுச் சென்னை அசோக் நகர் பயிற்சிக்கல்லூரியில் பயிற்சி பெறுகிறார்கள். எஸ். ஐ. மற்றும் டி. எஸ். பி. நிலைகளுக்கு நேரடித் தேர்வு முறையே அதிகமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதனால் கான்ஸ்டபிள் மட்டத்திலிருந்து ஒருவர் டி. எஸ். பி. யாக உயர்வது மிக அரிதாகிறது. கான்ஸ்டபிளாகப் பணிபுரிபவர் மிக நன்றாக வேலை செய்தால் சப்—இன்ஸ்பெக்டராகி, இன்ஸ்பெக்டராகி, டி. எஸ். பி. ஆகி, அந்தப் பதவியில் சில வருஷங்கள் வேலை செய்த பிறகு ஐ. பி. எஸ். நிலைக்கும் உயர்த்தப்பட வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இது ஏட்டில் இருக்கிறதேயொழிய நடைமுறையில் சாத்தியப்படுவதே இல்லை. நேரடித் தேர்வு போக வெகு சில இடங்களே பதவி உயர்வு பெற்று வரும் கான்ஸ்டபிள்களுக்கு ஒதுக்கப்படுகிறது. எவ்வளவு பாடுபட்டாலும் ஒரு கான்ஸ்டபிள் அதிகபட்சமாக இன்ஸ்பெக்டர் மட்டத்துக்குத்தான் உயர முடிகிறது.

கே: இதனால் ஒரு கான்ஸ்டபிளுக்கு மேன்மேலும் நன்றாக உழைத்து உயர் பதவி பெற முயற்சி செய்வதற்குப் போதிய அளவு ஊக்கம் இல்லாமல் போகும் அல்லவா?

ப: ஆமாம். இதுவும் காவல்துறையில் உள்ள ஒரு மிகப் பெரிய குறை. ஒருவர் தமது பணிக்காலம் முழுவதும் கான்ஸ்டபிளாகவே இருந்துதான் காலத்தை ஓட்ட வேண்டும் என்பதை விதியாக ஏற்றுக் கொள்கிறார். அதனால் சாராயக் கடையிலும் சோடாக் கடையிலும் மாமூல் வாங்குவது, உற்சாகமிழந்து பணியில் அக்கறை குறைவது போன்ற விளைவுகள் நேர்கின்றன. இது காவல் துறையைப் புரையோடிப் போகச் செய்கிறது. இதை நிவர்த்தி செய்வதற்கு, திறமை அடிப்படையில் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று முன்னேறும் வாய்ப்பு ஒவ்வொரு கான்ஸ்டபிளுக்கும் உறுதி

* முன்னணியில் இருக்கும் சட்டத் தொடர்பான விஞ்ஞான ஆய்வுக் கூடம்



செய்யப்பட வேண்டும். இதையும் தேசிய போலீஸ் கமிஷன் வலியுறுத்தியிருக்கிறது.

கே: போலீஸ் துறைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் அப்பணிக்குத் தேவையான இயல்புகளை உடையவர்கள்தானா என்று ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா?

ப: நேர்முகத் தேர்வின் போது இயல்புகள் (aptitude) ஆராயப்படுகின்றன. ஆனால் இந்தத் தேர்வுகள் குறுகிய காலத்திற்கே நீடிப்பதால் சரியான முடிவுகளை எடுப்பது கஷ்டம். பத்து நிமிடங்களில் ஒருவருடைய இயற்கை இயல்புகளைப் பரிசோதித்து அறிந்து விட முடியாது. இந்தத் தேர்வு முறையையும் திருத்தி அமைக்கப் போலீஸ் கமிஷன் பரிந்துரைத்திருக்கிறது.

கே: போலீஸ் கமிஷனின் பார்வையில் படாத குறையே காவல் துறையில் இருக்காதோ?

ப: கமிஷன் தனது ஆய்வை மேம்போக்காக அமைத்துக் கொள்ளாமல், மிக ஆழமாக எல்லா அடிப்படைப் பிரச்னைகளையும்



> காவல் துறையின் இன்றைய தேவை சிறந்த தலைமை, பணியில் சுதந்திரம், பொது மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு.

ஆராய்ந்துள்ளது.

கே: ஒரு போலீஸ்துறை ஊழியரிடம் இருக்க வேண்டிய இயல்புகள் என்ன?

ப: கடுமையான உழைப்பைத் தாங்கக் கூடிய ஆரோக்கியமான உடலமைப்பு; எளிதில் பொறுமை இழக்காமல், யோசித்துச் செயல்படும் நிதானம்; அதிகம் பேசாமல் பிறர் பேசுவதைக் கேட்டுக் கொள்ளும் குணம்; கிணற்றுத் தவளையாக இராமல் பொது அறிவைத் தேடிச் சென்று பெருக்கிக் கொள்ளும் திறமை; இறுதியில் நாணயம், வாய்மை—இவை உடன் பிறந்த குணங்களாக இருக்கவேண்டும். துப்பாக்கிபிடிக்கப்பயிற்சி தரலாம்; வாய்மையைப் பயிற்றுவிக்க முடியாது.

கே: இந்தக் கடைசி இயல்பு ஒருவரிடம் இருக்கிறதா என்று எப்படிக் கண்டுபிடிக்கிறீர்கள்?

ப: அது மிகவும் கஷ்டம்தான். அதனால் தான் சில நிமிஷ நேர்முகத் தேர்வு போதாது என்று சொல்கிறேன். தேர்வு முறையைத் திருத்த வேண்டும் என்றும் கூறுகிறேன்.

கே: போலீஸ் பயிற்சி முறைகளில் ஏதேனும் மாற்றங்கள் கொண்டு வருவதன் மூலம் இத்துறையின் செயல்பாட்டை மேம்படுத்த முடியுமா?

ப: இப்போதுள்ள பயிற்சி முறையின்படி ஒருவருக்குப் பயிற்சிக் கல்லூரியில் ஓராண்டு காலம் சட்டம், குற்றப் புலனாய்வு போன்ற பாடங்கள் போதிக்கப்படுவதோடு உடற் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதற்குப் பிறகு மற்றும் ஓர் ஆண்டுக் காலம் அவர்கள் மாவட்டங்களில் செயல்முறைப் பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். செயல்முறைப் பயிற்சிகளின்போதே அவர்கள் கல்லூரிப் பாடங்களுக்கும் நடைமுறைக்கும் இடையே ஓர் இடைவெளி இருப்பதை உணர்கின்றனர். ஏற்கெனவே பணியில் இருப்போரும் இந்த இடைவெளியைச் சுட்டிக்காட்டிக் கல்லூரியில் கற்ற பாடங்களை அப்படியே நடைமுறைக்கு ஏற்றுக் கொள்ள முடியாது என்று வலியுறுத்துகின்றனர். இவ்வாறு ஓர் இடைவெளி நிலவுவதால் பயிற்சியின் நோக்கமே தோற்றுவிடும். அதனால் சில வருடங்கள் செயல்முறை அனுபவம் பெற்ற பிறகு காவல் துறையினரை மீண்டும் கல்லூரிக்கு அனுப்ப வேண்டும். அப்போது அவர்கள் தாங்கள் கற்ற பாடங்களுக்கும் நடைமுறைக்கும் இடையேஉள்ள இடைவெளிகளை ஆராய்ந்து, கலந்துரையாடி ஓர் இடைப்பட்ட செயல் முறையை உருவாக்கிக் கொள்ளலாம். இதை **sandwich course** என்பார்கள். **IPS** உயர் மட்டத்தில் மட்டும் இப்போது இருக்கும் இந்த **sandwich course** — ஐ எல்லா மட்டங்களுக்கும் நான் சிபாரிசு செய்வேன்.

கே: போலீஸ் சீருடையை அணிந்த மறுகணமே ஒருவருக்கு அதிகார தோரணையும் ஒருவித அகம்பாவமும் வந்துவிடுகிறதே — இதற்கு என்ன காரணம்?

ப: இந்தத் தோரணையை, உயர்வு மனப்பான்மையைக் கீழ்மட்டங்களில்தான் அதிகமாகக் காண்பீர்கள்.

கே: உண்மைதான். ஆனால் அவர்கள் தானே சராசரி மனிதனுடன் அன்றாடம் உறவாடுகிறார்கள்?

ப: ஆமாம். கீழ்மட்டத்தில் இந்த அதிகாரத் தோரணைக்குக் காரணம் காவல் துறை ஒரு தீவிரக் கட்டுப்பாட்டில் இயங்குவதுதான். ஒவ்வோர் ஊழியரும் யோசனையோ தயக்கமோ இன்றித் தனது மேலதிகாரியின் ஆணைகளைக் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும் என்பது விதி. இதனால் மேலிருந்து கீழ்நோக்கி வரவர அதிகாரம் குறைகிறது. கடைநிலையில் இருப்பவர் அதிகாரத்துக்குக் கட்டுப்படுபவராகிறாரேயொழிய அவருக்குத் தமது அதிகாரத்தைக் காட்ட இன்னொரு நிலை இல்லை. இதனால் பொது மக்களை அதட்டி அதிகாரம் செய்வதில் ஒரு வடிகால் தேடிக் கொள்கிறார். மேலதிகாரிகள் தங்களுக்குக் கீழ் பணிபுரிவோரைக் கலந்தாலோசித்து அவர்களின் அபிப்பிராயங்களைப் பெறும் வழக்கத்தைக் கையாள வேண்டும். தமது காரியத்தைச் சாதித்துக் கொள்ள உதவும் ஒரு கருவியாக மட்டுமே கீழே உள்ளவரைக் கருதாமல் நல்ல ஆலோசனைகளைத் தெரிவிக்கக் கூடிய ஓர் உபயோகமான சக ஊழியராக அவரை நடத்த வேண்டும். அப்போது கடைநிலை ஊழியருக்கும் தன்னம்பிக்கையும் சுயமரியாதையும் தோன்றும்; தங்கள் அதிகாரத்தைப் பிரயோகிக்க

சொக்கானி செயின் ஸ்டோர்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்

21 ஆம் நூற்றாண்டின் ஷாப்பிங் சந்தோஷத்தினை இன்றே உங்களுக்கு தருபவர்கள்

சூப்பர் மார்க்கெட்டுகள்

விதான்

172-A, லஸ் சர்ச் ரோடு
மயிலாப்பூர், சென்னை-600 004.

விதான் முற்றிலும் குளிர்வசதி செய்யப்பட்ட சூப்பர்மார்க்கெட். வெளிநாடுகளில் அமைந்துள்ள சூப்பர்மார்க்கெட் போன்ற அமைப்பில் இருப்பதோடு, நவீன அமெரிக்க முறைபடி நடத்தப்படும். வாடிக்கையாளர் களின் வசதிக்கென, தினசரி வீட்டு உபயோகத் திற்கு தேவையான மளிகை சாமான்கள், ஒப்பனை பொருட்கள், அழகு சாதனங்கள், தின்பண்டங்கள், மின்சார சாதனங்கள், துணிவகைகள், ஆடைகள், சேலைகள், பிளாஸ்டிக் சாமான்கள், பொம்மைகள் என இன்னோரன்ன அனைத்துப் பொருட்களும் சிறந்த முறையில் தனித்தனியாக வைக்கப்படும். 21ம் நூற்றுண்டின் இணையற்ற ஷாப்பிங் சந்தோஷத்தினை உங்களுக்கென இன்றே நாங்கள் கொண்டு வந்துள்ளோம்.



ஜூலை 14 முதல் ஆரம்பம்

என்றும் சிறந்த நுகர்வோர் இயக்கம்

adinfix

வேறு வடிகால்களைத் தேட மாட்டார்கள். இப்போது மேலதிகாரிகள் அவ்வாறு செய்யாமல் இருக்கக் காரணம், நட்புறவோடு பழகினால் சகஜபாவம் ஏற்பட்டு, கீழ்நிலைப் பணியாளர்கள் தங்களுக்கு அடங்காமல் போய்விடுவார்களோ என்ற பயம்தான். இந்தப் பயம் எழாமல் இருக்க வேண்டுமானால் மேலதிகாரி போதிய திறமையுடன் நேர்மையும் படைத்தவராக இருக்க வேண்டும். ஆனால் இப்போதெல்லாம் மேலதிகாரிகள் திறமை அடிப்படையில் மட்டுமே நியமனமாவதில்லை. பலர் வேலை தெரியாமலே மேலிடத்துக்கு வந்து விடுகிறார்கள். சிலர் நேர்மையாகவும் இருப்பதில்லை. இதனால் கீழ் மட்டத்தினருடன் சகஜமாகப் பழகினால் தங்கள் குட்டு வெளிப்பட்டுவிடும் என்று இவர்கள் பயப்படுகிறார்கள்.

கே: போலீஸ் வன்முறை சமீப காலமாக மக்கள் கவனத்தை அதிகம் கவர்ந்து வருகிறதே?

ப: ஓரளவு பலவந்தப்படுத்துதல் இல்லாமல் காவல்துறை செயல்படவே முடியாது. தற்காப்பு இல்லாத ஓர் எளிய நபர் மீது வன்முறையைப் பிரயோகிப்பதைத்தான் பொது மக்கள் வெறுக்கிறார்கள். திருடனையோ கொள்ளைக்காரனையோ காவல் துறையினர் அடித்தால் அதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடிகிறது; அது அவர்களுக்கு ஒருவிதத் திருப்தியையும் அளிக்கிறது. ஒரு சாதாரண மனிதனை அலட்சியத்துடன் நடத்துவது தொடங்கி, சந்தேகத்துக்குரிய நபரை விசாரணையின் போது சித்திரவதைக்குள்ளாக்கி மிரட்டுவது வரை எல்லாமே வெறுக்கத்தக்க, கண்டிக்கத்தக்க அதிகார துஷ்பிரயோகங்கள்தான். பல அதிகாரிகள் இம்முறைகளைக் கையாள்கிறார்கள். கைது செய்யப்பட்டவரைப் பொறுமையாக, மேன்மேலும் கேள்விகளால் துளைத்தெடுத்து உண்மையை வரவழைப்பதற்கு ஈடான வேறு வழிமுறை கிடையாது. இதுவும் ஒரு வகை பலவந்தப்படுத்துதல்தான். ஆனால் இது நியாயமான முறை. நடைமுறையில் என்ன ஆகிறது? காவல் நிலையத்தில் ஒருவரைச் சாதாரண முறையில் விசாரித்துக் கொண்டிருக்கும் போதே அரசியல் செல்வாக்குப் படைத்தவர்கள் நிலைய வாசலில் கூட்டம் சேர்த்து, அவனைக் காவல் துறை சித்திரவதை செய்வதாகக் குரல் எழுப்பி ரகளை செய்கிறார்கள். இதுவும் கண்டனத்துக்குரியதே.

வன்முறையில் ஈடுபடும் ஒரு பெருங்கூட்டத்தைச் சமாளிக்க ஓர் அதிகாரி தீவிரமான முறைகளைக் கையாளலாம் என்று சட்டமே அனுமதிக்கிறது.

கே: போலீஸ் விசாரணையின் போது குற்றப் புலனாய்வுத் துறையின் உதவியைப் பெறுவதன் மூலம் விசாரணைகளை எளிதாக்கிக் கொள்ள முடியாதா?

ப: தடையங்கள் கிடைத்தால்தானே புலனாய்வுத் துறையால் உதவ முடியும்? நூற்றுக்கு 85 சதவிகித வழக்குகளில் தடையங்களே கிடைப்பதில்லை. எனவே பொறுமையாக, திரும்பத் திரும்பக் கேள்வி கேட்பதுதான் ஒரே சிறந்த வழி.

கே: சட்டத் தொடர்பான விஞ்ஞானக் கூடங்கள் இங்கு சிறப்பாக இயங்குகின்றனவா?

ப: இந்தியாவிலேயே தலைசிறந்த (ஃபொரன்ஸிக்) சட்டத் தொடர்பான விஞ்ஞான ஆய்வுக் கூடம் தமிழ்நாட்டினுடையதுதான். இங்குதான் விரல் ரேகைகளை முதன்முதலில் கம்ப்யூடரில் பதிவு செய்தார்கள். அதற்குப் பிறகுதான் எல்லா நிலையங்களும் விரல் ரேகைகளைக் கம்ப்யூட்டரில் பதிவு செய்து கொள்ள ஆரம்பித்தன. 1971—இல் மாநில அளவில் ஒரு போலீஸ் கமிஷன் நியமிக்கப்பட்டது. இக்கமிஷனின் முயற்சியால் இன்று நமது சென்னை ஃபொரன்ஸிக் ஆய்வுக் கூடம் நிறைய முன்னேறியிருக்கிறது.

கே: காவல் நிலையங்களில் லாக் அப்பில் வைக்கப்படுவோர் மிக இழிவாக நடத்தப்படுகின்றனர். குறிப்பாகப் பெண்களுக்குப் போதுமான பாதுகாப்பு கிடையாது. அவர்களை மானபங்கம் செய்வது, கற்பழிப்பது போன்ற அநியாயங்கள் நடக்கின்றன. இவற்றைத் தடுக்க வழிகள் இல்லையா?

ப: இருக்கின்றன. சாட்சிகள் கூடப் பெண்களாக இருப்பின் அவர்களை நிலையத்துக்கு அழைத்து விசாரிக்கக் கூடாது; வீட்டிலேயே விசாரிக்க வேண்டும் என்று சட்டமே இருக்கிறது. ஆனால் பல பெண்களுக்கு இது தெரியாது. காவல் நிலையத்தில் லாக் அப்பில் இருக்கும் பெண்களிடம் இழிவாக நடந்து கொள்வது இத்துறைக்கே அவமானகரமான விஷயம். வி. ஆர். கிருஷ்ணய்யர் தலைமையில் ஒரு கமிஷன் நிறுவப்பட்டு இந்தப் பிரச்னையை ஆராய்ந்தது. பெண்களை இரவில் கைது செய்வதோ இரவு நேரத்தில் காவல் நிலையத்தில் வைத்திருப்பதோ கூடாது என்று இந்தக் கமிஷனின் அறிக்கை கூறியிருக்கிறது. இந்தக் கொள்கையை ஆந்திர அரசு பின்பற்றுகிறது. முழுக்க முழுக்கப் பெண்களே இயக்கும் காவல் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் கமிஷன் கூறியுள்ளது. ஆனால். இதற்கெல்லாம் மேலாக, காவல் நிலையங்களில் இது போன்ற தவறுகள் நேர்ந்தால், உடனடியாக ஒரு நீதிபதி தலைமையில் விசாரணை நடத்துவது என்ற விதியைக் கொண்டு வர வேண்டும். இப்போதைய நிலைமையில் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தால்தான் விசாரணைக் கமிஷன் தோற்றுவிக்கப்படும். அரசாங்க உத்தரவுக்குக் காத்திராமல் குற்றச்சாட்டு பிறந்த உடனே விசாரணைக் கமிஷனும் தோன்றும் என்ற விதிமுறை ஏற்பட்டால் இப்பிரச்னைக்குத் தீர்வு காணப்படும். தேசிய போலீஸ் கமிஷனின் சிபாரிசுதான் இதுவும்.




சங்கீத கலாநிதி டாக்டர் செம்மங்குடி ஸ்ரீனிவாச அய்யரின் பௌத்திர னும் ஸ்ரீ சுவாமிநாதனின் குமாரனுமான சிரஞ்சீவி வைத்தியநாதனுக் கும் (ஸ்ரீ ராமன்) பாங்க் ஆஃப் இந்தியா சீப் மானேஜர் ஸ்ரீ ஏ.எஸ். பலராமனின் குமாரத்தி சௌபாக்கியவதி ஜானகிக்கும் (ஷீலா) சமீ பத்தில் சென்னையில் விவாஹம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



GM-37/87. Tm



> ஓர் அதிகாரி மசியா விட்டால் உடனே அவருக்கு அடுத்த மேலதிகாரியை அணுகிக் காரியத்தைச் சாதித்துக் கொள்கிறார்கள் அரசியல்வாதிகள்.

கே: சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய ஒருவரே மிகக் கீழ்த்தரமாக நடந்து கொள்வது — தமது கண்காணிப்பில் உள்ள தற்காப்பு அற்ற ஒருவரை — கற்பழிப்பது என்பது படுபாதகமான செயல் அல்லவா?

ப: பாதகமான செயல்தான். ஆனால் ஒரு சராசரி போலீஸ்காரர் நாளொன்றுக்குப் பதினெட்டு மணி நேரம் வேலை செய்கிறார். ஓய்வு, கேளிக்கை, விடுமுறை, குடும்ப வாழ்க்கை என்பது மற்றவர்களுக்கு இருப்பதைப் போல் இவருக்குச் சராசரி விகிதத்தில் இருப்பதில்லை. அதனால் அவர் தவறு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம். இதைப் புரிந்து கொண்டு அத்தகைய சந்தர்ப்பங்களுக்கு இடமளிக்காமல் அவரது பணிக் காலத்தையும் செயல் முறைகளையும் மாற்றி அமைப்பதுதான் புத்திசாலித்தனம்.

கே: காவல் துறையினருக்குப் போதுமான அளவு ஊதியம் அளிக்கப்பட்டால் அவர்களுக்கு லஞ்சம் வாங்க வேண்டிய அவசியம் இல்லாமல் போகுமே?

ப: இப்போது அளிக்கப்படும் ஊதியங்கள் முன்னெப்போதையும்விட அதிகமானவை, போதுமானவை. காவல்துறையின் இன்றையத் தேவை, சிறந்த தலைமை, பணியில் சுதந்திரம், பொது மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு ஆகியவைதான்.

கே: ஆயுதங்களைக் கையாள்வதற்கு முன்பு ஒரு காவல்துறை அதிகாரி எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டும்?

ப: வலியுறுத்திக் கூறுவது, லத்திப் பிரயோகம், கண்ணீர்ப் புகை பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் — இந்த வரிசையில்தான் ஒரு காவல் துறைப் பணியாளர் இயங்க வேண்டும். அதை அவர் மந்திரம் போல ஒப்பிப்பார். ஆனால் நடைமுறையில் கையாள்கிறாரா என்பதுதான் கேள்வி. மேலும் சட்டத்தின் தேவையோடு சந்தர்ப்பத்தின் தேவையையும் உணர்ந்துதான் ஓர் அதிகாரி முடிவெடுக்க வேண்டும். சில சமயம் சட்டத்தை மீறுபவர்களைக் கண்டு கொள்ளாமல் இருப்பது கூடப் புத்திசாலித்தனமாக இருக்கும்! உதாரணமாகத் தடை உத்தரவை மீறி ஒரு கூட்டம் கூடினால் — அது அமைதியாகக் கலைந்துவிட வாய்ப்பிருந்தால் — அதிகாரி அடிதடி பிரயோகத்தில் இறங்கி நிலைமையை மோசமாக்குவதை விடக் கூட்டத்தை நடக்க அனுமதித்துவிட்டு, பிற்பாடு சட்டத்தை மீறியதற்காகச் சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடுக்கலாம்.

கே: எத்தனை சதவிகிதக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன?

ப: பதிவாகும் குற்றங்கள் ஐம்பது சதவிகிதத்தவை காவல் துறையால் வெற்றிகரமாகக் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆனால் இந்தியாவில் மட்டுமின்றி உலகெங்கிலுமே பதிவாகாமலே போகும் குற்றங்கள் மிக அதிகம்.

கே: ஐம்பது சதவிகிதக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பது ஒரு கேவலமான நிலை இல்லையா?

ப: மிக அதிகமான அளவு குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்த்து, அதை வலியுறுத்தினால் காவல் நிலையங்கள் குற்றங்களைப் பதிவு செய்து கொள்ளவே மறுத்துவிடுகிற அபாயம் தோன்றும். அதனால்தான் புள்ளி விவரங்களைக் கொண்டு ஒரு நிலையத்தின் செயல்பாட்டுத் திறனைக் கணிக்காமல், பொதுமக்கள் அபிப்பிராயத்தின் அடிப்படையில் கணிக்க வேண்டும் என்று போலீஸ் கமிஷன் வலியுறுத்தியிருக்கிறது.

கே: ஒரு சாமானியன் காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்து, அப்புகாரின் பேரில் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லையென்பதால் மேலதிகாரிகளிடமோ அரசியல் செல்வாக்கு உள்ளவர்களிடமோ முறையிடுகிறான். உடனே சம்பந்தப்பட்ட காவல் நிலையம் உஷாராவதோடு மேலிடத்தில் புகார் செய்ததற்காக அந்தச் சாமானியனை வாட்டி எடுக்கிறது. இந்த முறைகேட்டைத் தவிர்க்க என்ன வழி?

ப: இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் சாமானியரால் அணுகப்படும் மேலதிகாரி, சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தைத் துரிதமாக இயங்கச் செய்வதோடு புகார் செய்தவருக்கு எவ்விதத் தீங்கும் இழைக்கப்படாமல் இருக்

கிறதா என்றும் ஒரு கண் பார்த்துக் கொள்ள வேண்டும். உண்மையான அக்கறையுள்ள மேலதிகாரிகள் இப்படித்தான் செய்வார்கள். அந்தச் சாமானியனுக்கு அநீதி இழைக்கப்படுவதைத் தவிர்க்கவும் இதுதான் வழி: ஆனால் இத்தகைய மேலதிகாரிகள் மிகக் குறைவு. கீழ்மட்டத்தினருக்கு இது நன்றாகத் தெரிந்திருப்பதால் அவர்கள் பயப்படுவதில்லை. புகார் செய்தவரைப் போட்டு வதைக்கிறார்கள்.

கே: பொது மக்களின் நல்லெண்ணத்தைப் போலீஸ் துறை பெற வேண்டுமானால் வழி என்ன?

ப: பெரும்பாலான போலீஸ் கேஸ்கள் மக்கள் திருட்டுக் கொடுத்துவிட்டுத் தவிப்பதுதான். எனவே இது விஷயத்தில் ஒரு சிறிய மாற்றம் செய்தால் மக்களிடம் போலீஸ் துறையின் மதிப்பு பெருகும். அதாவது குற்றம் பதிவு செய்வது தொடங்கி, களவு போன பொருள் பத்திரமாக அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்படும் வரை காவல் துறையின் பொறுப்பு நீடிக்க வேண்டும். நீதிமன்றத்தில் வழக்கு முடிந்ததும் களவு போன பொருளைத் திரும்பப் பெறுவது நற்போதும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. களவு போன பொருள் உரிமையாளரிடம் திருப்பித் தரப்பட்டால்தான் வழக்கை மூடலாம் என்ற விதி ஏற்படுத்தப்பட்டுவிட்டால் மக்களிடையே மனத்திருப்தி ஏற்படும்.

பயிற்சிக் கல்லூரிப் பாடங்களுக்கும் நடைமுறைக்கும் இடையே ஓர் இடைவெளி நிலவுவதால் பயிற்சியின் நோக்கம் வெற்றி பெறுவதில்லை.

கே: காவல் துறையில் இன்று இருப்பதாகச் சொல்லப்படும் அரசியல் ஆதிக்கம் எவ்வளவு நிஜமானது? உங்கள் பணிக்காலத்தில் அத்தகைய ஆதிக்கத்தை வெற்றிகரமாக எதிர்கொண்ட அனுபவம் உண்டா?

ப: அரசியல் ஆதிக்கம் இருப்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு, வாய்மையுள்ள அதிகாரிகள் அதற்குப் பணிவதில்லை என்பதும் உண்மை. என் அனுபவமும், எனக்குத் தெரிந்த பல அதிகாரிகளின் அனுபவமும், அரசியல் ஆதிக்கத்தைப் பொருட்படுத்தாமல் கடமையாற்ற முடியும் என்பதை வலியுறுத்துகின்றன. ஆனால் ஓர் அதிகாரி மசியாவிட்டால் உடனே அவருக்கு அடுத்த மேலதிகாரியை அணுகிக் காரியத்தைச் சாதித்துக் கொள்கிறார்கள் அரசியல்வாதிகள். எனவே போலீஸ் துறை முழுவதுமே இத்தகைய ஆதிக்கத்தை அணுக விடாமல் ஒரு கவசம் அணிவது முக்கியம். இது சாத்தியமாக வேண்டுமானால் காவல்துறை, அரசாங்கக் கண்காணிப்பில் இயங்காமல் சுதந்திரமாக இயங்க வேண்டும். நான் முன்னர் சொன்னது போல் ஸ்டேட் செக்யூரிடி கமிஷன் என்ற அமைப்பு உருவாகி அதன் கட்டுப்பாட்டிற்கு இத்துறை மாற்றப்பட வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயம். எல்லாத் தலையீட்டையுமே வெறுத்து ஒதுக்குவது என்பதை ஒரு விதியாகக் கொள்ளக் கூடாது. அரசியல் முறையீடு, தலையீடு, குறுக்கீடு என்று மூன்று வகைகளாக அதைப் பிரிக்கலாம். முறையீடு செய்ய யாருக்குமே உரிமையுண்டு. அதைப் பொறுமையாகக் கேட்டுக் கொள்வது போலீஸின் கடமை. அடுத்ததாக வருவது தலையீடு. இதைச் செய்வதற்குச் சிலருக்கு மட்டுமே உரிமை உண்டு — அதுவும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு. தனது மேற்பார்வையிலுள்ள பகுதியில் நடந்த குற்றம் ஏதேனும் இருந்தால், அப்பகுதி அரசியல்வாதி அதைப்



பற்றிக் காவல் துறையிடம் அவ்வப்போது தகவல் கேட்டுப் பெறுவதைத் தவறு என்று சொல்ல முடியாது. இதையும் காவல் துறை அனுமதித்து ஏற்க வேண்டும். இறுதியாக வருவதுதான் குறுக்கீடு. இதைச் செய்ய யாருக்கும் உரிமை கிடையாது. காவல் துறையினருக்கு இதை மீறும் அதிகாரம் முழுமையாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில், சிலர் எல்லாவற்றையும் குறுக்கீடு என்று ஒதுக்குகின்றனர்; வேறு பலர் எல்லாவற்றையுமே முறையீடு என்று கருதி ஏற்றுக் கொண்டு விடுகின்றனர்!

கே: காவல் துறையை மேம்படுத்த நீங்கள் கூறும் யோசனைகள் என்ன?

ப: தேசிய போலீஸ் கமிஷனின் சிபாரிசுகளை அதிவேகமாக ஏற்று அதன்படி மாற்றங்களைக் கொண்டு வந்தாலே போதும் காவல் துறை கணிசமாகச் சீரடைந்து விடும்.

பேட்டி: **எஸ். ஆர்.**

படங்கள்: **கே. வி. ஆனந்த்**

எம்.ஜி.ஆர் ஆட்சியில் தங்களைக் கவர்ந்த அம்சம் எது?

* எம். ரமேஷ்குமார், போடிநாயக்கனூர்.

? எம்.ஜி.ஆர். ஆட்சியில் தங்களைக் கவர்ந்த ஓர் அம்சம் என்ன?

! எம்.ஜி. ஆரின் அளவிட முடியாத மனிதாபிமானம், சாமானியரிடம் அவருக்குள்ள அன்பும் பரிவும்தான் சமுதாய நலத் திட்டங்களை ஏராள அளவில் உருவாக்குகின்றன. சமீபத்தில் போக்குவரத்துத் துறையினருக்குப் பென்ஷன் அறிவித்துள்ளார். ஆனால் சிக்கல் என்னவென்றால், இவையெல்லாம் மக்களின் வரிப் பணத்திலிருந்துதான் தரப்படுகிறது என்பதும் எனவே விலை உயர்வு, வரி உயர்வு அல்லது கட்டண உயர்வு மூலம் மக்களேதான் இவற்றைத் தாங்க வேண்டும் என்பதும் மறக்கப்படுகிறது. மக்களின் பொருளாதாரத்தை மெய்யான முறையில் மேம்படுத்தக் கூடியது, லாபகரமான புதிய தொழிலகங்களும் புதிய வேலை வாய்ப்புக்களும்தான்.

* உ. வேங்கடேசன்,
வைத்தீஸ்வரன்கோயில்

?. உலகப் புகழ் பெற்ற பறவை இயல் நிபுணர் டாக்டர் சலீம் அலி குறித்து?

! நமது வாழ்க்கையில் பறவைகளுக்கும் ஒரு முக்கிய இடம் உண்டு என்பதை உணர்த்தியவர். பள்ளிக்கூடத்தில் கணக்குப் பாடம் பிடிக்காததால் தவித்த அவர், ஒரு மாறுதலுக்காகப் பறவைகளை வேட்டை ஆட ஆரம்பித்தார். சீக்கிரமே பறவை வேட்டை, பறவைகள்பால் வேட்கையாக மாறியது. அவற்றின் சிறந்த நண்பரானார். அவர் சுட்டுத் தள்ளிய ஒரு பறவை எதிர்பாராதவிதமாக ஓர் அபூர்வ இனத்தைச் சேர்ந்ததாக அமைந்தது. அதனை ஒரு மியூஸியத்துக்குப் போனபோது உணர்ந்தார். அன்று முதல் தமது தொண்ணூறாவது வயது வரை பறவைகளுக்காகவே வாழ்ந்தார். நம் நாட்டுப் பறவை இனங்கள் பல அடியோடு அழிந்துவிடாமல் காப்பாற்றப்பட்டிருப்பதற்கு சலீம் அலியே காரணம். கேரளாவின் அமைதிப் பள்ளத்தாக்கு ஒரு மின் நிலையத் திட்டம் காரணமாக அழிந்துவிடாமல் காப்பாற்றித் தந்த சலீம் அலி, பறவைகள் பற்றிய பல ரசமான நூல்களின் ஆசிரியர்.

* எம். இதயகீதா, நாட்டரசன்கோட்டை.

? ரேடார் சாதனங்களுக்கெல்லாம் டிமிக்கி கொடுத்துவிட்டு ஒரு சாதாரண குட்டி விமானத்தை மாஸ்கோவின் மையத்தில் இறக்கிய மேற்கு ஜெர்மானிய இளைஞர் பற்றி....?

! ரஷ்யாவின் பாதுகாப்புத் துறையில் பலருடைய தலைகள் உருளக் காரணமான அந்த இளைஞர் பலே கில்லாடிதான், சந்தேகமில்லை. அது சரி, தங்கள் காலில் எலாஸ்டிக் கயிறுகளைக் கட்டிக் கொண்டு பாரிஸ் நகரின் ஐஃபெல் கோபுரத்தின் உச்சியிலிருந்து குதித்த இளைஞர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? பூமியை மோத வருவது போல் விரைந்து வந்துவிட்டு, எலாஸ்டிக் கயிற்றால் மீண்டும் உயரே இழுக்கப்பட்டு மேலே போய்த் தொத்திக் கொண்டார்கள்! கரணம் தப்பினால் மண்டை சிதறு தேங்காயாகியிருக்கும்! இவர்களின் துணிச்சல் மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் விமானத்தை இறக்கியவரின் தைரியத்துக்கு நிகரானது தானே!

* சி. சண்முகம், சீர்காழி

? மாணவ மாணவிகள் பயன்படுத்தும் நோட்டுப் புத்தகங்களின் மேலட்டையில் நடிக நடிகையரின் படங்களைப் பிரசுரிக்கிறார்களே?

! வருங்கால எம்.எல்.ஏ., எம்.பி.க்களின் படங்களைப் பார்த்து, மாணவர்கள் ஊக்கம் பெறலாம் என்ற நல்ல நோக்கில் இருக்கும்!

* என். செல்வராஜ், கரூர்

? பாக்யராஜின் 'எங்க சின்ன ராசா' எப்படி சார்?



* பறவைகளின் நண்பன்.



* ஏ.ஜே.பி.யின் கைவிரிப்பு

நீங்கள் கேட்டவை — தராசு

! தமது ஆரம்ப காலப் படங்களின் மூலம் ஒரு தனித் தன்மையை உருவாக்கிக் காட்டியவர் இப்போது அந்தத் தனியிடத்தை இழந்து நிற்கிறார். அன்று நம்மைப் பெருமைப்பட வைத்தவர் இப்போது ஏமாற்றப் பெருமூச்சு எறியச் செய்கிறார்.

* 'கே. அமிர்தம், வேதாரண்யம்

? கிரிக்கெட் விவகாரத்தில் நீங்களும் பெர்னார்ட் ஷா போலத்தானே?

! இன்று அப்படித்தான்! ரிடையர் ஆனால் எப்படியோ?

* கே. கோபிநாத், கோவை

? "புரட்சித் தலைவர் ஆணையிட்டால் நானும் அமைச்சர் சௌந்தரராஜனும் மற்றும் கழகஅடலேறுகளும் ராமேஸ்வரத்திலிருந்து நீந்திச் சென்று இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவோம்!" — அமைச்சர் அருணாசலம். எனி கமெண்ட்ஸ்?

! இவர் அபத்தமாகப் பேசுவது ஒருபுறமிருக்க, முதல்வர் இப்படி ஒரு முட்டாள்தனமான ஆணையைப் பிறப்பிப்பார் என்று கூறும்போது எம்.ஜி.ஆருக்கே இழுக்கு சேர்க்கிறோம் என்பதையாவது யோசித்துப் பார்க்க வேண்டாமா?

* எஸ். மாணிக்கவாசகம், கோடிக்கரை

? 'எம்.ஜி.ஆர். இறந்துவிட்டால் நானும் இறந்து விடுவேன்' என்று கோவி. மணிசேகரன் கூறியிருக்கிறாரே?

! தமிழ் இலக்கிய உலகின் இருண்ட எதிர்காலத்தை நினைத்தால் ரொம்பத் துக்கமாக இருக்கிறது. எனவே இருவருமே நீடூழி காலம் வாழட்டும்!

* வி. சாயா ரவி, சென்னை—16 *

? பாரதிய ஜனதா கட்சி ஜனாதிபதி தேர்தலில் வோட்டுப் போடப்போவதில்லையாமே? ஏன்?

! கிருஷ்ணய்யருக்கு இடதுசாரி தத்துவங்களில் ஈடுபாடு இருப்பதால் அவரைக் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கிறார்கள் என்றும் கம்யூனிஸ்டுகள் விரித்த வலையில் மற்ற எதிர்க் கட்சிகள் விழுந்துவிட்டன என்றும் பாரதிய ஜனதா கருதுகிறது. வலது சாரி பாரதிய ஜனதா இப்படி எண்ணுவதில்வியப்பில்லைஎன்றாலும்இன்று நம் முன் உள்ள மிகப் பெரிய பிரச்னை வலது சாரியா, இடது சாரியா என்பதல்ல; நேர்மையா, ஊழலா என்பதுதான். நேர்மைக்கு வோட்டுப் போடுவதென்றால், ஒவ்வொரு எம்.எல்.ஏ., எம்.பி.யும் கிருஷ்ணய்யருக்குத்தான் போட வேண்டும். ஆனால் அது நடக்கவா போகிறது? அதுவும் எம்.எல்.ஏ., எம்.பி.க்களிடையே ஊழல் மலிந்திருக்கும் போது?

* இரா. மேகநாதன், கண்கொடுத்த வனிதம்

? நான் பயணம் செய்த ஒரு ரயில் வழியில் ஒரு சிறிய ஸ்டேஷனில் நின்றபோது, ஸ்டேஷனையொட்டி வழக்கமாகக் கள்ளச் சாராயம் விற்கும் ஒருவர், வேலி தாண்டி வந்து டிரைவருக்கு சப்ளை செய்தார். கார்டு இதைப் பார்த்தும் பாராதது போல் இருந்தார். ரயிலில் பயணம் செய்பவர்கள் கதி என்ன?

! அன்றில்லாவிட்டால் இன்னொரு நாள் அதோகதிதான்! ஸ்கூட்டர், கார் டிரைவர்கள் குடித்திருக்கிறார்களா என்று நவீனக் கருவியின் உதவியுடன் சென்னை நகரில் திடீர் சோதனை செய்ததுபோல், லாரி டிரைவர்கள், ரயில் டிரைவர்கள், விமான ஓட்டிகள் ஆகியோரிடத்திலும் அடிக்கடி திடீர் சோதனைகள் நடத்தப்பட வேண்டும்.

* எஸ். பிரியதர்சினி, மதுரை

? நள்ளிரவில் தொலைக்காட்சியில் திரைப் படங்கள் ஒளிபரப்பப்படுவது பற்றி....?

! கொர்ர்ர்..... கொர்ர்ர்..... ஆனால் என் குறட்டை ஒலியைச் சகித்துக் கொள்வதை விடக் கண்விழித்து டி.வி. சினிமாவைப் பார்த்துத் தொலைப்பது எவ்வளவோ மேல் என்பது என் மனைவியின் கருத்து!


* ரூ 15 பரிசு பெறுபவர்.
வி. சாயா ரவி,
579, எம்.கே.என். சாலை,
ஆலந்தூர், சென்னை—16.




* ஏமாற்றப் பெருமூச்சு!...



* எம். ஜி. ஆர். ஆணையிட்டால்...


டெல்லி 12 மாடிக் கட்டடத்தில் தீ விபத்து – செய்தி.
தீ ஒண்ணுமில்லே!.. நீங்க கலாட்டா பண்றமை வாயை மூடிக்கிட்டுப் போங்க!


மக்கள் எதிர்பார்க்கும் ஜனநாயகம்
நடைமுறை ஜனநாயகம்!
கேரள சட்ட சபையில் அடிதடி – செய்தி


எம்.ஜி.ஆர். நலமாக இருக்கிறார்!.. இது சத்தியம்!.. சத்தியம்! சத்தியம்!
நலமாக இருக்கின்றன... கோட்டையில் கோப்புகள்! இது சத்தியம்... சத்தியம்.. சத்தியம்!
தமிழ் மக்கள்



கல்கி

1987 ஜூலை 12
மலர் 45 இதழ் 50
பிரபவ ஆனி 28



மேன்மைமிகு எம். எல். ஏக்கள்; மாண்புமிகு மந்திரிகள்!

தில்லை காந்தி என்று தமது பெயரை மாற்றி வைத்துக் கொண்ட ஆதிமூலத்துக்குக் காந்தீயம் பற்றித் தெரியாதா, அல்லது ஜனநாயக மரபுகள்தான் புரியாதா? ஆளும் கட்சி எம். எல். ஏ. என்பதால் தமக்குக் கிரீடம் ஒன்றும் சூட்டப்படவில்லை என்றும் அரசு அதிகாரிகள் மீது ஆதிக்கம் செலுத்தத் தமக்கு அதிகாரமில்லை என்றும் அறியாதவரா அவர்? ஆனாலும் மின்வாரிய அதிகாரி ஜேம்ஸ், தம்மை உடனே வந்து பார்க்க வேண்டும் எனத் தமது உதவியாளர் மூலம் காந்தி உத்தரவு அனுப்பியது ஏன்? ஜேம்ஸ், தமக்கு வேலை இருக்கிறது என்றும் அப்புறம் சாவகாசமாக வந்து பார்ப்பதாகவும் பதில் கூறி அனுப்ப, எம். எல். ஏ. காந்தி சூடாகித் தாமே ஜேம்ஸை நேரில் சந்திக்கச் சென்றதுடன், ஜேம்ஸை இரண்டு மொத்து மொத்தியும் இருக்கிறார்! போதாக்குறைக்குச் செருப்பையும் கழற்றிக் காட்டியிருக்கிறார்!

ஏன் இப்படி நடந்து கொண்டார் என்றால், காந்தீயம், காந்தீயம் என்று கூறிக் கொண்டிருக்கும் நமக்கு, வீர உணர்ச்சியே இல்லாமல் போய்விடப் போகிறதே என்ற பெருநோக்கில்தான்! பண்டைக்கால மறத்தமிழனின் வீரத்தை, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆரின் திரைப்படங்கள் மூலம் புனர்வாழ்வு பெற்ற தீரத்தை, நாம் மீண்டும் இழந்துவிடாமல் இருக்க வேண்டுமானால் அதற்கு இப்படி ஏதாவது உரசல்களை ஏற்படுத்தியும் வெறியூட்டியும் கைகலந்தால்தானே உண்டு? இந்த வீரவளர்ச்சிப் பணியைப் புரிந்து கொள்ளாமல், எம். எல். ஏ. ஏதோ செய்யக்கூடாத பெருங்குற்றத்தைச் செய்து விட்டதுபோல் பத்திரிகைகள் புலம்புவதுதான் வேதனை!

ஏன், கேரள சட்டசபையில் அண்மையில் நடந்த ரகளையையே எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே ஆட்சியில் உள்ளவர்கள் கம்யூனிஸ்டுகளானாலும் ஜனநாயகத் தத்துவங்களை அறியாதவர்கள் அல்ல. "உன் கருத்துக்கு மாறுபட்ட கருத்தை நான் கொண்டிருந்தபோதிலும், உனது கருத்தை நீ வெளியிட உனக்குள்ள உரிமையை எனது தலையைக் கொடுத்தாவது காப்பேன்" என்பதுதான் ஜனநாயகத்தின் அடிப்படை; அங்கே குஸ்திச் சண்டைக்கோ, ஜூடோ — கராட்டேக்கோ இடமில்லை என்பதையெல்லாம் நன்றாக உணர்ந்தவர்கள்தான், கேரள கம்யூனிஸ்டு எம். எல். ஏக்கள். 'அப்படியானால் ஏன் ரசாபாசமாக நடந்து கொண்டார்கள்?' என்று கேட்பது நமது அறியாமைதானேயொழிய வேறில்லை. உண்மையில் நடந்தது என்ன? அமைச்சர் அணிந்திருந்த சட்டை மிகவும் நன்றாக இருந்தது. அதைத் தொட்டுப் பார்க்க எதிர்த் தரப்பு எம். எல். ஏ. ராகவனுக்கு ஆசையாக இருந்தது. தொட்டதும், 'அது பார்க்க அழகாக இருப்பது போல் உறுதியாகவும் இருக்கிறதா?' என்று அறிந்து கொள்ளும் ஆர்வம் எழுந்தது. அதனால் இழுத்துப் பார்த்தார்; கிழிக்கக் கூட முயன்றார்; முடியவில்லை. ஆகவே நல்ல துணிதான் என்ற முடிவுக்கு வந்தார். இதற்குள் ஆளும் கட்சி மார்க்ஸிஸ்டுகள் அவரைக் கீழே தள்ளி, புரட்டி எடுத்து, உதைகளையும் கொடுத்து விட்டார்கள். அமைச்சர் மேல் ராகவன் கைவைத்து விட்டாரே என்பதற்காகவா? இல்லவே இல்லை! பின் எதற்கு என்றால், ராகவன் கொஞ்ச நாட்களாகவே இடுப்பில் ஒரு பிடிப்பு இருப்பதாகக் கூறி வந்தார். அந்தப் பிடிப்பு இப்படி உருட்டி எடுத்து உதைத்ததில் உடனே நீங்கிவிட்டது! இப்போது ராகவன் ஆஸ்பத்திரியில் இருப்பது உதைபட்டதன் விளைவாக ஏற்பட்ட காயங்களைக் குணப்படுத்திக் கொள்ளத்தானே தவிர, இடுப்புப் பிடிப்புக்காக அல்ல! இந்த மனிதாபிமானத்தைப் புரிந்து கொள்ளாமல் பத்திரிகைகள் ஏதோ கேரள சட்டசபைக்கே இழுக்கும், ஜனநாயகத்துக்கே தலைகுனிவும் நேர்ந்து விட்டதுபோல் குதிக்கின்றன!

ஆந்திர மாநில அமைச்சர் அய்யண்ணா, கூட்டுறவுத் துறை அதிகாரி சிவராமைய்யாவைக் குண்டுக்கட்டாகக் கடத்திவரச் செய்தார். சில தவறுகள் நடந்திருப்பதாக அந்த அதிகாரி ஒப்புக் கொண்டு, எழுதித்தர வேண்டும் என்றார் அமைச்சர். அதிகாரி இதற்கு மறுத்த போது, அமைச்சர், அதிகாரியின் கன்னத்தில் பளார் என்று ஓர் அறை விட்டார்! அமைச்சர் அடித்தது அதிகார மமதையில் என்று நினைக்கிறீர்கள்? தப்பு, தப்பு! சிவராமைய்யா ரொம்ப நாட்களாகப் பல்வலி என்று துடித்துக் கொண்டிருந்தார். டாக்டரிடம் போய்ப் பல்லைப் பிடுங்கிக் கொள்ள அவருக்கு ஓர் அசட்டுப் பயம் வேறு! பார்த்தார் அமைச்சர்; விட்டார் அறை! பல் தெறித்து விழுந்தது! சிவராமைய்யா இப்போது கன்னம் வீங்கினாலும் பல்வலி நீங்கி மகிழ்ச்சியாக இருக்கிறார்!

நமது எம். எல். ஏக்கள், அமைச்சர்கள் ஆகியோரின் இத்தகைய பெருந்தன்மையான நோக்கங்களைப் புரிந்து கொள்ளாமல், அவர்களை ஜனநாயக மரபுகளை அறியாதவர்கள் என்றும், அதிகார போதை கொண்டவர்கள் என்றும் நாம் பழிப்பது எவ்வளவு பெரிய குற்றம்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

பூஜாரி கேட்கப்போகிறாரா என்ன?

வட்டமேஜை

* 'பூவே இளம் பூவே' 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' ஆகிய படங்களுக்கு ஜெயமன்மதன் விமர்சனம் படித்தேன். பிற பத்திரிகைகளிலிருந்து தனித்து நிற்கும் நடை; எளிமையான வெளியீட்டுத் திறன். காசை விரயடிக்காமல் இவர் விமரிசனத்தைப் படித்துவிட்டுப் படம் பார்க்கப் போவதே மேல்!

ஸ்ரீரங்கம். வி. சௌரிராஜன்.

* தாங்கள் ஏற்றிருக்கும் சமுதாயப் பணி பெருமளவிற்கு வெற்றி பெற்றிருக்கின்றது என்பதை மாவட்ட சீ—விசிட் கட்டுரைகள் மூலம் அறிந்து மகிழ்கிறேன்.

தஞ்சை. என். மஹாலக்ஷ்மி.

* ஆபத்தான வளைவுகள் மகா அறுவை. பன்னிரண்டு வாரங்கள் தேவையின்றி விழுங்கப்பட்டு விட்டன. அபத்தமான விளைவுகள்தான் ஏற்படுகிறது. (மூளை குழப்பத்தைத்தான் சொல்கிறேன்.)

புளியலம். கே. ரெங்கராஜன்.

* சாதாரணமாகத் தொடர் கதைகளையே படிக்காத நான், கல்கியில் வந்த 'ஆபத்தான வளைவுகளை'ப் படித்தேன். காரணம், கதை கொண்டு செல்லப்பட்ட நடையும், அதற்குத் தகுந்த மாதிரி வரையப்பட்ட படங்களும்தான். பாராட்டுக்கள்.

விருத்தாசலம். ஆர். கே. குருராஜ்.

* கல்கி 31.5.87 இதழில் ஸ்ரீரங்கம் சமய நூலகம் செயல்படவில்லை எனப் புகைப்படத்துடன் செய்தி வெளியிட்டிருந்தீர்கள். அதன் விளைவாகச் சமயநூலகம் தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கிறது. நன்றி.

ஸ்ரீரங்கம். வி. ராணிபத்மினி.

* பண்ருட்டிக்குக் கூடுதல் பொறுப்பைக் கொடுத்தது பற்றி மக்களிடம் இருந்து எதிர்ப்பு வந்ததா? என்று கே.ஏ. கிருஷ்ணசாமி கேட்பது சிரிப்பை வரவழைக்கிறது! மக்கள் எந்த விஷயத்துக்குத்தான், எதிர்ப்புத் தெரிவித்தார்கள்! அவர்கள் என்றைக்குமே அழகர் கோயில் மாடு மாதிரி தலையாட்டல் கேஸ் தான்!!!

சிவகெங்கை. ஆர். ஜெ. பாலன்.

* அட்டைப் படத்தில் முதல்வரும் மற்ற இரு அமைச்சர்களும் கோப்புகளைப் பார்க்காமல், கிரீன் ரூமிலேயே இருப்பது போன்ற ஒரு மறைமுகமான கருத்தையும் சேர்த்து வெளிப்படுத்தியுள்ளீர்களே! இந்தக் கிண்டல்தானே வேணும்கிறது!

சென்னை—11. திருமதி ஜி. ராணி குமார்.

* 'இந்த இடம் அமைய வேண்டும்' சிறுகதை படித்தேன். **To hell with your Ayilyam** என்ற அந்தக் கடைசி வரியில் பழமையைத் தகர்த்தெறிகிற, மூட நம்பிக்கைகளை வெறுக்கிற, இளைய சமுதாயத்தின் விவேகம் பிரதிபலிக்கிறது!

விருத்தாசலம். கெ. நாகராஜன்.

* சைலஜாவின் 'சித்ரா' என்னும் சிறுகதை மிக நன்றாக இருந்தது. நல்ல இயல்பான நடை, தெளிவான நீரோட்டம் போலச் சென்ற கதையின் தன்மை போன்றவை அற்புதம். மருதுவின் மாடர்ன் ஆர்ட் மிக அற்புதம்.

வெள்ளித் திருப்பூர். ஸ்ரீனிவாசன்.

* கடன் மேளாக்கள் பற்றிய தலையங்கம் படித்தேன். பொது மக்கள் கொடுக்கும் வரிப் பணத்தை இவ்வாறு விரயடிப்பதைக் கடுமையாகக் கண்டனம் செய்ய வேண்டும். சமீபத்தில் வேலூரில் கூடிய வங்கித் தொழிலாளர்களின் மகாநாடுகூட, காங்கிரஸ் கட்சியினரின் நன்மைக்காகத்தான் இந்தக் கடன் மேளாக்கள் நடத்தப்படுகின்றன என்று குறைகூறியிருக்கிறது. பொருளாதார நோக்கில் நடத்தப்பட வேண்டிய ஒரு காரியத்தை, அரசியல் கண்ணோட்டத்துடன் செய்யத் துவங்கி இப்பொழுது பிரச்னை பெரிதாக வளர்ந்துவிட்டது. சிந்தனையாளரும், பழுத்த அனுபவஸ்தருமான சி.எஸ். ஸின் யோசனையை பூஜாரி கேட்கப் போகிறாரா என்ன? சி.எஸ்.ஸுக்கும் தங்களுக்கும், 'நசுக்கப்பட்ட மக்களின் விரோதி' என்ற பட்டப் பெயர் கிடைப்பது தான் மிச்சம்!

வடலூர். ஆர். மார்க்கண்டன்.


* தலையங்கத்தில், எவ்வளவு கடனைத் திரும்ப வசூலித்தீர்கள்? என்று அரசு, வங்கி அதிகாரிகளைத் தட்டிக் கேட்பதே இல்லை என்று எழுதியிருப்பது மிகப் பெரிய தவறு. மாதாமாதம் 'மீட்டிங்' வைத்து எங்களை வறுத்து எடுத்து விடுகிறார்கள் அதிகாரிகள். கடன் வசூலுக்காகக் கிராமங்களில் எல்லாம் நாயாகவும் பேயாகவும் அலைகிறோம். ஆனால், 'எம்.ஜி. ஆர். கொடுத்தார், ராஜீவ் காந்தி கொடுத்தார். நீங்கள் ஏன் திருப்பிக் கேட்கிறீர்கள்' என்றும், 'இந்தக் கடனைத் திருப்பித் தர வேண்டாம்'னு மந்திரி பேசினாங்களே' என்றும் மக்கள் பதில் சொல்வது உண்மையே.

வேலூர். பி. ஆர். சீனிவாசன்.

* கல்கி 14.6.87 இதழில் கோவை மாவட்ட ஆட்சியாளரின் கடிதம் பிரசுரமாகியிருந்தது. உடுமலை வட்டம், திருமூர்த்தி மலை, அமணலிங்கேஸ்வரர் ஆலயம் பற்றி மாவட்ட ஆட்சியாளர் கூறியிருந்த பதிலைக் கண்டு, அதிர்ச்சி அடைந்தேன். அமணலிங்கேஸ்வரர் ஆலயம் சமணர் கோயில் என்பதை மயிலை சீனி. வேங்கடசாமி தமது 'சமணமும் தமிழும்' என்ற நூலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் கோவை கிழார் எழுதிய 'கொங்கு நாடும் சமணமும்' என்ற நூலிலும் மிக விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை—88. த. ஜீவா.


இதர எல்லா ஹேர் டைகளையும்
சேர்த்தாலும் அவற்றைவிட
ஏராளமான மக்கள் உபயோகிப்பது
கோத்ரெஜின் தானே - பரவும் ஹேர் டை
அவற்றிற்கான 3 சிறந்த காரணங்கள்
1 கோத்ரெஜின் தானே-பரவும் ஹேர்டை கேசத்திற்கு இயல்பான வண்ணத்தையும், தோற்றத்தையும் தருகிறது. இதிலே ஒரு உள்ளிணைந்த கண்டிஷனர் உள்ளது: இது கேசத்தை மென்மையோடும் படிமானத்தோடும் வைத்துக்கொள்ள உதவுகிறது. உண்மையிலேயே, நீங்களே சொன்னால் ஒழிய ஒருவரும் அறிந்துகொள்ள முடியாது.
2 இதர ஹேர் டைகளைப் போல் அல்லாமல், கோத்ரெஜின் தானே-பரவும் ஹேர்டை உபயோகிக்க எளிதானது, வசதியானது. ஆம், இது உங்கள் கேசத்தை ஷாம்பூ செய்வதுபோல் சுலபமானது.
3 கோத்ரெஜின் தானே-பரவும் ஹேர்டையின் தரத்தைப் பற்றி நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். காரணம், இது உங்கள் கேசத்தை பாதுகாக்கும் வண்ணம் விசேடமாகத் தயாரிக்கப்பட்டது. முழுமையான பாதுகாப்பு— இதுவே, கோத்ரெஜின் உறுதியளிப்பு.
கோத்ரெஜ் ® வழங்கும் தானே-பரவும் பெர்மனென்ட் ஹேர் டை.
Godrej
SELF-SPREADING PERMANENT HAIR DYE
Natural Black
Just shampoo it in
CLARION/B/GS/50/173 TML


கவிதாவிடம் வாங்கிய கடன்
கதை: இலக்குவன்
அன்று சம்பளம் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினாள், அனுசூயா –
அம்மா, இதை, மளிகை அரிசி, பால், காய்கறி எல்லாத்துக்கும் கொடுத்துக் கணக்கைத் தீர்த்துடு... இதை அப்பா கைச்செலவுக்குக் கொடு
படம்: சிஜெ...
மிஞ்சியது –
எண்பது ரூபாய்! பரவாயில்லை, சமாளிக்கலாம்!
திடீ ரென்று ஞாபகம் வந்தது –
போனமாசம் அப்பாவுக்கு உடம்புக்கு வந்தப்போ கவிதாவிடம் கடன் ஐம்பது ரூபாய் வாங்கினேனே!
அனு, உடனே சினேகிதி வீட்டுக்குச் சென்றாள். அங்கே கவிதா வின் மாமியார் –
வாம்மா, அனு! கவிதா ஒரு கல்யாணத்துக்காகக் காரைக்குடி போயிருக்கா. என்ன விஷயம்?
அனு நடந்ததைக் கூறி –
இந்த ஐம்பதை அவளிடம் சொல்லிக் கொடுத்து விடுங்கள்.


இரு தினங் கழித்துப் பிறகு —
BUS STOP
என்ன கவிதா, கல்யாணத்துக் கெல்லாம் போய்ட்டு வந்தாச்சா?.. பணம் கொடுத்துட்டேனே, மாமி சொன் னாங் களா?
ஆமாம், ஐம்பது ரூபாயை எடுத்துக் கொண்டு அலறியடித்து ஓடிவந்தாயாக்கும்? உன்னை யார் வீட்டுக்கு வரச் சொன்னது?
நீ என்ன சொல்றே?
என்னிடம் ஆபீஸிலே வாங்கின பணத்தை ஆபீஸிலேயே திருப்பித் தரலா மில்லே?!
ஏன்? இப்ப என்ன ஆச்சு?
'நம் வீட்டுச் செலவுக்கே பத் தலே, இதிலே கடன் வேற தந்தியா'ன்னு மாமியார் என்னைத் திட்டித் தீர்த்துட்டாங்க..
உனக்கு உபகாரம் பண்ணினதுக்கு நல்லா பழி வாங்கிட்டே! திருப்தி தானே!
அட ராமா!
சரி வா, பஸ் வந்துட் டுது!..



பர்ஸை எடுக்க ஹாண்ட் பாகில் கைவிட்டாள். என்னவோ குறைவது போல் தோன்றியது. இனம் புரியாத படபடப்புடன் விரல்களால் துழாவினாள். ஒரு மின்னல் போல் அது என்ன என்று அவளுக்குப் புரிய, அவள் உடம்பு அதிர்ந்து குலுங்கியது. ஒரு கணம் மூச்சே நின்று போய்விட்டது.

''என்னம்மா, என்ன ஆச்சு?'' கண்டக்டர் சில்லறைக்காக நீட்டிய கை அப்படியே நிற்கக் கேட்டான்.

''பர்ஸ்......'' என்று மூச்சுத் திணறலுக்கு இடையே சொன்னாள். உடம்பெங்கும் வியர்வை ஆறாக ஓடியது.

''பர்ஸ் எடுக்க மறந்துட்டியா? வீட்டில வச்சிருப்பே. எறங்கணுமா?''

''ம்.''

''உம்.''

பஸ் நின்றது.

இறங்கிக் கொண்டாள். வியர்வையில் ஈரமான உடம்பு குளிர ஆரம்பித்தது. ஹாண்ட்பாகைத் திறந்து தேடினாள். உள்ளே பர்ஸ் இருந்தது. டிபன் பாக்ஸ் இருந்தது. கர்சீப் இருந்தது.

மூச்சிரைக்கவிட்டுப்படியேறினாள். ஓசைப்படாமல் செருப்பைக் கழற்றி விட்டு உள்ளே போனாள்.

ஹாலில் ஹாண்ட்பாகை முன்னம் வைத்திருந்த மேஜை மேல் புத்தகங்கள் குவிந்து கிடந்தன. படபடவென்று தேடினாள்.

ஓரத்து அறையின் கதவு இலேசாக ஒருக்களித்திருந்தது. சிகரெட் மணம் வந்தது. மணிகண்டன் உள்ளே இருக்கிறான். இந்த வாரக் கடைசியில் அவன் விடுமுறை முடிகிறது. ராணுவத்தில் காப்டனாக இருக்கிறான்.

அவள் விரல்கள் கட்டுப்பாடின்றி நடுங்கின. புத்தகங்களில் தேடுவது மிகவும் சிரமமாக இருந்தது. எங்கே வைத்தேன் அதை. ஞாபகமில்லை. கைத்தவறுதலாய் ரவியின் புத்தகங்கள் எதிலாவது வைத்துவிட்டேனா? இந்தப் பெண் மீனா ஹாண்ட்பாகைத் திறந்து திறந்து பார்க்குமே. அது எங்கேயாவது எடுத்திருக்குமோ. முருகா......!

''என்னது திரும்பி வந்துட்டே?''

அடிபட்டதுபோல் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அறை வாசலில் கதவில் கை ஊன்றியபடி மணிகண்டன் நின்றிருந்தான். அவன் கண்கள் அவள் மேல் ஊன்றியிருந்தன.

''ஒண்ணுமில்லே. நான்....''

''என்ன தேடறே?'' அவன் குரல் இறுக்கமாக இருந்தது.

அவள் தன் கால்கள் நடுங்குவதை உணர்ந்தாள். ஏதாவது பதில் சொல்லியே ஆகவேண்டும்.... ஆனால் என்ன சொல்வதென்று தெரியவில்லை.

அவன் அவளை உற்றுப் பார்த்தான். ''என்னமோ ரொம்ப அவசரமா தேடற மாதிரி இருக்கு. என்னது?''

''அது...., வந்து....''

''ஏதாவது கடிதாசா?''

பளீரென்று நெற்றிப் பொட்டில் ஓர் ஒளி வெடித்தது போலத் தோன்றியது அவளுக்கு. ஒருகணம் அவன் விழிகளை அவள் விழிகள் வெட்டின. அவளுக்குப் புரிந்தது. அவன் எல்லாவற்றையும் அறிந்தாகிவிட்டது. கடிதத்தை அவன் பார்த்துவிட்டான்.

விழுந்து விடுவோம் என்று தோன்றியது அவளுக்கு.

''உள்ளே வா. உன் கூடக் கொஞ்சம் பேசணும்'' அவன் உள்ளே போனான்.

ஹாலிலிருந்து அறைவரை நடக்க அவளால் முடியவில்லை. உடம்பே அவள் பிடியிலிருந்து நழுவிப் போவதுபோல் இருந்தது. விழாமலிருக்கக் கதவை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

அவன் தன் வழக்கமான நாற்காலியில் காலை நீட்டி அமர்ந்து, ஜன்னலுக்கு வெளியே வெறித்துப் பார்த்தபடி இருந்தான். ஆனால் அவன் பார்வை தன்மேல் கூர்மையாகப் பதிந்திருப்பது போன்ற உணர்வுதான் அவளுக்கு இருந்தது.

சட்டென்று திரும்பி அவளைப் பார்த்தான். ''எத்தனை நாட்களா நடந்துட்டிருக்கு இது?''

என்னென்னவோ பதில்கள் அவளுக்குள் பொங்கின. ஆனால் மொழியே மறந்துவிட்டது போலிருந்தது.

''சொல்லுடி, யார் இவன்?''

தன் இதயத் துடிப்பைத் தவிர வேறெதையும் கேட்க முடியவில்லை அவளால்.

''யாருடி இந்த ராஜகோபால்?''

''இல்லை.... இல்லே.....'' என்று சம்பந்தமின்றி உளறியபடி அவள் விம்மினாள்.

மணிகண்டன் மிகுந்த சிரமப்பட்டுத் தன் ஆவேசத்தை விழுங்கிக் கொண்டான். முடிந்தவரை தாழ்ந்த குரலில், ''நான் இப்ப என்ன பண்ணணும்? டிவோர்ஸ் வேணுமா உனக்கு? இல்லே, தீர்த்துக் கட்டிடறதா தீர்மானிச்சிருக்கீங்களா?'' என்றான்.

அடிவயிற்றிலிருந்து பீறிட்டு ஒரு கேவலாய் வெடித்த அழுகையுடன், பிடித்துத் தள்ளப்பட்டவளைப்போல, அவள் ஓடி அவன் கால்களில் மடங்கிவிழுந்தாள். எல்லா உணர்வுகளையும் வெளிக் கொட்டுபவளைப் போல் பொங்கிப் பொங்கி அழுதாள்.

அவள் அழுகை ஒரு கணம் அவனை இளக

ஜெயமோகன்

வைத்தது. மறுநிமிடம் ஆவேசத்தை வரவழைத்துக் கொண்டவனாக அவன் அவளை நெட்டித் தள்ளிவிட்டு எழுந்தான். நாற்காலி கிரீச்சென்று பின்னால் நகர்ந்தது.

''ச்சீ. முப்பது வயசில், ரெண்டு பெத்ததுக்கு அப்புறம் உனக்குக் கள்ளக் காதல்... அல்ப ஜென்மம்... உன்னை... உன் கூட....''

எந்த வார்த்தையும் வெளிவராமல், சிவந்த முகத்துடன் நின்று, திக்கித் திணறித் துடித்தான். சட்டென்று கொடியிலிருந்து சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டான். செருப்பில் கால் நுழைத்து, லுங்கியை மடித்துக் கட்டியபடி அவளைப் பார்த்து, பதறிய குரலில் சொன்னான்.

''போயிடு, உன் காதலன் கூட. என் கொழந்தைகளை நான் பார்த்துக்கறேன். திரும்பி வர்றதுக்குள்ள பெட்டியைக் கட்டிட்டு அவன் கூடவே போயிடு.''

தடதடவென்று இறங்கி அவன் போன பின் அவள் வெறும் தரையில் குப்புறப் படுத்து விம்மி, குலுங்கி அழுதாள். வெகு நேரம் அழுது முடித்து விம்மல்கள் ஓய்ந்த பிறகு அவள் மனத்தில் பயங்கரமான சூன்ய உணர்வு குடியேறியது.

கதகதப்பான ஓர் உறவு முடிந்துவிட்டது போலவும் இனி ஒருபோதும் அவனது அன்பும் அணைப்பும் தனக்குக் கிடைக்கப் போவதில்லை என்றும் அவளுக்குத் தோன்றியது. ஒருவேளை அவன் இனி திரும்பி வரவே மாட்டானோ என்று தோன்றிய போது வயிறு சில்லிட்டது.

அந்தப் பீதியிலும் விரக்தியிலும் கூட ஓர் ஓரத்தில் ஒரு நம்பிக்கை மின்னியது அவளுக்கு. தான் தப்பு செய்யாத வரைக்கும் பயப்பட வேண்டியதில்லை என்று நினைத்தாள். அத்தனை அநியாயமாகத் தன்னைக் கடவுள் தண்டித்துவிட மாட்டார் என்று சொல்லிக் கொண்டாள். அதையே மீண்டும் மீண்டும் நினைத்து நம்பிக்கையைப் பெருக்கிக் கொள்ளப் பாடுபட்டாள். அவள் சொன்னால் அவன் புரிந்து கொள்வான். அவனை அத்தனை எளிதாக வெறுத்துவிட அவளால் முடியாது. பீதியும் விரக்தியும் நம்பிக்கையுமாய் அவள் மனம் அலைபாய்ந்தது.

மதியம் அவள் சாப்பிடவில்லை. அவன் வர மாட்டான் என்றுதான் நினைத்தாள். மாலையில் குழந்தைகள் திரும்பி வந்தன. மாலை சரியச் சரிய அவள் மனம் மீண்டும் கொந்தளிக்க ஆரம்பித்தது. வருவானா? முருகா! வராமலே இருந்து விட்டால்... யோசிக்கும்போதே 'பகீர்' என்றது. வாசலில் அசையும் ஒவ்வொரு நிழலும் நம்பிக்கை அளித்துப் பின் ஏமாற்றியது. இருள் கனக்கக் கனக்க, அவள் மனம் பீதியில் நிறைந்தது.

ஒன்பது மணிக்கு அவன் வந்தான்.





"ஆபீஸ் நேரத்தில் வெளியில் போய் சூதாடுறவங்களைத் தடுக்க எங்க ஆபீஸ் நிர்வாகம் ஒரு ஏற்பாடு செய்திருக்கு!"

"என்னங்க அது?"

"தனியறை ஒதுக்கி சீட்டுக்கட்டு வாங்கிப் போட்டிருக்கு!"

— மணியன் தர்மலிங்கம்

அந்தப் பழக்கமான காலடியோசை அவள் உடம்பைப் புல்லரிக்க வைத்தது. அவள் கைகளால் நெஞ்சை அழுத்தியபடி, 'முருகா!' என்றாள்.

அவளைக் கவனிக்காத மாதிரி அவன் நடந்து அறைக்குள் புக முயன்றான்.

"சாதம் போடவா?" என்றாள்.

"ச்சீ" என்று அவன் சீறினான்.

அவன் அறைக்குள் நுழைந்தபின் கதவைத் தடாலென்று மூடிக் கொண்டான்.

அவள் தரையில் அமர்ந்தாள். அவளை அறியாமலேயே அழுகை வந்தது. இருளில் தனிமையில் அழுதாள். அந்த ஓசையற்ற அழுகை—தேற்ற ஆளில்லாத, நிராதரவான அந்த அழுகை, அது அவளுக்கு விநோதமான ஒரு சுகத்தைக் கூட அளித்தது.

கதவைத் தட்டி அவனை எழுப்பி எல்லாவற்றையும் கூறி விடவா? தன்னால் முடியாது. அப்போதும் தன்னால் அழ மட்டும்தான் முடியும். இந்த எண்ணமே அவளுக்கு மூச்சுத் திணற வைத்தது. மெல்லத் தூங்கிப் போனாள் — தூக்கமல்ல, அரை மயக்கம்... காற்றின் ஒலியும் கடிகார டிக்டிக்கும் அவளுக்குக் கேட்டுக் கொண்டிருந்தன.

— கிரீச் என்று கதவு திறந்தது.

திடுக்கிட்டு எழுந்து அவள் நிதானிப்பதற்குள் மணிகண்டன் அவளைக் கடந்து சென்றிருந்தான். இரவு வெகு நேரமாகியிருக்கக் கூடும்.

பாத்ரூம் போய்விட்டு அவன் திரும்பி வந்தபோது அவள் அறை வாசலில் நின்றிருந்தாள்.

அவன் அவளை உற்றுப் பார்த்தான். அவன் முகம் இப்போது அத்தனை இறுக்கமாக இல்லை.

அவள் மூக்கு துடிக்க அழ ஆரம்பித்தாள்.

"வழியை விடு" என்றான்.

அவள் விலகினாள். அவன் அவளைக் கடந்து சென்று அறைக்குள் கட்டிலில் அமர்ந்து கொண்டான்.

"பானு" என்றான்.

அவன் குரலில் ஒரு மென்மை இருந்தது. அவள் மனம் மெல்ல அமைதி அடைந்தது.

"வா, இங்கே."

அவனருகே சென்றாள். அவன் காலடியில் அமர்ந்தாள். அவன் கால்களில் முகம் புதைக்க மனம் திமிறியது. ஆனால் அவனைத் தொட அவளுக்குத் துணிச்சல் வரவில்லை.

அவன் அவள் தலையில் கை வைத்தான். அவளது காதோர மயிர் இழைகளில் அவன் கைகள் மெல்லத் துழாவின. சுற்றி இறுக்கின.

அந்த ஸ்பரிசமும்—வலியும் அவளை அப்படியே நெகிழ வைத்தன. தன் முதுகின் மேலிருந்து ஒரு பெரிய பாரத்தை யாரோ இறக்கி வைத்தது போல் அத்தனை எளிதாக உணர்ந்தாள்.

"பானு..."

"ம்."

"யார் இந்த ராஜகோபால்."

அவள் தொண்டை அடைத்தது. "அவன்... எங்க ஆபீஸ்ல..."

"உன் கூட வேலை செய்யறவனா?"

"ம்."

"ரொம்பச் சின்னப் பையனா இருப்பான் போல இருக்கு. கடிதம் அத்தனை அசட்டுத்தனமா எழுதியிருக்கான். எத்தனை வயசிருக்கும் அவனுக்கு? ஒரு இருபத்தஞ்சு இருக்குமா?"

"ம்."

"அவனுக்கு ஏன் இப்படித் தோணிச்சு? நீ அவன் கூடக் கொஞ்சம் ஃப்ரீயா பழகுவியா?"

"இல்லை. சத்தியமாக இல்லை. எல்லார்கிட்டேயும் பேசற மாதிரிதான் பேசுவேன்."

"அவன் உன்கிட்டே கொஞ்சம் உரிமை எடுத்துப்பானா?"

"ம்."

"உரிமைன்னா... டிரஸ் பண்ணிட்டு வந்தால் பாராட்டாக ஏதாவது சொல்றது. அழகைப் பற்றி முகஸ்துதி செய்யறது..."

அவள் உதட்டைக் கடித்தாள். கண்கள் மறுபடியும் நிறைந்தன.

"பரவாயில்லை. இதெல்லாம் எந்தப் பொண்ணுக்கும் பிடிக்கிற விஷயம்தான். நீ சந்தோஷப்படறதை அவனுக்குக் குடுக்கிற அனுமதியா அவன் நெனச்சிருப்பான். உன்னை வளைச்சிட்டதாத் தப்பாக் கற்பனை பண்ணியிருப்பான்."

"என்னை மன்னிச்சிடுங்க. நான் தப்புப் பண்ணிட்டேன். என்னை என்ன வேணும்னாலும் செய்யுங்க."

"நான் இப்ப உன்னை விசாரணை பண்ணலை. இந்த விஷயத்தைக் கிளியராப் பேசிடறது நல்லது. இந்த லெட்டரை எப்பக் குடுத்தான்?"

"போன திங்கட்கிழமை."

"நேரில் குடுத்தானா?"

"இல்லை. மேஜை டிராயரில் கிடந்தது."

"படிச்சிட்டு நீ புகார் எதுவும் பண்ணலியா? பண்ணத் தோணலியா உனக்கு?"

"நான் அவனைக் கான்டீனுக்குக் கூட்டிட்டுப் போய் 'பர்சனலா' பேசினேன். இந்த மாதிரி எண்ணத்தோட என்கிட்டே

இனிமேல் பழக வேண்டாம்னு சொன்னேன். இந்த ஒரு தடவை விட்டுடறேன். இனிமேல் இப்படி செஞ்சா மானேஜர்கிட்டே கம்ப் ளெயின்ட் பண்ணுவேன் அப்படீன் னேன்.''

''அவன் ரொம்ப ஆடிப் போயிருப் பானே?''

''ரொம்ப! கண்ணீர் விட்டு அழவே ஆரம் பிச்சிட்டான். 'என்னமோ ஒரு வேகத்துல எழுதிட்டேன் ஸிஸ்டர். இப்ப அதை நெனைச்சி வருத்தப்படறேன் ஸிஸ்டர். எழு தினதுக்கு அப்புறம் நான் தூங்கவே இல்லே ஸிஸ்டர் அப்படீன்னு ஆயிரம் ஸிஸ்டர் போட்டான்.''

''அது நடிப்பில்லே பானு. அந்த வயசில் ஒரு தடவையாவது புத்தி அப்படிப் போகும். நான் எம். ஏ. படிக்கிறப்ப இப்படி ஒரு லெட் டர் எழுதினேன். யாருக்குத் தெரியுமா? கூடப் படிக்கிற ஸ்டுடன்டுக்கு இல்லே. புரொபசருக்கு. ஒரு வயசான அம்மாள். அப்பவே என்னை விடப் பெரிய பையன் இருந்தான் அவளுக்கு'' மணிகண்டன் 'ஹஹ்ஹா' வென்று சிரித்தான்.

''ஸ்ஸ்... மெள்ள! குழந்தைங்க பயந் துக்கப் போறது.''

''சரி. அந்தக் கடிதாசை நீ ஏன் கிழிச்சுப் போடலே?''

அவள் கண்கள் தாழ்ந்தன.


''நான் சொல்லட்டுமா? அந்தப் பயல் சகட்டு மேனிக்கு உன்னைப் புகழ்ந்திருக்கான் அதை வாசிக்கிறதில் ,உனக்கு ஒரு 'திரில்' — என்ன? சரி சரி, மறுபடியும் அழ ஆரம்பிச் சிராதே. இதுக்காக உன்னை யாரும் தூக்கில் போடப் போறதில்லே.''

அவள் அவன் கால்களின் மேல் முகம் புதைத்துக் கொண்டாள். அவன் அவள் தலை மயிரில் முத்தமிட்டான்.

''இதோ பார் பானு. நமக்குக் கல்யாண மாகி ஏழெட்டு வருஷங்களாகுது. நமக் குள்ளே இருந்த வேகமெல்லாம் தணிஞ் சாச்சு. லைப் இப்ப ஒரு மாதிரி போர்தான். உனக்கு என் மேலேயோ எனக்கு உன் மேலேயோ அலுப்புக்கூடத் தட்ட ஆரம் பிக்கலாம்...''

''அய்யோ... நான்...''

''சரி, சரி. இல்லேங்கலே. ஆனால் இருபது வயசில் நம் உறவில் இருந்த வேகம் இப்ப இல்லே. இருக்கமுடியாது. மறுபடியும் அதைக் கொண்டு வரவும் முடியாது. இப்ப மனசு கொஞ்சம் பரபரப்பா ஒரு விஷயத்திற்கு ஆசைப்படலாம். மனசைப் படபடக்க வைக் கிறதா — ராத்திரி தூக்கத்தைக் கெடுக்கிறதா ஒரு அனுபவத்துக்கு மனசு ஏங்கலாம். மனசு அப்படித்தான். அதுக்குத் தர்ம நியாயம்லாம் தெரியாது. ஆனால் மன்சை மனசின் போக் குக்கு விட்டுட்டா என்ன ஆகும்? உன் பேரில் ஒரு சின்ன களங்கம் வந்தால் அது என்னை எப்படிப் பாதிக்கும்? நம்ம தாம்பத்தியமே குலைந்து போகும்? அதனால் பாதிக்கப்பட றது நம்ம குழந்தைங்க! நம்ம சந்தோஷத்திற்கு அவங்களைப் பலி கொடுக்கலாமா? ஆணும்



ஒருவர்: ராமசாமி மொப்பெட் வாங்கியதும் ஆளே மாறிட்டான். ஒரே கர்வம்!

மற்றவர்: எப்படிச் சொல்றே?

ஒருவர்: பின்னே பாரேன், இப்பல்லாம் வாக்கிங் போறப்பக்கூட மொப்பெட்டைத் தள்ளிட்டுத் தான் போறான்!

— ந. மாணிக்கவாசகம்

பெண்ணும் சுகமா இருக்கணும்கறதுக்காக மட்டுமே பெரியவங்க குடும்பம்னு ஒண்ணை ஏற்படுத்தலே. புதிய தலைமுறையோட பாது காப்புக்காகவும் இப்படி ஓர் ஏற்பாட்டைச் செய்தாங்க.....'' தன் பேச்சு நீண்டுவிட் டது என்று உணர்ந்து ஹாஸ்யமாகச் சிரித்த படி, ''என்ன பரவாயில்லயா நம்ம சொற் பொழிவு?'' என்றான்.

அவள், ''என்னை மன்னிச்சிடுங்க'' என் றாள்.

''சரி, மன்னிச்சாச்சு. நாம இந்தச் சம்ப வத்தையே மறந்துடலாம் என்ன?''

ஒரு வேகத்துடன் அவள் அவன் முகத் தைப் பார்த்தாள். ''மறந்துடுவீங்களா? எல் லாத்தையும் மறந்துடுவீங்களா?''

அவன் தலைமேல் முத்தமிட்டபடி அவன் சொன்னான். ''சத்தியமா.''

அவள் அவனுடன் ஒட்டிக் கொண் டாள். பரிச்சயமான இழைதல், வெட்பம், மிகவும் அறிமுகமான அந்த மணம்.... அரை மயக்கத்திலும், 'மறந்துடுவீங்களா, மறந்துடு வீங்களா' என்றுதான் அவள் கேட்டுக் கொண்டிருந்தாள்.


இரவில் கலைந்த ஒரு நிமிடம் அவள் திகைத்தாள். அவளருகே அவன் இல்லை. அறை இருட்டாக இருந்தது. ஹாலில் இருந்து வெளிச்சம் உள்ளே வந்தது. உடைகளை உடுத்திக் கொண்டு எழுந்து மெல்ல நடந்து ஹாலில் எட்டிப் பார்த்தாள்.

விளக்கு மிகப் பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தது. சோபாவில் சாய்ந்து இருளை வெறித்தபடி மணிகண்டன் அமர்ந் திருந்தான். அவன் கையில் சிகரெட் அனா தையாய்ப் புகைந்தது. தரையில் சிகரெட் சாம்பலும் எச்சங்களும் கிடந்தன. அவன் முகத்தில் மனப்போராட்டம் தெரிந்தது. நெற்றியிலும் கன்னத்திலும் கவலையின் கோடுகள்.

— இனி ஒரு போதும் திரும்பி வராதபடி எதுவோ ஒன்று தன்னை விட்டு விலகிப் போய் விட்டதை அவள் உணர்ந்தாள். அவள் மனம் எல்லையற்ற சூனியவெளியில் திசை தவறியது.



* பாலிஷிலிருந்து உமி சாம்பல் வெளியேற்றப்படுகிறது.



* தவிட்டிலிருந்து பெறப்படும் பொருள்கள்

உமியும் தவிடும் நாட்டையே உயர்த்தும்!

"நீ அவலைக் கொண்டு வா, நான் உமியைக் கொண்டு வரேன்; இரண்டு பேரும் ஊதி ஊதிச் சாப்பிடலாம்!" என்பதாக ஒரு வேடிக்கைப் பழமொழி உண்டு.

ஆனால் உமி, தவிடு என்பன அப்படியொன்றும் கேவலமான பொருள்கள் அல்ல என்பதை நவீன விஞ்ஞானம் நமக்கு உணர்த்தி இருக்கிறது.

உதாரணமாக, இந்திய உணவுக் கார்ப்பரேஷன் தமிழ்நாட்டில் மட்டும் நான்கு நவீன அரிசி ஆலைகளை இயக்கி வருகிறது. இவை தஞ்சை, செம்பனார் கோவில், மன்னார்குடி, சிதம்பரம் ஆகிய ஊர்களில் உள்ளன. இங்கே போய்ப் பார்த்தால் நெல்லிலிருந்து முதலில் உமியைத் தனியே பிரித்து எடுத்து விடுவதைக் காணலாம். அதன் பிறகு அரிசியைப் பாலிஷ் செய்யும் போது உபபொருளாகத் தவிடு கிடைக்கிறது. இந்தத் தவிட்டிலிருந்து தொழிற்சாலை எண்ணெய், சமையல் எண்ணெய், வனஸ்பதி, மெழுகு முதலியன தயாரிக்கப்படுகின்றன. இவற்றைத் தயாரிக்கத் தேவைப்படும் எரிபொருளாக முதலில் பிரித்தெடுக்கப்பட்ட உமியே பயனாகிறது!

அரிசியைப் பாலிஷ் செய்வதால் அதிலுள்ள சத்தெல்லாம் போய் விடுவதாகவும் அதனால் கைக்குத்தல் அரிசியே மேலானது என்றும் எவ்வளவு சொன்னாலும், வெள்ளை வெளேரென்று பாலிஷ் செய்யப்பட்ட அரிசிக்குப் பழகிவிட்ட நாம், கைக்குத்தல் அரிசிக்கு இனி திரும்பப் போவதில்லை. மேலும் அனைவருக்கும் கைக்குத்தல் அரிசி சப்ளை செய்வது என்பது இயந்திர யுகத்தில் சாத்தியமுமில்லை. ஆனால் செய்யக் கூடியது ஒன்று உண்டு. பாலிஷ் செய்வதால் அரிசி இழக்கும் சத்தைத் தவிட்டு எண்ணெய் மூலமாகச் சமையலில் திரும்பச் சேர்ப்பது தான் அது. இதுதான் இப்போது தவிட்டு எண்ணெய் என்பதாக மார்க்கெட்டுக்குள் வந்திருக்கிறது. (**Rice Bran Oil**).

செம்பனார்கோயில் நவீன அரிசி ஆலையில் நெல்லைப் புழுக்கியும் உலர்த்தியும் வருகிறார்கள். இதற்கு சைக்லோன் எனப்படும் புதுவகை உலையை உபயோகிக்கிறார்கள். இதற்கு உமியை எரிபொருளாகப் பயன்படுத்தும் ஒரு பாய்லரே போதுமானதாக இருக்கிறது. எரிபொருளாக நிலக்கரியையோ பெட்ரோலியம் எண்ணெயையோ பயன்படுத்தாமல் இப்படி உமியைப் பயன்படுத்துவதால் இந்த ஓர் அரிசி ஆலையில் மட்டும் மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் மிச்சமாகிறது! இவ்வாறே மற்ற அரிசி ஆலைகளிலும் இந்திய உணவுக் கார்ப்பரேஷன் உமியைப் பயன்படுத்துவதால் கோடிக் கணக்கில் பணம் மிச்சமாகியுள்ளது.

எரிபொருளாகப் பயன்பட்ட பிறகு, உமியின் சாம்பல் கூட வீணாவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அது பயிர் நிலத்துக்கு நல்ல உரமாகப் பயன்படும். குறிப்பாக நிலக்கடலைப் பயிருக்கு அருமையான அடி உரம்.



* செம்பனார்கோயில் இந்திய உணவுக் கார்ப்பரேஷனின் நவீன அரிசி ஆலை



* உமியை எரிபொருளாக்கிய பாய்லர். உமி மூட்டையை அவிழ்த்துக் கொட்ட மேலே உயர்த்தப்படுகிறது.

இனி தவிட்டு எண்ணெய் பற்றி:

செம்பனார்கோயில் அரிசி ஆலையில் உள்ள உலையில், உமியை எரிபொருளாக்கித் தவிட்டு எண்ணெய் தயாரிக்கிறார்கள். இதை மேலும் சுத்திகரித்தால் படிப்படியாகச் சமையல் எண்ணெயும் வனஸ்பதியும் தயாரிக்கலாம். முதல் கட்டத்தில் பெறப்படும் தவிட்டு எண்ணெய், தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படுவது. அதாவது சோப்பு, பெயிண்ட், ரெசின் முதலியன தயாரிப்புக்குப் பயன்படுவது.

தவிட்டு எண்ணெய் எப்படித் தயாராகிறது?

அரிசியைப் பாலிஷ் செய்து கிடைக்கும் தவிட்டை நன்றாகச் சுத்தம் செய்த பிறகு அதன் புளிப்புத் தன்மையைக் கட்டுப்படுத்தி, சிறுசிறு துண்டுகளாக மாற்றுகிறார்கள். பார்ப்பதற்கு இவை கரும்பலகையில் எழுத ஆசிரியர்கள் பயன்படுத்தும் சாக்பீஸ் போல இருக்கும். இத்துடன் ஹெக்சேன் எனப்படும் பெட்ரோலியத் திரவத்தைக் கலந்து தவிட்டு எண்ணெயை வடித்து எடுக்கிறார்கள். பிறகு அந்த எண்ணெயிலிருந்து ஹெக்சேனை ஆவி ரூபமாக வெளியேற்றி விடுகிறார்கள்.

இவ்வாறு எண்ணெய் பிரித்தெடுக்கப்பட்டு விட்ட தவிட்டுத் துண்டங்கள், கால்நடைத் தீவனமாக நல்ல விலை போகின்றன. கால்நடைகளுக்குத் தேவையான சத்துப் பொருள்கள் அதில் நிறைய மிச்சமிருக்கிறது.

நம் நாட்டில் 10,000 நவீன அரிசி ஆலைகளும் 25,000 நெல் புழுக்கும் ஆலைகளும் தனியார் துறையில் உள்ளன. இவையெல்லாமே படிப்படியாக எண்ணெய்க்குப் பதில் உமியை எரிபொருளாகப் பயன்படுத்தத் தேவையான மாற்றங்களைச் செய்து கொள்ள வேண்டும். அப்போது ஏராளமான அந்நியச் செலாவணி மிச்சமாகும். அந்த அளவுக்கு நாட்டின் வளம் பெருகும்.

தவிர அலுமினியம், கண்ணாடி, மற்றும் சர்க்கரைத் தொழிற்சாலைகளில் கூட எரிபொருளாக உமியைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

இனி உமியையும் தவிட்டையும் அலட்சியமாக எண்ண மாட்டோமல்லவா!

— பி. ஐ. பி.


UMS


பூஸ்டர்/ஆன்டெனா



உயர்ந்த திறன்
அதிக சக்தி
மிகத் துல்லியமான
படங்கள்

- ★ உங்கள் டிவி சிக்னல்களுக்கு மிகுந்த வலிமையைத் தருகிறது.
- ★ கொடைக்கானல்/சேனல் 7 ஒளிபரப்பிற்கு சிறந்த பலன் அளிக்கிறது.
- ★ தொலை தூரப்பகுதிகளிலும் தெளிவான வண்ணங்களையும் துல்லியமான படங்களையும் தருகிறது.
- ★ கடும் காற்றாலும் மழையாலும் பாதிக்கப் படாத வகையில் உறுதியாக அமைக்கப் பட்டது.
- ★ நிகரில்லா தரத்திற்காக மிகச் சிறந்த பாகங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன.





UMS ரேடியோ ஃபேக்டரி (பி) லிமிடெட்

கிளைகள் :

- 102, ரெஸிடென்ஸி ரோடு, பெங்களூர்-560 025 போன் : 578329
- 7/229, கோயம்புத்தூர் ரோடு, கல்மண்டபம், பாலக்காடு-678 001. ஃபோன் : 5362/6942
- 165, கிரீம்ஸ் லேன், கிரீம்ஸ் ரோடு பி.ஓ. சென்னை-600 006. ஃபோன் : 473339.

SASI/UMS/ 5/87

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 56

அந்தப்புர சம்பவம்

பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் காஞ்சியில் மகேந்திர பல்லவ சக்கரவர்த்தி அரசு புரிந்த காலத்தில் நாடெங்கும் மகா பாரதக் கதையைப் படிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார். பௌத்த சமண மதங்களின் பிரசாரத்தினால் மக்கள் சாதுக்களாகப் போயிருந்த தமிழ்நாட்டில் மீண்டும் வீர உணர்ச்சி தளிர்த்துப் பரவ வேண்டும் என்பதற்காக அந்த ஏற்பாடு செய்தார். பாரதக் கதை படிப்பதற்கென்றே பல ஊர்களில் பாரத மண்டபங்கள் கட்டினார். அவர் தொடங்கிய ஏற்பாடு இன்னமும் தொண்டை மண்டலத்தில் தடைப்படாமல் நடந்து வந்தது. இரவில் மக்கள் மண்டபங்களிலோ திறந்த வெளியிலோ கூடிப் பாரதக் கதை கேட்டார்கள். பாரதப் பெருங் கதையையும் பாரதத்திலுள்ள கிளைக் கதைகளையும் பாட்டிலும் பண்ணிலும் வசனத்திலும் அமைத்து வீராவேசத்துடன் சொல்லக் கூடிய பாடினிகள் பலர் தோன்றினார்கள்.

அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை சென்றிருந்தபோது மணிபுரியை அடுத்த வனத்தில் மணிபுரி ராஜகுமாரியான சித்ராங்கியைக் கண்டான். இருவரும் காதல் கொண்டார்கள். சித்ராங்கிக்கு அரவான் என்னும் அருமைப் புதல்வன் பிறந்தான். மலைநாட்டுக் கோமகளுக்கு அர்ச்சுனனால் பிறந்த மகனாதலால் அரவான் மகா வீரனாயிருந்தான். பாரத யுத்தம் நடக்கப் போகிறது என்று அறிந்து அவனும் பாண்டவர் படையில் சேர வந்து சேர்ந்தான். போர் தொடங்குவதற்கு முன்னால்

அமரர் கல்கி



சகல இலட்சணங்களும் பொருந்திய மகா வீரனை இளைஞன் ஒருவனைக் களபலி கொடுக்க வேண்டும் என்ற பேச்சு வந்த போது, "இதோ நான் இருக்கிறேன்; என்னைக் களபலியாகக் கொடுங்கள்!" என்று அரவான் முன்வந்தான். அவனைக் காட்டிலும் சிறந்த வீரன் யாரும் பாண்டவர் பக்கத்தில் இல்லாதபடியால், தானாக முன் வந்த அரவானையே பலி கொடுக்க வேண்டியதாயிற்று.

தன்னுடைய கட்சியின் வெற்றிக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்த வீர அரவானின் கதை நமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. துரோபதை அம்மனுக்குக் கோயில் கட்டிய இடங்களிலெல்லாம் பக்கத்தில் அரவானுக்கும் கோயில் கட்டி திருவிழா நடத்தினார்கள்.

மாமல்லபுரத்து ஐந்து ரதங்களின் அருகில் அன்றிரவு நடந்த அரவான் கதை முடிவடைந்துவிட்டதாகத் தோன்றியது. "மூன்று உலகமும் உடைய சுந்தர சோழ சக்கரவர்த்தி வாழ்க!" "கோப்பரகேசரி ஆதித்த கரிகாலர் வாழ்க!" என்று பல குரல்களில் எழுந்த கோஷங்கள் காற்றிலே மிதந்து வந்தன. கதை கேட்டுக் கொண்டிருந்தவர்கள் எழுந்து கலையத் தொடங்கினார்கள்.

"கதை முடிந்துவிட்டது. மலையமான் சிறிது நேரத்தில் திரும்பி வந்துவிடுவார்" என்றான் கரிகாலன்.

"அரவான் கதை முடிந்தது; ஆனால் தாங்கள் சொல்லி வந்த கதை இன்னும் முடியவில்லையே?" என்றான் பார்த்திபன்.

"இந்தப் பிராயத்தில் மலையமானின்



மனோ திடத்தைப் பார்! இன்னமும் நடுநிசி வரையில் கண் விழித்துக் கதை கேட்கப் போகிறார் பார்!'' என்றான் கரிகாலன்.

''தொண்டு கிழமாகிற வரையில் உயிரோடிருப்பது அவ்வளவு அதிசயமான காரியமா! ஊரில் எத்தனையோ கிழவர்கள் இருக்கிறார்கள். இரவில் தூக்கம் பிடியாமல் கதை கேட்கப் போகிறார்கள்....!''

''திருக்கோவலூர் மிலாடுடையாரை அப்படிச் சாதாரண கிழவர்களோடு சேர்த்து விடுகிறாயா? எத்தனை போர்க்களங்களைப் பார்த்தவர் அவர்? மலையமானின் வயதில் நாம் உயிரோடிருப்போமா என்பதே சந்தேகம். இருந்தாலும், அவரைப்போல் திடமாயிருக்கமாட்டோம்.''

''அரசே! பழைய காலத்து மனிதர்கள் திடமாயிருப்பதற்குக் காரணம் இருக்கிறது...''

''அது என்ன காரணம்?''

''அவர்கள் பெண்களின் மோகவலையில் சிக்குவதில்லை. கேவலம் ஓர் அர்ச்சகரின் மகளிடம் மனத்தைப் பறிகொடுத்துவிட்டு அவளை நினைந்து உருகிக் கொண்டிருப்பதில்லை. அப்படி எந்தப் பெண்ணிடமாவது மனம் சென்





ளுல் அவள் கூந்தலைப் பற்றி இழுத்துக் கொண்டு வந்து அந்தப்புரத்தில் சேர்த்துவிட்டு, வேறு வேலையைப் பார்ப்பார்கள்.....!''

''பார்த்திபா! நந்தினி உண்மையில் அர்ச்சகர் வீட்டுப் பெண் அல்ல; அவளுடையபிறப்பைக்குறித்துஏதோ ஓர் இரகசியம் இருக்க வேண்டும்...!''

''நந்தினி யாருடைய மகளாயிருந்தால் என்ன? அர்ச்சகர் மகளாயிருந்தால் என்ன? அரசர் மகளாயிருந்தால் என்ன? அல்லது அநாதைப் பெண்ணுயிருந்தால்தான் என்ன? அந்த இன்னொரு கிழவர் பெரிய பழுவேட்டரையரைப் பாருங்கள்! எங்கேயோ வழியில் அவளைப் பார்த்தார்; உடனே இழுத்துக் கொண்டு வந்து எட்டோடு ஒன்பது என்று அந்தப்புரத்தில் அடைத்தார்.....''

''நண்ப! அதை நினைத்தால் எனக்கு அதிசயமாகத்தான் இருக்கிறது....!''

''எதை நினைத்தால்? அந்தக் கிழவர் எப்படி இவளுடைய வலையில் சிக்கிஞர் என்பதைத்தானே?''

''இல்லை, இல்லை! ஒரு காலத்தில் என்னைக் காதலித்ததாகச் சொன்னவள், பிறகு வீர பாண்டியனைக் காதலித்து அவன் உயிரைக் காப்பாற்ற முயன்றவள், இந்தத் தொண்டு கிழவரை மணந்து கொள்ள எவ்வாறு சம்மதித்தாள்? அதை நினைத்தால் தான் அதிசயமாயிருக்கிறது.''

''எனக்கு அது ஒன்றும் அதிசயமாகத் தோன்றவில்லை, ஐயா! தங்களுடைய செயலை நினைத்தால்தான் அதிசயமாயிருக்கிறது! சோழ குலத்தின் பரம வைரியான பாண்டியன் — தோல்வியடைந்ததும் ஓடி ஒளியும் கோழையினும் கோழையாளுலும் 'வீர பாண்டியன்' என்று பெயர்-சூட்டிக் கொண்டவன் — அவனுக்கு அடைக்கலம் கொடுத்து உயிர்ப் பிச்சை கேட்டவளைத் தாங்கள் சும்மா விட்டுவிட்டு வந்தீர்களே? அதை எண்ணிஞல்தான் அதிசயத்திலும் அதிசயமாயிருக்கிறது. ஒன்று அவளையும் அங்கேயே கத்தியால் வெட்டிப் போட்டிருக்க வேண்டும்; அதற்கு விருப்பமில்லாவிட்டால் காலையும் கையையும் சேர்த்துக் கட்டிச் சிறைப்படுத்தி வந்திருக்க வேண்டும்! இந்த இரண்டில் ஒன்று செய்யாமல் சும்மா விட்டுவிட்டு வந்தீர்களே....! இப்போது எனக்குக் கூட ஞாபகம் வருகிறது, அரசே! அந்தக் குடிசையின் வாசலில் தாங்கள் வீர பாண்டியன் உடலைத் தூக்கிக் கொண்டு வந்து போட்டீர்கள். நாங்கள் அனைவரும் வெறி கொண்டவர்களைப் போல் வெற்றி முழக்கம் செய்தோம். அதற்கு நடுவில் குடிசைக்குள்ளேயிருந்து விம்மல் சத்தம் ஒன்று வந்தது. 'அது யார்?' என்று நான் கேட்டேன். 'யாரோ அர்ச்சகர் குடும்பத்துப் பெண்கள். ஏற்கெனவே அவர்கள் பீதியடைந்து கதிகலங்கிப் போயிருக்கிறார்கள். நீங்கள் யாரும் உள்ளே போகவேண்டாம்!'' என்றீர்கள். வெற்றி வெறியில் இருந்த நாங்களும் அதைப் பொருட்படுத்தவில்லை. உடனே எல்லோருமாக வீர பாண்டியனுடைய தலையை எடுத்துக் கொண்டு கிளம்பினேம். தாங்களும் எங்களுடன் வந்தீர்கள். ஆனுல் எங்கள் களிப்பிலும் கொண்டாட்டத்திலும் அவ்வளவாகத் தாங்கள் கலந்து கொள்ளவில்லை. உற்சாகம் குன்றிக் காணப்பட்டீர்கள். நான் காரணம் கேட்டேன். தாங்கள் ஏதோ சமாதானம் சொன்னீர்கள். தங்களுக்கு ஏதேனும் பலமான காயம் பட்டிருக்குமோ என்று நான் சந்தேகித்துக் கேட்டது கூட எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது!'' என்ருன் பார்த்திபேந்திரன்.

''என் உடம்பில் ஒன்றும் காயம் படவில்லை, பார்த்திபா! உள்ளத்தில் என்றும் ஆருத காயம் பட்டுவிட்டது. வீர பாண்டியன் படுத்துக் கிடந்த கட்டிலுக்கு முன்னல் வந்து அவள் கைகூப்பி என்னிடம் உயிர்ப் பிச்சை கேட்ட காட்சி என் மனத்தை விட்டு அகலவில்லை. 'ஐயோ! அவள் கேட்டதைக் கொடுக்காமல் போய் விட்டோமே!' என்று என் மனம் பதை பதைத்தது. என் உயிரைக் கொடுப்பதின் மூலம் வீர பாண்டியனை உயிர்ப்பித்து அவளிடம் சேர்க்க முடியுமாளுல் அப்படியே நான் செய்திருப்பேன். இது முடியாதபடியால் என்னை நானே நொந்து கொண்டேன். என்னை நானே சபித்துக் கொண்டேன். பார்த்திபா! நம்முடையவல்லமைகளைப்பற்றி நாம் எவ்வளவோ நினைத்துக் கொள்

கிறோம். நம்மால் ஆகாத காரியம் ஒன்றுமேயில்லை என்று கருதி இறுமாப்பு அடைகிறோம். 'அரசர்களிடம் மகா விஷ்ணுவின் அம்சம் இருக்கிறது' என்று ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்திருப்பதைக் கேட்டுவிட்டு, அதைக் கூட உண்மையென்று நம்பி விடுகிறோம். ஆனால், உடலை விட்டுப் பிரிந்து போன ஆவியைத் திரும்பக் கொண்டு வரும் வல்லமை நமக்கு உண்டா? அரச குலத்தில் பிறந்த யாருக்காவது இருந்திருக்கிறதா? நம்மால் உயிரை வாங்கத்தான் முடியும்; ஆனால் உயிரைக் கொடுக்கும் சக்தி மனிதர்களாய்ப் பிறந்த யாருக்கும் இல்லை....!''

''அப்படி இல்லாமலிருப்பதே மிக நல்லது. அந்த வல்லமை தங்களுக்கு இருந்திருந்தால், எவ்வளவு தவறான காரியம்நடந்துபோயிருக்கும்? பாண்டியனுக்கு மறுபடியும் உயிரைக் கொடுத்திருப்பீர்கள். அவன் மீண்டும் எங்கேயாவது மலைப் பொந்தில் போய் ஒளிந்திருப்பான். பாண்டிய நாட்டு யுத்தம் ஒருவேளை இன்னும் நடந்து கொண்டிருக்கும்! இவ்வளவும் ஒரு பெண்ணின் பொய்க் கண்ணீருக்காக!'' என்றான் பார்த்திபேந்திரன்.

''பல்லவா! நீ பெண் குலத்தை வெறுக்கும் துர்ப்பாக்கியசாலி! காதல் என்றால் இன்னதென்று நீ அறிய மாட்டாய்! அதனாலேயே இவ்விதம் பேசுகிறாய்!''

''ஆம்; நான் எந்தப் பெண்ணுடைய கண் வலையிலும் சிக்கியதில்லைதான். ஆனால் தங்கள் அந்தரங்கத்துக்குரிய நண்பன் வந்தியத் தேவன் மஞ்சள் பூசிய முகம் எதைக் கண்டாலும் மயங்கிப் பல்லை இளிப்பவன். ஆகையினாலேயே அவனைத் தங்களுக்கு என்னைக் காட்டிலும் பிடித்திருக்கிறது, இல்லையா, அரசே!''

''ஆகா! கடைசியில் வந்தியத் தேவனிடம் வந்துவிட்டாய் அல்லவா? ஏது, இத்தனை நேரம் அவனை மறந்து விட்டாயே என்று பார்த்தேன்!''

''ஆம், அவனைப் பற்றி உண்மையைச் சொன்னால் தங்களுக்குக் கசப்பாகவே இருக்கும். அந்தப் பேச்சை விட்டு விடுகிறேன். பிறகு என்ன நடந்தது, அரசே! நந்தினியை மறுபடியும் தாங்கள் சந்திக்கவே இல்லையா? வீர பாண்டியனுக்காக உருகினவள் எப்படிக் கிழவர் பழுவேட்டரையரை மணந்தாள் என்று அவளைக் கேட்கவே இல்லையா?''

''வீர பாண்டியனைக் கொன்ற இரவில் வெற்றிக் கோலாகலங்களுக்குப் பிறகு நீங்கள் எல்லாரும் பாசறைகளில் படுத்துத் தூங்கினீர்கள். எனக்கோ தூக்கம் வரவேயில்லை. அவளை மறுபடியும் பார்க்க வேண்டும் என்று என் உடம்பிலுள்ள ஒவ்வொரு நரம்பும் துடித்தது. அவளைப் பார்த்து ஏதேனும் சமாதானம் சொல்ல வேண்டும், மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று விரும்பினேன். மற்றொரு சமயம் அவள் பேரில் எனக்குப் பொங்கிஎழுந்தகோபத்தைக்கொட்ட வேண்டும் என்று ஆவேசம் உண்டாயிற்று. எப்படியாவது அவளைப் பார்த்தாலொழிய மன நிம்மதி ஏற்படாது, சோழ நாட்டுக்குத் திரும்பிப் போக முடியாது என்று தோன்றியது. ஆகையால், நள்ளிரவில் நீங்கள் யாரும் அறியாமல் பாசறையிலிருந்து புறப்பட்டுக் குதிரை ஏறிச் சென்றேன். வைகை நதியின் நடுவிலிருந்த தீவை அடைந்தேன். மனம் பதைபதைக்க, உடம்பெல்லாம் நடுங்க, கால்கள் தள்ளாட, குதிரையிலிருந்து இறங்கி, மெள்ள மெள்ள நடந்து பெருமாள் கோயிலுக்கு அருகில் சென்றேன். அங்கேயிருந்த குடிசைகள் எல்லாம் எரிந்து சாம்பராகிக் கிடப்பதைக் கண்டேன். ஒரு வயோதிகரும் வயோதிக ஸ்திரீயும் எரிந்த குடிசைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து புலம்பிக் கொண்டிருந்தார்கள். இன்னும் கொஞ்சம் நெருங்கிச் சென்று பார்த்ததில் அவர்கள்தான் முன்னொரு தடவை நந்தினியைப் பழையாறை அரண்மனைத் தோட்டத்துக்கு அழைத்து வந்தவர்கள் என்று தெரிந்தது. என்னைப் பார்த்ததும் அவர்களுடைய துக்கமும் பீதியும் பன்மடங்கு ஆயின. முதலில் அவர்களால் எதுவுமே பேச முடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அவர்களைத் தைரியப்படுத்தி விசாரித்தேன். ஆற்றுக்கு அக்கரையில் இருந்த கிராமத்தில் அவர்களுடைய மூத்த குமாரி இருந்தாளாம். அவளுக்குப்

பிரசவகாலம் என்று அறிந்து அவளைப் பார்த்து வரப் போயிருந்தார்களாம். நந்தினி அவர்களுடன் வர மறுத்து விட்டாளாம். மனம்போனபடி நடந்து பழக்கமுள்ள அந்தப் பிடிவாதக்காரப் பெண்ணை ஒன்றும் செய்ய முடியாமல் அவர்கள் மட்டும் போய் விட்டுத் திரும்பி வந்தார்களாம். 'வழியில் யாரோ சில முரடர்கள் ஒரு பெண்ணைக் காலையும் கையையும் கட்டி எரிந்து கொண்டிருந்த சிதையில் பலவந்தமாகப் போட முயன்றதை அவர்கள் பார்த்தார்களாம். யுத்த காலத்தில் இத்தகைய விபரீதங்கள் நடப்பது இயல்பு என்று எண்ணி அவர்களுக்கு அருகில் போகவும் பயந்து கொண்டு விரைவாக இங்கே வந்து சேர்ந்தார்களாம். வந்து பார்த்தால் குடிசைகள் பற்றி எரிந்து கிடந்தனவாம். நந்தினியையும் காணவில்லையாம். இந்த விவரத்தைச் சொல்லிவிட்டு அர்ச்சகரும் அவர் மனைவியும், 'இளவரசே! எங்கள் மகள் எங்கே? எங்கள் அருமைக் குமாரி எங்கே?' என்று கதறினார்கள். அவர்கள் நந்தினியின் உண்மைப் பெற்றோர்கள் அல்லவென்று எனக்கு முன்னமே தெரிந்திருந்தது. இப்போது அது சர்வ நிச்சயமாயிற்று. உண்மையில் பெற்றவர்களாயிருந்தால் இப்படித் தனியாக விட்டு விட்டுப் போயிருப்பார்களா? ஆகையால் அவர்கள் பேரில் எனக்கு இரக்கமோ அநுதாபமோ உண்டாகவில்லை. நந்தினியின் கதியைப் பற்றிச் சொல்ல முடியாத துக்கம் ஏற்பட்டு நெஞ்சை அடைத்தது. 'உங்கள் மகள் எரிந்த சிதையைத் தேடிப் போய் நீங்களும் எரிந்து செத்துப் போங்கள்!' என்று வயிற்றெரிச்சல் தீர அவர்களைச் சபித்து விட்டுத் திரும்பிப் பொழுது விடிவதற்குள் பாசறைக்கு வந்து சேர்ந்தேன். நீங்கள் எல்லாரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தீர்கள். நான் போனது, திரும்பி வந்தது ஒன்றும் உங்களில் யாருக்கும் தெரியாது...."

"ஆம்; இளவரசே! தெரியாதுதான். அதற்குப் பிறகும் இத்தனை காலமாக இதையெல்லாம் தங்கள் மனத்திலேயே வைத்துக் கொண்டிருந்ததை நினைத்தால் வியப்பாயிருக்கிறது.





சிநேக தர்மத்துக்கு இவ்வளவு மாறுகத் தாங்கள் நடந்து கொள்வீர்கள் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. தங்களுடைய நிலையில் நான் இருந்திருந்தால் தங்களிடம் சொல்லாமல் இருந்திருக்கமாட்டேன்'' என்றான் பார்த்திபன்.

''ஆனால் நீ என்னுடைய நிலையில் இல்லையே, பார்த்திபா! இந்த உலகில் யாருமே என்னுடைய நிலையில் இருந்திருக்க முடியாது. என் நிலையில் இருந்திருந்தால், நீ எப்படி நடந்து கொண்டிருப்பாய் என்று யார் சொல்ல முடியும்?'' என்றான் கரிகாலன்.

''அரசே! நடந்து போனதைப் பற்றி இப்போது நமக்குள் விவாதம் வேண்டாம். அப்புறம் என்ன நடந்தது? நந்தினியைப் பிறகு எப்போது பார்த்தீர்கள்? பழுவூர் இளைய ராணி ஆன பிறகா? அதற்கு முன்னமேயா?''

''அதற்கு முன்னால் நான் பார்த்திருந்தால், அவள் பழுவூர் ராணி ஆகியிருக்கமாட்டாள். பழுவேட்டரையரின் கலியாணம் நடந்தபோது நானும் நீயும் ஊரில் இல்லை. அந்தச் செய்தி வந்தபோது நாம் இருவரும் அருவருப்போடு பேசிக் கொண்டது உனக்கு நினைவில் இருக்குமே? அதற்குச் சில நாளைக்குப் பிறகு எனக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் நடந்தது. அடுத்த பட்டம் யாருக்கு என்பதைப் பற்றிச் சந்தேகம் எதுவும் இருக்கக் கூடாது என்றுதான் என் தந்தையும் பாட்டியும் மற்ற பெரியோர்களும் சேர்ந்து அந்த ஏற்பாடு செய்தார்கள். மதுராந்தகனுக்கு யாராவது துர்ப்போதனை செய்து தூபம்போட்டுவிடப் போகிறார்கள் என்ற பயம் அவர்களுக்கு இருந்ததோ என்னமோ? இளவரசுப் பட்டம் கட்டியதோடு, பரகேசரிப் பட்டம் அளித்து என் பெயராலேயே கல்வெட்டு சாஸனம் ஏற்படுத்தும் உரிமையையும் அளித்தார்கள். 'இனி இச் சோழ சாம்ராஜ்யத்தை ஆளும் பொறுப்பு முழுதும் உனக்கே' என்று என் அருமைத் தந்தை மனதார, வாயாரக் கூறினார். அந்த நாட்டார், நகரத்தார், அமைச்சர்கள், தளபதிகள் அனைவரும் ஒப்புக் கொண்டு ஜயகோஷம் செய்தார்கள். இந்தக் கோலாகலத்தில் நான் நந்தினி



யை அடியோடு மறந்திருந்தேன். ஆனால் பட்டாபிஷேகச் சடங்கு நடந்து முடிந்த சிறிது நேரத்துக்கெல்லாம் அவளை நான் என்றும் மறக்க முடியாத சம்பவம் நேர்ந்தது. பழைமையான சோழர் குலத்து மணிமகுடத்துடன் என்னைச் சக்கரவர்த்தி அந்தப்புரத்துக்கு அழைத்துப் போனார். என் அன்னையிடமும் பாட்டியிடமும் மற்ற அந்தப்புர மாதரிடமும் ஆசி பெறுவதற்காக அழைத்துப் போனார். என்னைத் தொடர்ந்து என் சகோதரனும் முதன் மந்திரியும் பழுவேட்டரையர்களும் வந்தார்கள். அந்தப்புரத்தில் வயது மிகுந்த தாய்மார்களோடு, என் தங்கையும் அவளுடைய தோழிகளும் மற்றும் பல இள மங்கையரும் கூட்டமாக நின்றார்கள். எல்லாரும் ஆடை ஆபரணங்களினால் ஜொலித்துக் கொண்டு மகிழ்ச்சியினால் மலர்ந்த முகங்களோடு எங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு நின்றார்கள். ஆனால் அத்தனை முகங்களிலும் ஒரே ஒரு முகந்தான் என் கண்ணுக்குத் தெரிந்தது. அது நந்தினியின் முகந்தான். எரிந்து சாம்பராய்ப் போனாள் என்று நான் எண்ணியிருந்த என் இதய தேவதைதான் அவள்! அந்த அரண்மனை அந்தப்புரத்துக்குள் அவள் எப்படி வந்தாள்? அவ்வளவு பிரமாதமான ஆடை அலங்காரங்களுடன் ராணிகளுக்குள் நடுநாயகமான மகாராணியாக அங்கே எப்படி நிற்கிறாள்? அவள் முகத்தில்தான் என்ன மந்தகாஸம்? அவளுடைய சௌந்தரியம் முன்னைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமாகியிருப்பது எப்படி? சில கண நேரத்திற்குள் என் உள்ளம் பற்பல ஆகாசக் கோட்டைகளைக் கட்டிவிட்டது! சோழ சாம்ராஜ்யத்திற்கு உரியவன் என்று நான் முடி சூட்டிக் கொண்ட அன்றைய தினம் உண்மையிலேயே என் வாழ்நாளில் அதிர்ஷ்ட தினம் ஆகப் போகிறதா? என் உள்ளத்தைக் கவர்ந்த ராணியை என் பட்ட மகிஷியாகவும் அடையப் போகிறேனா? ஏதோ, ஓர் அதிசயமான இந்திர ஜாலத்தினால், மந்திர சக்தியினால், அவ்விதம் நடக்கப் போகிறதா...? இப்படி நான் எண்ணிக் கொண்டிருக்கையில் என் அன்னை வானமாதேவி முன்னால் இரண்டு அடி நடந்து வந்து 'குழந்தாய்!' என்று சொல்லி என்னை ஆசீர்வதித்து உச்சி முகர்ந்தாள்! அதே சமயத்தில் யாரும் எதிர்பாராத அச்சம்பவம் நடந்துவிட்டது. என் தந்தை 'ஆ!' என்று ஒரு கூச்சலிட்டு விட்டுத் திடீரென்று தரையில் சுருண்டு விழுந்து மூர்ச்சை அடைந்தார். உடனே, அவ்விடத்தில் பெருங்குழப்பமாகிவிட்டது. நானும் மற்ற எல்லாரும் சக்கரவர்த்தியைத் தூக்கி உட்கார வைத்து மூர்ச்சை தெளிவிப்பதில் கவனம் செலுத்தினோம். என் அன்னையையும், பாட்டி செம்பியன் மாதேவியையுந் தவிர மற்ற மாதர் அனைவரும் உள்ளே சென்றுவிட்டார்கள். தந்தைக்குச் சீக்கிரத்தில் மூர்ச்சை தெளிந்துவிட்டது. என் சகோதரி குந்தவையைத் தனி இடத்துக்கு நான் அழைத்துச் சென்று, 'நந்தினி அங்கே எப்படி வந்தாள்?' என்று கேட்டேன். நந்தினி பெரிய பழுவேட்டரையரை மணந்து கொண்டு இப்போது பழுவூர் இளையராணியாக விளங்குகிறாள் என்று குந்தவை சொன்னாள். என் நெஞ்சில் கூரிய ஈட்டி பாய்ந்தது. நண்பா! போர்க்களங்களில் எத்தனையோ முறை நான் காயம்பட்டதுண்டு. ஆனால், 'நந்தினிதான் பழுவூர் இளையராணி' என்று குந்தவை கூறியதனால் என் நெஞ்சில் ஏற்பட்ட காயம் இன்னும் ஆறவில்லை!'' என்று ஆதித்த கரிகாலன் கூறித் தன்னுடைய

நெஞ்சை அமுக்கிப் பிடித்துக் கொண்டான். நெஞ்சில் அவனுக்கு இன்னும் வலி இருந்து வந்தது என்பது நன்றாய்த் தெரிந்தது.

அத்தியாயம் 57

மாயமோகினி

ஆரம்பத்திலிருந்து அவ்வளவாக அனுதாபம் இல்லாமலே கரிகாலன் கதையைக் கேட்டுக் கொண்டு வந்த பார்த்திபனுக்கும் இப்போது நெஞ்சு உருகி விட்டது. தன்னுடைய கண்களில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

"அரசே! ஒரு பெண்ணின் பேரில் ஏற்பட்ட காதலினால் இப்படிப்பட்ட துன்பம் உண்டாகக் கூடும் என்று நான் கனவிலும் கருதியதில்லை! இளவரசுப் பட்டாபிஷேகம் நடந்த அன்று இப்படி ஓர் அனுபவம் தங்களுக்கு நேர்ந்தது என்று எங்களுக்கெல்லாம் தெரியாது.. ஆகையால், தாங்கள் மனச்சோர்வுடன் இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டோம். என்னவெல்லாமோ பரிகாசப் பேச்சுக்கள் பேசித் தங்களைச் சந்தோஷப் படுத்தப் பார்த்தோம். அதெல்லாம் இப்போது எனக்கு நினைவு வருகிறது!" என்றான்.

"ஆம்; நீங்கள் பரிகாசப் பேச்சுப் பேசினீர்கள். என்னை உற்சாகப் படுத்தப் பார்த்தீர்கள். என்னுடைய ஆட்சிக் காலத்தில் நான் செய்யப் போகும் மகத்தான காரியங்களைப் பற்றிப் பேசினீர்கள். இலங்கையிலிருந்து இமயம் வரையில் சோழ சாம்ராஜ்யத்தை அன்றைய தினமே விஸ்தரித்து விட்டீர்கள்! இன்னும், கடல் கடந்து சென்றும் இராஜ்யங்களைக் கைப்பற்றினீர்கள். அந்தப் பேச்செல்லாம் எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. அவ்வளவும் எனக்கு எவ்வளவு துன்பமளித்தது என்பதும் நினைவிருக்கிறது. பிறகு ஒரு நாள் என்னை நந்தினி பழுவூர் அரண்மனைக்குக் கூப்பிட்டு அனுப்பினாள். போகலாமா, வேண்டாமா என்று என் மனத்தில் ஒரு போராட்டம் எழுந்தது. கடைசியில், போவதென்று முடிவு செய்தேன். பல விஷயங்களில் எனக்குத் தோன்றியிருந்த ஐயங்களை அவளைக் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பினேன். அவளுடைய பிறப்பின் உண்மையைத் தெரிந்து கொள்ள விரும்பினேன். அந்தப்புரத்தில் என் தந்தை அன்று மூர்ச்சை அடைந்து விழுந்ததற்கும் அங்கே நந்தினியை அவர் அகஸ்மாத்தாகக் கண்டதற்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்குமோ என்ற சந்தேகங்கூட என் மனத்தில் தோன்றியிருந்தது. அன்றைய தினம் சக்கரவர்த்திக்கு விரைவில் மூர்ச்சை தெளிந்துவிட்டதாயினும் மறுபடி அவர் பழைய ஆரோக்கியத்தை அடையவேயில்லை என்பது உனக்கு நினைவிருக்கும். நந்தினியுடன் பேசுவதிலிருந்து எனக்கு அதுவரை விளங்காத மர்மம் ஏதேனும் வெளியாகலாம் என்று எண்ணினேன். இதையெல்லாம் ஒரு வியாஜமாக வைத்துக் கொண்டேனே தவிர, உண்மையில் நான் சென்ற காரணம், அவளிடமிருந்த காந்த சக்திதான். வேறு காரணங்களைக் கற்பித்து என்னை நானே ஏமாற்றிக் கொண்டு சென்றேன். பழுவேட்டரையர் ஊரில் இல்லை. அவருடைய அரண்மனையில் என்னைத் தடுப்பாரும் இல்லை; எனக்கும் நந்தினிக்கும் ஏற்பட்டிருந்த பழைய சிநேகிதத்தைப் பற்றி அங்கே அறிந்தவர்களும் இல்லை; இளவரசுப் பட்டம் கட்டிக் கொண்ட ராஜகுமாரன் பழுவூர் அரண்மனை ராணிமார்களிடம் ஆசி பெறுவதற்காக வருவதாகவே நினைத்தார்கள். அரண்மனைத் தோட்டத்தில் உள்ள லதா மண்டபத்தில் நந்தினியை நான் சந்தித்தேன். பார்த்திபா! கடற்பிர

யாணம் செய்வோரின் அனுபவங்களை நீ கேட்டிருக்கிறாய் அல்லவா? சமுத்திரத்தில் சில இடங்களில் அளவில்லாத சக்தியுடனும் வேகத்துடனும் கூடிய நீரோட்டங்கள் இருக்குமாம். அந்த நீரோட்டங்களில் கப்பல்கள் அகப்பட்டுக் கொண்டால் சிறிது நேரத்தில் சுக்குச் சுக்காகப் போய் விடுமாம். நந்தினியின் முன்னிலையில் நான் இருந்தபோது, கடல்நீரோட்டத்தில் அகப்பட்டுக் கொண்ட கப்பலின் கதியை அடைந்தேன். என் உடல், உள்ளம், இருதயம், — எல்லாம் ஆயிரம் சுக்கல்களாகி விட்டன. என்னுடைய நாவிலே வந்த வார்த்தைகள் எனக்கே வியப்பை அளித்தன! 'ஐயோ! இது என்ன இப்படிப் பேசுகிறோம்?' என்று நெஞ்சில் ஒரு பக்கம் தோன்றிக் கொண்டிருந்தபோது, வாய் ஏதேதோ உளறிக் கொண்டிருந்தது. எனக்கு இளவரசுப் பட்டம் சூட்டியதைப் பற்றி நந்தினி தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தாள்.

'எனக்கு அதில் ஒன்றும் மகிழ்ச்சி இல்லை!' என்றேன்.

'ஏன்?' என்று கேட்டாள்.

'இது என்ன கேள்வி கேட்கிறாய்? எனக்கு எவ்வாறு மகிழ்ச்சி இருக்கும்? நீதான் இப்படி அநியாயம் செய்து விட்டாயே?' என்றேன். நான் சொல்வது அவளுக்கு விளங்காதது போல நடித்தாள். இவ்விதம் பேச்சு வளர்ந்து கொண்டே போயிற்று. என் அன்பை நிராகரித்தது பற்றியும், வீர பாண்டியனைக் காதலித்தது பற்றியும் அவள் மீது நான் குற்றம் சாட்டினேன். கிழவர் பழுவேட்டரையரை மணந்தது பற்றியும் குத்தலாகப் பேசினேன்.

'இளவரசே! முதலில் தாங்கள் என் காதலைக் கொன்றீர்கள்; பிறகு என்னைக் காதலித்தவனை என் கண் முன்னால் கொன்றீர்கள்; என்னையும் கொன்றாலொழியத் தங்கள் மனம் திருப்தியடையாது போலிருக்கிறது. நான் உயிரோடிருப்பதே தங்களுக்குப் பிடிக்கவில்லை. நல்லது; என்னையும் கொன்று தங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்!' என்று சொல்லித் தன்னுடைய இடுப்பில் செருகியிருந்த சிறிய கத்தியை எடுத்து நீட்டினாள்.

'நான் ஏன் உன்னைக் கொல்கிறேன்? நீயல்லவா என்னை உயிரோடு வதைத்துக் கொண்டிருக்கிறாய்!' என்றேன்.

கடைசியில், இப்போது நினைத்துப் பார்த்தாலும் வெட்கம் தருகிற வார்த்தைகளை என் வாய் சொல்லிற்று. 'இன்னமுங்கூட மோசம் ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. ஒரு வார்த்தை சொல்லு! இந்தக் கிழவனை விட்டு விட்டு வந்துவிடுவதாகச் சொல்லு! உனக்காக நான் இந்த ராஜ்யத்தை விட்டு வந்துவிடுகிறேன். இருவரும் கப்பல் ஏறிக் கடல் கடந்து தூர தேசத்துக்குப் போய் விடுவோம்!' என்றேன்.

நந்தினி அதைக் கேட்டுப் பயங்கரமாகச் சிரித்தாள். அதை நினைத்தால் இப்போது கூட எனக்கு ரோமம் சிலிர்க்கிறது. 'கடல் கடந்து தூர தேசத்துக்குப் போய் நாம் என்ன செய்வது என்கிறீர்கள்? விறகு வெட்டிப் பிழைக்கவா? அல்லது வாழைத் தோட்டம் போட்டுப் பிழைக்கவா?' என்றாள். 'அதெல்லாம் உனக்குப் பிடிக்காதுதான்! அர்ச்சகர் வீட்டில் வளர்ந்தவள் பழுவூர் ராணி ஆகி விட்டாய் அல்லவா?' என்றேன்.


'இதோடு திருப்தியடைவதாக எண்ணம் இல்லை. சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் சக்கரவர்த்தினியாக வீற்றிருப்பதாக உத்தேசம். தங்களுக்கு இஷ்டமிருந்தால் சொல்லுங்கள். பழுவேட்டரையர் இருவரையும் கொன்றுவிட்டு, சுந்தர சோழரைச் சிறையில் அடைத்து விட்டு, சக்கரவர்த்தியாகி என்னைத் தங்கள் பட்டமகிஷியாக்கிக்கொள்கிறதாயிருந்தால் சொல்லுங்கள்!' என்றாள். 'ஐயோ! என்ன பயங்கரமான வார்த்தைகளைச் சொல்கிறாய்?' என்றேன். 'காயமடைந்து படுத்துக் கிடந்த பாண்டியனை என் கண் முன்னால் கொன்றது பயங்கரமான காரியமில்லையா?' என்று நந்தினி கேட்டாள். இதனால் என் குரோதம் கொழுந்துவிடத் தொடங்கியது. ஏதேதோ வெறி கொண்ட வார்த்தை

கலை உளறி அவளை நிந்தித்துவிட்டுக் கிளம்பினேன். அப்போதும் அவள் என்னை விடவில்லை. 'இளவரசே! எப்போதாவது தங்களுடைய மனத்தை மாற்றிக் கொண்டால் என்னிடம் திரும்பி வாருங்கள். என்னைச் சக்கரவர்த்தினியாக்கிக் கொள்ளத் தங்கள் மனம் இடம் கொடுக்கும் போது வாருங்கள்!' என்றாள். அன்று அவளை விட்டுப் பிரிந்தவன் பிறகு அவளைப் பார்க்கவே இல்லை!'' என்றான் ஆதித்த கரிகாலன்.

இதையெல்லாம் கேட்டுப் பயங்கரமும் திகைப்பும் அடைந்த பார்த்திபேந்திரன், ''அரசே! இப்படியும் ஒரு ராட்சஸி உலகில் இருக்க முடியுமா? அவளைத் தாங்கள் மறுபடி சந்திக்காததே நல்லதாய்ப் போயிற்று!'' என்று கூறிப் பெருமூச்சு விட்டான்.

''அவளை நான் போய்ப் பார்க்கவில்லை என்பது சரிதான்! ஆனால் அவள் என்னை விட்டபாடில்லை. பல்லவா! இரவும் பகலும் என்னைச் சுற்றிச் சுற்றி வந்து என்னை வதைக்கிறாள். பகலில் நினைவிலே வருகிறாள். இரவில் கனவிலே வருகிறாள். ஒரு சமயம் முகத்தில் மோகனப் புன்னகையுடன் என்னைக் கட்டி அணைத்து முத்தம் கொடுக்க வருகிறாள். இன்னொரு சமயம் கையில் கூரிய கத்தியுடன் என்னைக் குத்திக் கொல்ல வருகிறாள். ஒரு சமயம் கண்களில் கண்ணீர் பெருக்கி விம்மிக் கொண்டு வருகிறாள். வேறொரு சமயம் தலைவிரி கோலமாய்க் கன்னங்களைக் கைவிரல்களினால் பிறாண்டிக் கொண்டும் அலறி அழுது கொண்டும் வருகிறாள். ஒரு சமயம் பைத்தியம் பிடித்தவளைப் போல் பயங்கரமாய்ச் சிரித்துக் கொண்டு வருகிறாள். இன்னொரு சமயம் அமைதியான முகத்துடன் ஆறுதல் சொல்ல வருகிறாள். கடவுளே! அந்தப் பாதகி என்னை எப்படித்தான் வதைக்கிறாள் என்று சொல்லி முடியாது. இன்று மாலை பாட்டன் கூறியது நினைவிருக்கிறதா! நான் ஏன் தஞ்சை போகக் கூடாது என்பதற்கு ஏதேதோ காரணம் கூறினார். உண்மையில் நான் தஞ்சை போகாமலிருப்பதற்கும் என் தந்தையைக் காஞ்சிக்கு வரவழைக்க விரும்புவதற்கும் காரணம் நந்தினிதான்...''

''அரசே! கேவலம் ஒரு பெண்ணுக்குப் பயந்து கொண்டா தஞ்சைக்குப் போகாமலிருக்கிறீர்கள்? அப்படி



அவள் என்னதான் செய்து விடுவாள்? வஞ்சனையாக விஷம் வைத்துத் தங்களைக் கொன்று விடுவாள் என்று அஞ்சுகிறீர்களா?......"

"இல்லை, பார்த்திபா, இல்லை! இன்னமும் என்னை நீ நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை. அவள் என்னைக் கொன்று விடுவாள் என்பதற்காக நான் அஞ்சவில்லை. அவளுடைய இஷ்டப்படி என்னைச் செய்ய வைத்து விடுவாளோ என்றுதான் பயப்படுகிறேன். 'உன் தந்தையைச் சிறையில் போடு!' 'உன் தங்கையை நாட்டை விட்டுத் துரத்து!' 'இந்தக் கிழவனைக் கொன்று என்னைச் சிம்மாசனத்தில் ஏற்று!' என்று அந்த மாயமோகினி மறுமுறை சொன்னால், எனக்கு அப்படியெல்லாம் செய்யத் தோன்றி விடுமோ என்று பயப்படுகிறேன். நண்பா! ஒன்று நந்தினி சாக வேண்டும்; அல்லது நான் சாக வேண்டும்; அல்லது இரண்டு பேரும் சாக வேண்டும். இல்லாவிடில் இந்த ஜன்மத்தில் எனக்கு மன அமைதி கிடையாது!" என்றான் கரிகாலன்.

"அரசே! இது என்ன பேச்சு? தாங்கள் ஏன் சாக வேண்டும்? எனக்கு அனுமதி கொடுங்கள்! இலங்கைக்கு அப்புறம் போகிறேன். உடனே தஞ்சாவூர் சென்று அவளைக் கொன்று விட்டு வருகிறேன். ஸ்திரீ ஹத்தி தோஷம் எனக்கு வந்தால் வரட்டும்..."

"அப்படி ஏதாவது செய்தால் உன்னை என் பரம வைரியாகக் கருதுவேன். நந்தினியைக் கொல்லத்தான் வேண்டுமென்றால், என்னுடைய இந்தக் கையினாலேயே அவளைக் கொல்லுவேன். கொன்றுவிட்டு என்னையும் கொன்று கொண்டு மாளுவேன்! வேறொருவர் அவளுடைய சுண்டு விரலின் நகத்துக்குக் கேடு செய்வதையும் என்னால் பொறுக்க முடியாது! நண்பா! நீ நந்தினியை மறந்து விடு! அவளைப் பற்றி நான் சொன்னதெல்லாவற்றையும் மறந்து விடு! பாட்டன் சொன்னபடி நீ நாளைக்கே புறப்பட்டு இலங்கைக்குப் போ! என் சகோதரன் அருள்மொழியை எப்படியாவது வற்புறுத்தி இங்கே அழைத்து வா! அவனை இங்கே இருக்கச் செய்வோம். பாட்டனும் பேரனும் யோசித்து என்ன வேணுமோ செய்து கொள்ளட்டும். நாம் இலங்கைக்குச் செல்வோம். மீண்டும் கப்பல் ஏறிப் பெரும்படையுடன் கீழைக் கடல்களில் செல்வோம். சாவகம், புஷ்பகம், கடாரம் முதலிய தேசங்களுக்குச் சென்று வெற்றிக் கொடி நாட்டுவோம். பிறகு மேற்கே திரும்புவோம். அரபு, பாரஸீகம், மிசிரம் முதலிய நாடுகளுக்குச் சென்று அங்கெல்லாம் தமிழர் வீரத்தையும் புலிக்கொடியையும் நிலை நாட்டுவோம். பார்த்திபா! அந்த நாடுகளில் எல்லாம் கற்பு என்னும் கட்டுப்பாடு இந்த நாட்டில் உள்ளது போல் கிடையர்து என்பது உனக்குத் தெரியுமா? அரசர்கள் தங்கள் இஷ்டம்போல் அவர்களுடைய ஆட்சியின் கீழ் உள்ள எந்தப் பெண்ணையும் அழைத்துச் சென்று அந்தப்புரத்தில் சேர்த்துக் கொள்வார்களாம்!..." என்றான் கரிகாலன்.

பார்த்திபன் இதற்கு மறுமொழி சொல்லுவதற்குள் திருக்கோவலூர் மலையமான் அங்கு வந்து சேர்ந்தார். "அரவான் கதையைப் போல் அற்புதமான கதை இந்த உலகத்திலேயே கிடையாது. நீ இப்பேர்து சொல்லிக் கொண்டிருந்த எந்த நாட்டிலும் கிடையாது. ஆனால் இன்னுமா நீங்கள் தூங்காமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? பார்த்திபேந்திரா! நாளைக்கு இலங்கைக்குப் புறப்பட வேண்டும் என்பது உனக்கு நினைவிருக்கிறதல்லவா?" என்றார்.

"அதைப் பற்றித்தான் தூங்காமல் பேசிக் கொண்டிருக்கிறோம்!" என்றான் பார்த்திபேந்திரன்.

(தொடரும்)

பொன்னியின் செல்வன் முதல் பாகம் முற்றிற்று.

அடுத்த இதழில் இரண்டாம் பாகம் ஆரம்பமாகிறது.

விஸ்ட்ரம்

ஒரு டயபடிக் உணவு



நீரிழிவுக்காரர்களுக்கென்றே பிரத்யோகமாக வடிவமைக்கப்பட்டது.

சோர்வை நீக்கி, சக்தியை கோடுத்து தெம்பை ஊட்டுகின்றது

கோழுப்புச் சத்து சிறிதும் இல்லாதது

முழுவதும் தானிய, பருப்பு வகைகளால் ஆனது

செயற்கை வண்ணமோ, மணமோ, ருசியோ சேர்க்கப்படாதது இயற்கை தந்த பாதுகாப்புடன் அளிக்கப்படுகிறது

ஸ்பென்ஸர்ஸ், சிந்தாமணி, நீல்கிரீஸ் மற்றும் எல்லா மருந்துக் கடைகளிலும், டிபார்ட்மெண்டல் கடைகளிலும் கிடைக்கும்.

ஆவசியம் வேணும்

கதவு மெல்லத் தட்டப்பட்ட ஓசை கேட்டு அமல்ராஜ் தலையைச் சற்றே உயர்த்தி, "யெஸ்" என்றார். அலுவலரின் அனுமதி காதில் விழுந்ததும், கதவை மெதுவாய்த் தள்ளித் திறந்து கொண்டு மூர்த்தி அந்த அறைக்குள் நுழைந்தான்.

தம்மைத் தேடிக் கொண்டு மூர்த்தி ஒரே ஒரு காரியத்துக்காகத்தான் வருவான் என்று தமக்குள் நினைத்துக் கொண்ட அமல்ராஜ் சலிப்பாக அவனை ஒரு பார்வை பார்த்தார். அவரது பார்வையில் சிந்திய சலிப்பைக் கவனித்ததும் அதைப் பாராட்டிக் கொள்ளாமல், "ஸார், என்னோட ட்ரான்ஸ்ஃபர் விஷயமா உங்களைப் பார்த்து ஞாபகப்படுத்தலாம்னு வந்தேன், ஸார்...." என்று மெல்லிய குரலில் கூறித் தலையைச் சொறிந்தபடி அவன் விழிகளை அரையாய்த் தாழ்த்தி அவரைப் பார்த்தான்.

"அதான் பார்க்கறேன்னு சொல்லி இருக்கேன்ல, மிஸ்டர் மூர்த்தி. சும்மா வந்து வந்து தொந்தரவு பண்ணினால் மட்டும் வேகன்ஸி வந்துடுமா என்ன? வேகன்ஸி வந்தாத்தானே உங்களை நான் ஊட்டிக்கு ட்ரான்ஸ்ஃபர் பண்ண முடியும்? இன்னும் மூணு மாசம் பொறுத்துக்குங்க. ஊட்டி பிரான்ச் ஆபீஸ்ல ஒரு அப்பர் டிவிஷன் கிளார்க் ரிடையர் ஆறாரு. அவரோட காலி இடத்துல உங்களைப் போட ஏற்பாடு பண்றேன்...." என்று கொஞ்சம் கடுமை கலந்த குரலில் சொல்லிவிட்டு, 'நீங்கள் இனிமேல் இடத்தைக் காலி செய்யலாம்' என்பதுபோல் அமல்ராஜ் அவனை ஒரு பார்வை பார்த்தார்.

"அது எனக்குக் கிடைக்கிறதுக்கு வாய்ப்பு இல்லே, ஸார்! அதனால்தான் உங்களுடைய ஸ்பெஷல் சிபாரிசுக்காக வந்து வந்து ஞாபகப்படுத்திட்டிருக்கேன்."

"ஏன்?" என்று கேட்ட அமல்ராஜ் பேனாவை மூடி வைத்துவிட்டு அவனை நேரடியாகப் பார்த்தார்.

"என்னு, புதுசாக் கல்யாணம் ஆன ஒரு பொண்ணு ஊட்டிக்கு ட்ரான்ஸ்ஃபர் கேட்டு எழுதிக் குடுத்திருக்கு. அவங்க புருஷன் ஊட்டியில் வேலையா இருக்கிறதுனால, புருஷன்—மனைவியைப் பிரிக்கக் கூடாதுங்கறதால அநேகமா சட்டப்படி அந்தப் பொண்ணுதான் ஊட்டிக்குப் போவாங்க..."

"சரி, அதுக்கு நான் இப்ப என்ன பண்ணணும்கிறீர்? உமக்காக நான் ஊட்டியில் ஒரு ஸ்பெஷல் பதவியை ஏற்படுத்த முடியுமா?"

—ஜோதிர்லதா கிரிஜா

மூர்த்தி பதில் சொல்லாமல் நின்று கொண்டு அவரை அசட்டுத்தனமாய்ப் பார்த்தான். அவர் கேட்ட கேள்வி சரியானது தான். தானாக விளைகிற சாவு, ஓய்வு இவற்றால் ஏற்படுகிற காலி இடங்களுள் ஒன்றில் தான் அவரால் அவனை அமர்த்த முடியும். இவனுக்கென்று தனியாக ஒரு பதவியை ஊட்டியில் அவரால் உண்டாக்க முடியாது தான்.

"நீங்க மனசு வெச்சா ஒரு வழி பண்ணி எனக்கு உதவலாம் ஸார்!"

"எப்படி?"

"அந்தப் பொண்ணோட புருஷனை இந்த ஊருக்கு மாத்திக்கிட்டு வரச் சொல்லலாம் ஸார்."



டிரான்ஸ்ஃபர்!

''அந்த ஆள் வேலை செய்யற ஆபீஸோடைய பிராஞ்ச் இங்கே இருக்கா?''

''தெரியலே.''

''என்னய்யா இது வேடிக்கை பண்றீர்! அதை முதல்லே தெரிஞ்சுண்டு வாரும். அப்படி அவரால் இங்க வர முடியும்னு அவர் வந்துக்கட்டும். அந்தப் பொண்ணோடே பேசிப் பார்த்து நீரே வந்து சொல்லும். அதுக்கு அப்புறம் உமக்கு உதவ முடியுமான்னு பார்க்கறேன்.''

''எஸ் ஸார்!''

மூர்த்தி கொஞ்சம் நம்பிக்கையுடன் அலுவலரின் அறையை விட்டு வெளியே வந்தான்.

அந்தப் பெண் மாலதி கொஞ்சம் முசுடு என்று அவன் கேள்விப்பட்டிருந்தான். தலை உயர்த்தி யாருடனும் பேசாது என்று அறிந்திருந்தான். எனினும் தன் காரியம் ஆக வேண்டுமே என்ற நினைப்பால் தயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு, அவள் பிரிவுக்குப் போனான். அவன் போன நேரத்தில் மாலதி, 'சே, என்ன வெயில்! ஐஸ் தண்ணியிலேயே முழுகிடலாம் போல இருக்கு' என்று தன் பக்கத்து இருக்கைக்காரியிடம் எரிச்சல் பட்டுக் கொண்டிருந்தாள்.

'அப்படியே முழுகியே போயிட்டியானா, ஊட்டி வேகன்ஸி எனக்குக் கிடைச்சுடும்' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டே, 'குட் மார்னிங் மேடம்!' என்று இளித்தவாறு அவள் எதிரே சென்று அவன் நின்று கொண்டான். தன்னைக் காட்டிலும் வயதில் சிறிய அவளை 'மேடம்' என்று விளிக்க அவனுக்குப் பிடிக்காவிட்டாலும், அவளுடன் பழக்கமே இல்லாததால், 'மிஸஸ் மாலதி' என்று விளிப்பது அவளது முகத்தைச் சுருக்குமோ என்ற கவலையால் அந்த மரியாதையைக் கடைப்பிடித்தான்.


''யெஸ்...!'' இந்த ஒற்றைச் சொல்லே, தான் செய்தது சரிதான் என்பதை அவனுக்கு உணர்த்த, குரலில் மேலும் குழைவு காட்டி, ''உங்களால் எனக்கு ஒரு காரியம் ஆகணும்...'' என்று இழுத்தான்.

''சொல்லுங்க...''

''ஊட்டியில என்னோட வயசான அப்பா, அம்மா இருக்காங்க. அவங்க கடைசிக் காலத்துல அவங்களோட இருக்கணும்கறதுக்காக நான் ஊட்டிக்கு ட்ரான்ஸ்ஃபர் கேட்டு மனு போட்டிருக்கேன். நீங்களும் போட்டிருக்கீங்



அருள்வாக்கு



வெளிதேசத்து விஷயம் என்று புதிதாக நம் ஊருக்கு வந்தால் அதற்கு உள்ளூர் பாஷையில் வார்த்தையிருப்பதில்லை. ரேடியோ, டெலிபோன், பஸ் முதலியவற்றுக்கெல்லாம் நம் பாஷையில் வார்த்தையில்லை. பிற்பாடு இப்போது இவற்றுக்கும் ஏதேதோ புரியாத தமிழ் வார்த்தைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் அது பழக்கத்தில் சரளமாக வரமாட்டேன் என்கிறது.

வேதம், யாகம் முதலியன சிலர் சொல்கிற மாதிரி தமிழ்நாட்டின் ஆதி நாகரிகத்துக்குப் புறம்பாகப் பிற்பாடு வந்தவை என்றால், யாகம், வேதம் முதலிய பதங்களுக்குச் சரியான தமிழ் வார்த்தை இருக்க முடியாது. ஆனால் மிக மிகப் பழைய தமிழ் இலக்கியங்களிலேயே 'வேதம்' என்பது 'மறை' என்றும் யாகம் என்பது வேள்வி என்றும் புகழ்ந்து பேசப்படுகின்றன. இவை மிகவும் அர்த்தபுஷ்டி நிறைந்த பதங்கள் என்பதை சம்ஸ்கிருதப் பண்டிதர்கள், தமிழ்ப் புலவர்கள் இருவருமே ஒப்புக் கொள்வார்கள். வேட்டலிலிருந்து 'வேள்வி' வந்திருக்கிறது. எல்லா தர்மத்துக்கும் வேரான வேதம், வேரைப் போலவே வெளியே தெரியாமல், அதாவது எல்லாரிடமும் புழக்கத்துக்கு வராமல், அதை ரக்ஷிப்பதற்கான கடும் நியதிகளைப் பின்பற்றும் சிலரிடமே மறைந்து இருக்க வேண்டும் என்ற உயர்ந்த கருத்தைச் சொல்லும் வார்த்தைதான் மறை. வைதிகப் பண்பாடும், யக்ஞ அனுஷ்டானமும் தமிழ்நாட்டில் ஊறிப் போயிருந்தாலொழிய அந்த நாகரிகத்தைக் காட்ட இத்தனை அழகான சொந்த மொழி வார்த்தைகள் உண்டாகியிருக்க முடியாது. வேதத்தை எழுதி வைத்துப் படிக்காமல் தலைமுறைத் தத்துவமாக வாயால் சொல்லிக் காதால் கேட்டே அறிய வேண்டும் என்பதால் தமிழில் 'எழுதாக் கிளவி' என்ற பெயரும் வேதத்துக்கு உள்ளது. கேள்வியாலேயே பாடம் பண்ணுவதால்தான் வேதத்துக்கு சம்ஸ்கிருதத்திலும் 'ச்ருதி' என்று பேர். 'மறை' என்பதைப் போல் வேத லட்சணத்தைப் பளிச்சென்று சொல்கிற நேர் வார்த்தை, சம்ஸ்கிருதத்திலேயே இல்லை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்காராச்சாரிய சுவாமிகள்.

களாம்...''

''ஆமாம்.''

''தப்பா நினைக்காதீங்க. உங்க சௌகரியம் எப்படி, ஏதுங்கிறதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் இப்படி ஒரு யோசனையை உங்களுக்குச் சொல்றது அதிகப்பிரசங்கித்தனம்னு நீங்க நினைச்சா தயவு செய்து என்னை மன்னிச்சிடுங்க.''

''சரி விஷயத்தைச் சொல்லுங்க.''

''உங்க வீட்டுக்காரர் வேலை செய்யற கம்பெனி அல்லது ஆட்கிட்டேயே டிரான்ச் இங்கே கிடையாதோ?'' கேட்டபோதே சங்கரலிங்க மூர்த்திக்குக் கொஞ்சம் அச்சம் ஏற்பட்டது. ஏனெனில் அந்தப் பெண் தன் முகத்தில் துளியும் இரக்கம் காட்டாமல் அவனை உர்ரென்று பார்த்தபடி இருந்தாள்.

''என்னோட ஹஸ்பெண்டை இந்த ஊருக்கு மாத்திட்டு வரச் சொல்லி யோசனை சொல்றீங்களா?'' என்று சற்றுப் பொறுத்து அவள் கேட்டபோது அவள் குரலில் தெறித்த கிண்டல் அவனது நாவை உலர்த்தியது.

''தப்பா எடுத்துக்காதீங்க மேடம். எங்கப்பா அம்மாவோட அவங்க கடைசிக் காலத்திலே இருக்கணும்கிற ஆசையால கேட்டுட்டேன். உங்களுக்குப் பிடிக்கலேன்னா விடுங்க....''

மூர்த்தியின் முகம் போன போக்கைப் பார்த்து மாலதி சட்டென்று அனுதாபமுற்றதாய்த் தோன்றியது. முகத்தில் ஒரு சின்ன இரக்கக் கீறல் விழுந்திருக்க, விழிகளில் சீற்றமும் சிறிது குறைந்திருந்தது.

''ஒண்ணு செய்யுங்க. நீங்க வேணா என்னோட வீட்டுக்காரரைப் பார்த்துப் பேசுங்க.''

''அய்யோ, அவரையா பார்த்துப் பேசச் சொல்றீங்க?''

''ஆமா. நான் இதுல எதுவும் செய்யறதுக்கில்லே. அவர் இங்க மாத்திக்கிட்டு வந்தாருன்னா எனக்கும் சந்தோஷம்தான். ஏன்னா, எங்க அப்பா அம்மா இதே ஊர்ல இருக்காங்க. அவங்களுக்கு நான் ஒரே பொண்ணு. சேர்ந்து இருக்காட்டியும் ஒரு சமயம் போதுன்னு போகக் கொள்ள வசதியாக இருக்கும். ஆனா, அதை நான் எங்க வீட்டுக்காரர்கிட்டே கேட்க முடியாது. ஆம்பளைங்களுக்கு இதெல்லாம் பெரிய கௌரவப் பிரச்னையாயிடும். ஆம்படையான் வேலை செய்யற ஊருக்குப் பொண்டாட்டிதான் ட்ரான்ஸ்ஃபர் வாங்கிட்டு வரணும்னு நினைப்பாங்களே ஒழிய, அவங்க ஒருபோதும் மாத்திக்கிட்டு வரமாட்டாங்க. இத்தனைக்கும் அவருக்கு வயசான அப்பா அம்மா இல்லே— உங்களுக்கும் எனக்கும் இருக்கிற மாதிரி...''

மூர்த்தியின் நம்பிக்கை சிதைந்து போயிற்று. மூன்றுமலையை தனது கோரிக்கையை ஏற்றுச் சென்னைக்கு வர முன்பின் தெரியாத ஒரு மனிதனுக்குப் பைத்தியமா என்ன என்று நினைத்து அந்த யோசனையை அந்தக் கணமே கைவிட்டுவிட்டு, ''ரொம்ப தாங்க்ஸ்ங்க உங்களுக்கு. அவரைப் பார்த்துப் பேசறது சரியா இருக்காது'' என்று




ராமு: எனக்கும் என் காதலிக்கும் எப்படிப் பட்ட அவசர வேலை இருந்தாலும், நான் V சர்வீஸிலும், என் காதலி J சர்வீஸிலும் ஏறமாட்டோம்!

சோமு: ஏண்டா!

ராமு: நான் ஜெயலலிதா கோஷ்டி, என் காதலி வீரப்பன் கோஷ்டியாச்சே!

— ஒழவெட்டி சொல்லழகன்



கூறி அவன் சோர்வுடன் தனது இருக்கைக்குத் திரும்பினான்.

அன்று மாலை வீடு திரும்பியபோது அவனது உற்சாகமற்ற முகத்தைக் கவனித்து, ''என்ன ஆச்சு? ஆபீஸ்ல ஏதானும் ரகளையா?'' என்று அவன் மனைவி ரங்கம்மா விசாரித்தாள். காப்பியை வாங்கிக் குடித்துக் கொண்டே, ''இந்த ரகளைங்கிற வார்த்தையை விட மாட்டியா?'' என்று அவன் அவளை முறைத்தான். ரங்கம்மா அடிக்கடி ரகளை என்றசொல்லைத்தான் பேச்சில் பயன்படுத்துவாள். சில நேரங்களில் அந்தச் சொல் இடத்துக்குப் பொருந்தாமல் தனித்து நிற்கும். மூர்த்தியும் அடிக்கடி சொல்லிப் பார்த்துச் சலித்துப் போய்விட்டிருந்தான்.

''சரி ரகளை வேண்டாம், தகராறு?''

''என்னைப் பார்த்தா தகராறு பண்றவன் மாதிரியா தெரியறது?''

''அய்யோ அய்யோ. தகராறுன்னு அதை நீங்கதான் பண்ணினீங்கன்னு அர்த்தமாயிடுமா? மத்தவங்க உங்ககிட்டே தகராறு பண்ணி இருக்கலாமில்ல?''

மூர்த்தி சேதியைச் சொன்னான். ஊட்டிக்கு மாற்றல் வாங்கிச் செல்லுதல் அப்போதைக்குச் சாத்தியமில்லை என்ற நிலை தனக்கு ஏற்படுத்தும் ஏமாற்றத்தைப் பற்றிச் சொன்னான்.

''சரி, விடுங்க. எல்லாம் நம்ம தலை எழுத்து'' என்றாள் ரங்கம்மா.

மறுநாள் அவன் சற்றும் எதிர்பாராத திருப்பம் ஒன்று விளைந்தது. மாலதியின் கணவனை அவனது அலுவலகமே பதவி உயர்வு கொடுத்து, ஊட்டியிலிருந்து சென்னைக்கு மாற்றல் வழங்கிவிட்டிருந்த செய்தி மாலதிக்கு, தொலைபேசி வாயிலாக வர, அவள் அதை உடனடியாக மூர்த்தியிடம் தெரிவித்து, ''கங்கிராட்ஸ்'' என்று புன்னகையும் புரிந்தாள்.

மாலதியின் சிடுசிடு முகத்துப் புன்னகை அவள் சொன்ன சேதியைவிடவும் மூர்த்தியை அயர்த்தியது. இருப்பினும் நிர்வாகியால் குறிப்பிடப்பட்ட அந்த மேல்நிலை எழுத்தர் ஊட்டியில் பணியிலிருந்து மூன்று மாதங்கள் கழித்து ஓய்வு பெற்ற பிறகுதான் அந்தக் காலியிடம் அவனுக்குக் கிடைக்கும். அவன் யோசிக்கத் தொடங்கினான். வீட்டுக்குப் போனதும் ரங்கம்மாவின் யோசனையைக் கேட்க முடிவு செய்தான்.

மாலையில் வீடு திரும்பியதும், சேதியை அவளிடம் தெரிவித்தான்.

''ஏங்க, உங்க அப்பாவும் அம்மாவும் உங்க அண்ணன் வீட்டுல தங்கற முறை முடிஞ்சு, பம்பாயிலிருந்து புறப்பட்டு, இன்னும் ஒரு மாசத்துல இங்கே வந்து இருக்கப் போறதா எழுதி இருக்காங்கல்ல?

''ஆமா. அதுதான் கவலையா இருக்கு.''

''அவங்கரெண்டுபேரும் உங்க அண்ணன் கிட்டேயிருந்து இங்க வர்றதுக்குள்ள நமக்கு ஊட்டி போக முடிஞ்சுட்டா, ஊட்டி குளிர் வயசான அவங்களுக்கு ஒத்துக்காதுன்னு சொல்லி இரண்டு பேரையும் பம்பாயிலேயே இருக்கச் சொல்லிடலாம். அதுக்குள்ள இங்க வந்து தொலைஞ்சுட்டாங்கன்னாத்தான் வம்பாப் போகும்.''

''அதுக்குத்தான் நீ ஒரு யோசனை சொல்லேன்.''

ரங்கம்மா சில நொடிகள் போல் யோசித்துவிட்டுச் சொன்னாள். ''ஒண்ணு வேணாப் பண்ணலாமா....? இப்பவே நாம ஊட்டிக்குப் போய் இருக்கத் தொடங்கிடலாம். உங்களுக்கோ எக்கச்சக்கமா லீவ் இருக்கு. எடுங்க. ஆண்டவன் புண்ணியத்துல இப்ப சத்தியா நமக்குக் குளிர் தாங்கற உடம்பு இருக்கு. லீவ்ல போய் ஊட்டியிலே இருந்துடலாம். ட்ரான்ஸ்ஃபர் கிடைச்சதும் இங்க வந்து வேலையில சேர்ந்து கையெழுத்துப் போட்டுட்டு நீங்க ஊட்டிக்குத் திரும்பி வந்துடுங்க. உங்க ஊட்டி ஃப்ரெண்ட் சேஷாத்ரிக்கு இப்பவே ஒரு கடுதாசி போடுங்க — அவங்க வீட்டு மாடிப்போர்ஷனை நம்ம குடும்பத்துக்கு விடச் சொல்லி. அவருதான் நாம எப்ப வந்தாலும் வீடு ரெடின்னு சொல்லி இருக்காரே?''

''அப்படியே செய்யறேன்...'' என்ற மூர்த்தி ஊட்டி நண்பனுக்குக் கடிதம் எழுதிப் போட்டுவிட்டுத் தன் தகப்பனுக்கும் ஒரு கடிதம் எழுதினான். தன்னைத் திடீரென்று ஊட்டிக்கு மாற்றிவிட்டதாகவும், ஆஸ்துமா நோய்க்காரர்களான இருவரும் ஊட்டியில் வசிப்பது நல்லதில்லை என்றும், எனவே பம்பாயிலேயே தங்கிக் கொள்ளுமாறும் அடிக்கோடிட்டு அவன் அதில் குறிப்பிட்டான்.

நிழல் யுத்தம்

பாலகுமாரன்

14

ஆனால் சங்கரன் கெட்டிக்காரர். மாப்பிள்ளைக்கு நேர் எதிரே நின்று ஃப்ளாஷ் போட்டு எடுப்பதில் கண்கூச்சம் வருகிறதென்று போட்டோக்காரன் காதோடு சொல்லிப் பக்கவாட்டாகவே எடுக்கச் சொன்னார். அம்மாவைப் பரிசோதிக்க டாக்டருக்குச் சொல்லி அனுப்பி, அவர் சோதித்து நேரடியாய் முரளியிடம் வந்து கைகுலுக்க வைத்து, வெறும் உடல் அயர்ச்சி, தூங்கினால் சரியாகிவிடும் என்று சொல்ல வைத்தவர், முரளியின் அம்மாவுக்குச் சத்திரத்திலேயே தனியறை ஒழித்துக் கொடுத்து, தூங்கப் பண்ணி, அவன் உறவுப் பெண்களைக் காவலுக்கு இருக்கப் பண்ணி, 'இன்னும் ஏதாவது செய்யணுமா?' என்று கைகட்டி நின்றார்.

ஊர் உலகம் சுற்றினாலும் அடிவேர் சங்கரனுக்கு மாயவரம் காவிரி பாயும் தஞ்சை ஜில்லா. சின்ன இமைச் சுளிப்பு கூடச் செய்தி காட்டிவிடும் அவருக்கு. மாப்பிள்ளையின் முகச்சுளிப்பை அவர் கவனிக்காது போனாலும் கவனித்துச் சொல்ல ஆள் போட்டிருந்தார்.

ரிஸப்ஷன் மெல்லக் கலைய ஆரம்பித்தது. பெண்ணும் பிள்ளையும் மாலைகளை அவிழ்த்துவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தார்கள். லலிதாவை மறுபடியும் நிற்க வைத்துப் பாயசம் பரிமாறச் சொன்னார்கள். பரிமாறின பாயசத்தை முரளியைச் சாப்பிடச் சொன்னார்கள். ஜாங்கிரியைப் பாதி கடித்துத் தின்னச் சொல்லி இலை மாற்றிப் போட்டார்கள். சாப்பிடுவதைச் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

உணவு உண்டு முடித்தவுடன் லலிதாவைத் தோழிகள் தனியே அழைத்துப் போனார்கள். உயர ஸ்டூலில் நிற்க வைத்துக் கைதட்டினார்கள். முத்தம் கொடுத்து முத்தம் பெற்றுக்கொண்டார்கள். அதுதான் கடைசிக் கன்னி முத்தமாம். பிறகு ஆண் எச்சில் பட்டுவிடுமாம்.

புருஷனை அழைத்து வர ஏவினார்கள். சுற்றிலும் லலிதாவின் தோழிகள். அருகே லலிதா, இவன்.

"வொய் ஸன்னி... நோ ஸ்மைல்...?" ஒரு பெண் உடைந்த ஆங்கிலத்தில் கேட்டாள். குபீரென்று சிரித்தார்கள். காது காதாய்க் கிசுகிசுத்தார்கள்.

"லலிதா ஈஸ் வெரி கோ—ஆபரேடிவ். டோண்ட் வொர்ரி." மறுபடியும் சிரித்தார்கள். கண்களில் காமம் வழிந்தது. கன்னங்கள் சிவந்து சிவந்து அடங்கின. நிலை கொள்ளாத பெண்களை அன்றுதான் முதன் முதலாய் முரளி பார்த்தான்.

"மந்தையில் உள்ள ஓர் ஆண் ஆட்டையும் பெண் ஆட்டையும் தேர்ந்தெடுத்து இடையன் அவைகளுக்குத் திருமணம் செய்தான். தனியே ஒரு பட்டியில் அடைத்தான். பெண் ஆட்டை ஆண் ஆடு, காதல் செய்யலாமா என்று கேட்டது. சரி என்றது பெண் ஆடு. உடன் ஆண் ஆடு பட்டியின் எதிர் மூலைக்கு ஓடிப் போய்ப் பெண் ஆட்டை நோக்கி ஓடி வந்து படீரென்று நெற்றியில் கொம்பால் முட்டிற்று. பெண் ஆடு சலித்துக் கொண்டு, 'முட்டாள்! இப்படியா காதல் செய்வது?' என்று கோபித்துக் கொண்டது. ஆண் ஆடு திகைத்து நின்றது.

"இப்போது ஆண் ஆடு பெண் ஆட்டிடம் என்ன கேட்கும் சொல்லுங்கள்? ஆண் ஆடு பெண் ஆட்டிடம் என்ன கேட்கும்?"—விடுகதையாய் ஒரு பெண் முரளியைக் கேட்டாள்.

முரளி தயங்கினான். பெண்கள் வற்புறுத்தினார்கள். முரளி கூறினான்:

"காதல் செய்வது எப்படி என்று...."

"முட்டாளே என்னிடம் ஏன் கேட்கிறாய். உன் பெண் ஆட்டிடம் கேள்." அந்தப் பெண் படீரென்று பதில் சொன்னாள்.

கூட்டம் ஓவென்று சிரித்தது.

முரளியும் சிரித்தான். தலையில் அடித்துக் கொண்டான்.

"கதையை முதலிலிருந்து ஆரம்பிக்கலாமா... நீங்கள் ஆண் ஆடு. இவள் பெண் ஆடு. மேய்ப்பன் என்கிற கடவுள் உங்களுக்குத் திருமணம் செய்து தனிப் பட்டியில் அடைத்து விட்டான். நீங்கள் பெண் ஆட்டிடம் காதல் செய்யலாமா என்று கேளுங்கள். ம்ம்... கேளுங்கள்..."

"பெண் ஆடே... காதல் செய்யலாமா?" முரளி கேட்டான்.

"ஏய்... நீ சரியென்று சொல். சொல் உடனே."

லலிதா சரியென்று தலையசைத்தாள். "இப்போது. ஆண் ஆடு அந்த மூலையிலிருந்து ஓடி வருகிறது. வாருங்கள். இந்த மூலையில் நில்லுங்கள். ஓடிப் போய் அவள் தலையில் முட்டுங்கள். ம்.... மெள்ள முட்ட வேண்டும். ரெடி.... ஒன்.... டூ.... த்ரீ....." முரளி வேகமாய் நடந்து போய் லலிதாவின் தலையில் மெல்ல முட்டினான்.

லலிதா செம்மையாகித் தலை குனிந்தாள்.



நெற்றியைத் தடவிக் கொண்டாள்.

"ச்சே... இப்படியா காதல் செய்வது...? கேள்... லலிதா, ப்ளீஸ் கேள்..."

"எப்படியாவது செய்து கொள்ளுங்கள்." கூட்டமாய்ப் பெண்கள் ஒரே குரலில் கூவினார்கள். அறையை விட்டு ஓடினார்கள். "குட் நைட்... ஸ்வீட் ட்ரீம்ஸ்" என்று வாசல் படியில் போய்ச் சிரித்தார்கள்.

லலிதா தலையைக் குனிந்தபடி இருந்தாள்.

முரளி திருமணம் செய்த ஆண் ஆட்டையும் பெண் ஆட்டையும் நினைத்துக் கொண்டான்.

நிமிட நேரத்தில் ஒரு சின்னக் கதையில் மிருக வெறியை அந்தப் பெண்கள் ஏற்றி விட்டதை உணர்ந்தான். மெல்ல லலிதாவின் கரம் பற்றினான். அருகில் இழுத்தான். லலிதா நிமிர்ந்தாள். விழியில் கிறக்கம் தெரிந்தது. மெல்ல இடுப்பை அணைத்தான். அவன் கழுத்தில் முகம் பதித்தாள். கைகளைப் பிரித்துத் தோள்களின் பின்பக்கம் பற்றினாள். கால் பலம் குறையத் தோள் பிடியை இறுக்கினாள். இடுப்பு இறுக்கத்தை முரளி அதிகமாக்கித் தன்னோடு இழுத்துக் கொண்டான். மெல்ல அவள் கன்னத்தில் முத்தமிட்டான். லலிதா இடது கையைத் தோளிலிருந்து விலக்கி அவன் வலது கையைப் பிணைத்துக் கொண்டாள். அழுந்தப் பற்றிக் கொண்டாள். அவன் மெல்ல அவள் முதுகை இடக் கையால் வருட, சொக்கினாள். கண் மூடிக் கிடந்தாள்.

"முரளி..." யாரோ கதவு தட்டினார்கள். இருவரும் விடுவித்துக் கொள்ள வாசலில் சங்கரன் நின்றிருந்தார்.

"மணி பத்தாயிடுத்து. நம்ம வீட்டுக்குப் போகலாமா... அங்கேதான் ஏற்பாடு பண்ணியிருக்கு..." அம்பாஸிடர் காரில் ஆறு பேர் அடைந்து ஏறிக் கொள்ள முரளி வெகு நெருக்கமாய் லலிதாவுக்கு அருகில் உட்கார்ந்திருந்தான். லலிதாவின் தோள் சுற்றிக் கைபோட்டுக் கார் கதவைப் பிடித்துக் கொண்டிருந்தான்.

வீடு வந்து இறங்கியதும் ஆரத்தி எடுத்தார்கள். வேட்டி சட்டைக்கு மாறச் சொன்னார்கள். லலிதா மஞ்சள் நைலக்ஸ் புடைவையில் வெளியே வந்தாள். இருவரும் சங்கரனின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தார்கள். சங்கரன் தலை தொட்டு ஆசீர்வதித்தார். இரண்டு பேர் கன்னங்களையும் வருடி வாயை நோக்கிக் கைகூப்பினார்.

பனித்தென்று முகத்தைத் துணியில் பொத்திக் கொண்டு விசும்பி விசும்பி அழுதார். தோள்கள் குலுங்கின. கண்ணில் ஜலம் ப்ரவாகமாயிற்று. முரளி அந்தத் தகப்பனின் சந்தோஷம் கலந்த துக்கத்தைத் தன் வயிற்றுள் உணர்ந்தான். மெல்ல அவரைத் தோளோடு அணைத்துக் கொண்டான்.

"தாயில்லாத பொண்ணுப்பா. தானே சமைச்சு தானே உடுத்தி, தானே தலை பின்னி, தானே வளர்ந்த பொண்ணுப்பா. அவள் என்ன தப்பு பண்ணினாலும் எனக்காக மன்னிச்சுடு. அம்மா இல்லாத குழந்தைன்னு நினைச்சுக்கோ!"

"ச்சே... என்ன இது..." முரளி அவரை இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

"என் நாலு சகோதரிகள் நாய் படாத பாடுபட்டார்கள், புருஷன்கிட்டே. என் செல்லக் குழந்தைக்கு அந்த மாதிரி நிலை வரக் கூடாதுன்னு....."

"வராது, வராது. அவளை நான் நன்றாக வைச்சுப்பேன்."

"தேங்க்யூ... தேங்க்யூ முரளி!" மாமனாரும் மருமகனும் தழுவிக் கொண்டனர்.

"தாயே... உனக்குப் படிப்பு சொல்லிக் கொடுத்து, பாட்டு சொல்லிக் கொடுத்துக் கெட்டிக்காரியா வளர்த்தேன். இப்ப நல்ல புருஷனையும் தேடிக் கொடுத்திருக்கேன். புருஷன் சந்தோஷமா இருந்தால் அந்த வீடு சந்தோஷமா இருக்கும். புருஷனை சந்தோஷப்படுத்தணும். வெவ்வேற இடத்துல வெவ்வேற இடத்திலே வளர்ந்து ஒண்ணாரப்போ பிடிச்சது பிடிக்காதது வெவ்வேறாக இருக்கும். இது ஒருமைப்பட நாளாகும். பொறுமையா நிதானமா ஒண்ணுக்குப் பத்து தரம் பேசிப் பழகி மனசு புரிஞ்சு நடந்துக்கணும். நீ கெட்டிக்காரி. உனக்குப் புரியும். போய்ட்டு வா."

மறுபடியும் வணங்கி எழுந்தார்கள்.

முரளி மாடிப்படி ஏறினான்.

மாடி ஹாலில் பியானோவுக்கு நேர் எதிரே கட்டில் போட்டிருந்தது. பூக்கள் தூவியிருந்தது. பழத் தட்டும், நிலைக் கண்ணாடி மேஜையும் வாசனைத் திரவியங்களும் வைக்கப்பட்டிருந்தன. மெல்லிய வாசனை அறையில் மிதந்தது.

லலிதா மெட்டி ஒலிக்கப் படியேறி வந்தாள். கையில் பால் சொம்பு இருந்தது. உள்ளே வந்து மின்விசிறியைச் சுழல விட்டாள். தம்ளரில் பால் ஊற்றிக் கொடுத்தாள். திரட்டுப் பாலை ஸ்பூனில் வழித்து அவன் வாயில் போட்டாள்.

"உட்காருங்களேன்" என்றாள்.

பால் தம்ளரோடு முரளி உட்கார்ந்தான்.

அருகில் அமர்ந்து தோளில் சாய்ந்து கொண்டாள்.

முரளி ஒரு மிடறு பால் குடித்தான்.

"அங்கே பாருங்களேன்" என்று கை காட்டினாள்.

கட்டிலுக்கு நேரே நிலைக் கண்ணாடியிருந்தது. அருகருகே உட்கார்ந்திருக்கும் தம்பதி உருவங்களைப் பிரதிபலித்தது. முரளி இடக் கைக்குத் தம்ளரை மாற்றி வலக்கையால் சுதந்திரமாய் அவளை அணைத்துக் கொண்டான்.

லலிதா இன்னும் நெருங்கி அவனோடு ஒட்டிக் கொண்டாள். ஒட்டிக் கொண்டபடியே கண்ணாடியைப் பார்த்தான்.

"அதோ ரெண்டு பேரும் யாரு?" என்று கண்ணாடியைக் காட்டிக் கொஞ்சினாள்.

"ஆண் ஆடு, பெண் ஆடு. மேய்ப்பன் இரண்டையும் பட்டில போட்டு அடைச்சுட்டான். உட்கார்ந்து இரண்டும் கண்ணாடி

நீண்ட காலம் நிற்காமல் உழைக்கும் சக்தி

நிப்போ சூப்பர் பென்லைட்



புதிய நிப்போ சூப்பர் ஜிங் குளோரைடு பென்லைட் செல்கள்.



- உங்களுடைய காமிரா ஃப்ளாஷ், வாக்மன் மற்றும் உங்கள் குழந்தைகளின் எலெக்ட்ரானிக் விளையாட்டுப் பொருள்களுக்காக மட்டுமே சிறப்பாகத் தயாரிக்கப் பட்டவை.
- அகில உலகப் புகழ் பெற்ற நேஷனல், ஜப்பானின் தொழில் நுட்ப கூட்டுறவுடன் இந்தியாவில் இன்டோ நேஷனல் லிமிடெட்டினால் உருவாக்கப்பட்டவை. உங்களுக்கு இன்று உலகமெங்கும் உபயோகிக்கப்படும் நவீன ஜிங்க்ளோரைட் டெக்னலஜியின் தரமான பயன் கிடைக்கிறது.
- 'மல்டிபிள் இன்டக்ரேடட் ஸீலிங்' உங்களுக்கு நீண்ட கால உழைப்பை உறுதி செய்கிறது. உங்களுடைய எலெக்ட்ரானிக் சாமான்களுக்கு இரட்டிப்பு பாதுகாப்பு கூட.
- இன்டோ நேஷனலின் அதி நவீன தொழிற் கூடத்தில் தயாரிப்பு.

நிப்போ சூப்பர்

அபார சக்தி கொண்ட பாட்டரி

everest/S/87/INL/60 Tam B

யைப் பார்த்து முழிச்சிண்டிருக்கு.''

''எதுக்கு?''

''காதலிக்கிறது எப்படின்னு தெரியலை.''

''எதுக்கு?''

''இரண்டுக்கும்தான்.''

''உங்களுக்குத் தெரியாதா?''

''சொல்லக் கேள்வி. இனிமேல்தான் தெரிஞ்சுக்கணும்.''

''நான் புக்ஸ் படிச்சுத் தெரிஞ்சுண்டேன்.''

''எனக்கும் புக்ஸ் நாலெட்ஜ்தான்.... ஃப்ரெண்ட்ஸ் பேசுவா.''

''வேற ஏதாவது பேசிண்டிருப்போமா?''

''பியானோ வாசியேன்.''

''தூங்கலையான்னு கேள்வி வரும்?''

''சின்னதா.... சப்தமில்லாம....''

பலமான மழைத் துளிகள் பீங்கான் கிண்ணத்தில் தெறித்ததென ஒரு துள்ளல் நோட்ஸ் லலிதா வாசித்தாள்.

முரளி அவள் முதுகு மீது சாய்ந்தபடி அவள் விரல் வேகம் பார்த்தான்.

தோள் பக்கமிருந்து தாலிக்கொடி நெஞ்சு மேட்டு மீது பதிந்திருப்பதைப் பார்த்தான்.

மெல்லத் தாலிக்கொடி மீது ஒற்றை விரல் வைத்துத் தடவிக் கொண்டே போய் மேட்டின் மீது நிறுத்தினான்.

லலிதா வாசிப்பை நிறுத்தினாள். அவன் ஒற்றை விரலைப் பற்றிக் கொண்டாள். நெஞ்சோடு அழுத்தினாள். கண்களை மூடிக் கொண்டாள். முரளி தலைக்குள் சின்னக் கிறுகிறுப்பை உணர்ந்தான்.

குனிந்து அவன் கழுத்தை முத்தமிட்டாள்.

லலிதா பியானோ மீது சாய்ந்து கொண்டாள். அவன் வலக்கை விரலை விடாது பிடித்துக் கொண்டிருந்தாள். முதுகு முழுவதும் படர்ந்த புருஷன் சூட்டை உணர்ந்தாள்.

இருவரும் எழுந்தார்கள். கட்டிலை நோக்கி நடந்தார்கள். உட்கார்ந்தார்கள். இன்னும் நெருக்கமாய் அணைத்தபடி கண்ணாடி பார்த்தார்கள். லலிதா எக்கித் தலைமாட்டில் உள்ள பிளாஸ்டிக் கயிற்றை இழுத்தாள். ட்யூப் லைட் பளிச்சென்று அணைந்தது. விடிவிளக்கு மட்டும் சிரித்தது. இரவு முழுவதும் காவல் காத்தது.

ஆண் ஆடு நெற்றியில் முட்டிற்று.

பெண் ஆடு அலுத்துக் கொண்டது. இப்படியா காதல் செய்வது என்று முனகிற்று.

எப்படியோ ஒரு காதல் செய்கை நிறைவேறியது.

உடம்பு ஓர் இலக்கணம்.


தொடல் ஒரு மொழி.

உணர்வு உயரத் தூக்கிப் போகக் கவனமாய் யோசித்து யோசித்துத் தடவித் தடவி முயற்சி செய்யக் கவிதை வரும்.

கொஞ்சம் மயக்கமும் இதமான சூழ்நிலையும் கவிதைக்கு மெருகு தரும்.

கூடல் அங்கே கவிதையாயிற்று!

(தொடரும்)



ஆண்களை நம்பாதே



வெகுநாட்களாகச் சொந்த ஊரில் பெண் தேடி, சரியான, மனத்துக்குத் திருப்தியான பெண் கிடைக்காமல், ஊட்டியில் போய் வேலைக்குச் சேர்ந்து அங்கே தனக்கேற்ற பெண்ணைத் தேடிக் கொள்ளலாம் என்று சொந்த ஊரை விட்டுப் புறப்படுகிறார் ஹீரோ. போய்ச் சேர்ந்த இடத்தில் ஒரு பெண்ணைப் பார்க்கிறார். சிக்கென்று இருக்கும் அந்தப் பெண், ஹீரோவின் கனவுலக நாயகியாய்ப் போய்விடவே காதலிக்கத் தொடங்குகிறார். ஹீரோயினோ தன் ஊமைத் தோழியின் வாழ்க்கை சீர்படுவதற்காகத் தன் ஊமைக் காதலை மனத்திற்குள்ளேயே நசுக்கிவிட்டு ஹீரோவிற்கும் ஊமைத் தோழிக்குமாகச் சேர்த்து ஒரு முடிச்சுப் போட்டு விடுகிறார்.

இந்தக் கதையை எடுத்துக் கொண்டு அப்படித் திருப்பி, இப்படிப் புரட்டி நகைச்சுவை பாலிஷ் ஏற்றி நம்மிடம் கொடுத்திருக்கிறார் திரைக்கதை வசனம், டைரக்ஷன் ஆகியவற்றுக்குப் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கும் அலெக்ஸ் பாண்டியன்.

செந்தில், சார்லி, பாண்டியன், அலெக்ஸ் பாண்டியன் (டைரக்டரேதான் — அவரும் ஒரு வேஷம் கட்டியிருக்கிறார்) நான்கு பேருமாய்ச் சேர்ந்து அடிக்கிற கூத்து அவ்வப்போது சிரிக்க வைக்கிறது.

செந்தில் ஊட்டி வீட்டில் இருக்கும் கம்மோடை வெந்நீர் அடுப்பாகப் பாவித்து விறகு நுழைத்துப் பற்ற வைப்பதும், சீர்ல் சொல்கிறேன் பேர்வழி என்று முதலுக்கே மோசம் பண்ணுவதும் நல்ல கலகல என்றால் சூப்பர் வீரர்கள் நான்கு பேரும் காதலனையும் காதலியையும் கட்டி விட்டுப் போவது நல்ல கற்பனை.

ரேகா பளிச் என்று இருக்கிறார். பளிச் என்று சிரிக்கிறார். பளிச் என்று நடிக்கிறார்.

ரம்யா கிருஷ்ணனுக்கு வெளுத்துக் கட்டுமளவிற்குப் பாத்திரம் அமையாததால் குண்டு சட்டியிலேயே குதிரை ஓட்டப் பார்க்கிறார்.

இந்த அலெக்ஸ் பாண்டியன் அறிமுகமாகும்போது மோட்டார் சைக்கிள் தூள் பறக்கிறது. அடேயப்பா சரியான முரட்டு ஆசாமியை அறிமுகப்படுத்தப் போகிறார்கள் என்று பார்த்தால் மென்மையான பஞ்சு இதய ஆசாமி. (வசனம் பேசும்போது நாக்கு மக்கர் செய்கிறதோ என்னமோ. அங்கங்கே புரிய மாட்டேன் என்கிறது)

ஊட்டி என்றால் சிலர் காமிரா என்னமாய்ப் புகுந்து விளையாடும்? இந்தப் படத்தில் காமிரா — ஊஹூம்!


கல்யாணமாகிவிட்டது என்று சொல்லும் ஹீரோயினைத் துரத்தித் துரத்தி 'என்னைக் காதலி', 'என்னைக் காதலி' என்று ஹீரோ சொல்வது, ஹீரோவினை சொல்கிறாற்போல் சுத்தப் பைத்தியக்காரத்தனம். ஸ்டெல்லா புரூஸின் மூலக் கதையில் கோளாறு, அலெக்ஸின் திரைக்கதையில் கோளாறு, தெரியவில்லை.

ரேகாவின் கணவன் என்று சொல்லிக் கொண்டு அடாவடித்தனம் பண்ணும் அந்த ஆசாமியும் அலெக்ஸ் பாண்டியனும் வெகு சூடான, சளைக்காத பத்து ரவுண்ட் பாக்ஸிங் போடப் போகிறார்கள் என்று பார்த்தால் கீரி—பாம்பு வித்தை சண்டையாகிவிட்டது அந்த ஸீன்.

படத்துக்குச் சுறுசுறுப்பு ஊசி போட்டு, கிளைமாக்ஸுக்கு வேக மருந்தை ஊட்டியிருந்தால் தியேட்டரை விட்டு வெளியே வருகையில் ஒரு நிறைவு இருந்திருக்கும்.

— ஜெயமன்மதன்

ஆறுதலுக்கு ஒரு மாறுதல்





பஸ்! என் காலேஜ்லே வந்து சேர்ந்துடு!
நோ..நோ.. என் காலேஜ் தான்!
வேண்டாம்.. என் வாங்க.. காலேஜ்


அழுக்கு கறை படிந்த கரங்களை பளிச்சிடும் வெண்மையாக்கும் 'ரின்'
நல்ல வேளை! நான் பொழச்சேன்! உடம்புக்கு ஆபத்து இல்லே! கறை தான் ஒழியுது!


ஒரு கிலோ உப்புக்கு ஒரு மூட்டை அரிசி இனாம்!
மளிகைக் கடை
PROVISIONS
விலைவாசியைக் குறைக்காதே!



நீங்க ஜெயிச்சதுலே அதிசயம் ஒண்ணுமில்லே! நானே உங்களுக்குத் தான் ஓட்டுப் போட்டேன்!


மழை பொழியும் மேகத்தை இழுத்துட்டு வந்துட்டேன்

மனச்சிதைவு கண்டவரிடம்

தாங்க முடியாத சித்திரவதையை அனுபவித்துக் கொண்டிருந்தார் அந்தப் பெண்மணி. அவர் கண்களுக்கு மட்டுமே புலப்பட்ட ஓர் உருவம் மீண்டும் மீண்டும் அவர் எதிரே தோன்றிக் கொண்டிருந்தது. அதன் சைகைகளும் உத்தரவுகளும் அவருக்குக் குழப்பத்தையும் பீதியையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தன. **Schizophrenia** எனப்படும் மனச் சிதைவின் முற்றிய நிலையில் தோன்றும் அறிகுறிகளுள் ஒன்று தான் அப்பெண்மணியின் அனுபவம். **SCARF** என்ற **Schizophrenia Research Foundation (India)**—க்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டபோது அங்கு பணியாற்றி வரும் டாக்டர் ருத்ரனும் அவரது சகாக்களும் மிகுந்த பரிவோடும் பொறுமையுடனும் அவரை அணுகி அவரது நோயைக் குணப்படுத்தினார்கள். எப்படி.....?

பாதிக்கப்பட்ட பெண்மணியிடம் அவரை அச்சுறுத்திய உருவத்தை வர்ணிக்கச் சொல்லிக் கேட்டார்கள். அவர் வர்ணிக்க வர்ணிக்க மெல்ல அந்த உருவத்தை வரைபடமாக வடித்தார்கள். நோயாளியின் உதவியுடனேயே அதைத் திருத்தி, அச்சுறுத்திய உருவத்தைப் போலவே நூறு சதவிகிதம் இருக்கும்வரை கச்சிதப் படுத்தினார்கள். பிறகு அந்த வரைபடத்தை புரொஜக்டர் மூலம் திரையில் புரொஜெக்ட் செய்தார்கள். நோயாளி அதனை நன்கு அடையாளம் கண்டு கொண்ட பிறகு, புரொஜெக்டரை ஆஃப் செய்தார்கள். புரொஜெக்டரை இயக்கி உருவத்தைத் தோற்றுவிக்கவும் மறையச் செய்யவும் நோயாளிக்குக் கற்றுத் தந்தார்கள். இதை மீண்டும் மீண்டும் செய்து வந்தார் அந்நோயாளி. அவ்வுருவம் தன்னெதிரே தோன்றியபோது தன் மூளையில் ஒரு 'விசையை' இயக்கி அதனைப் பார்வையிலிருந்து, நினைவிலிருந்து அகற்ற முடியும் என்பதையும் மெல்ல மெல்ல அவர் உணர்ந்தார். படிப்படியாகக் குணமடைந்த அந்தப் பெண் இப்போது ஒரு சிறுதொழில் துவங்க இருக்கிறார்!



* சாக் கட்டிகள் தயாரிப்பு

சென்னை, அண்ணா நகரில் உள்ள ஸ்கார்ஃப் அலுவலகத்தில் டாக்டர் ருத்ரனைச் சந்தித்தபோது, "மனச் சிதைவின் முற்றிய நிலைக்கு அறிகுறியாக இத்தகைய உருவங்கள் தோன்றி அச்சுறுத்துவது அபூர்வம் என்று விளக்கினார். சாதாரணமாகக் குரல்கள் மட்டுமே ஒலித்து நோயாளியைச் சித்திரவதை செய்யும். இந்தக் குரல்களையும் உருவங்களையும் கற்பனை என்றோ மனப்பிரமை என்றோ ஒதுக்குவது சரியல்ல. நோயாளிகளைப் பொறுத்தவரை அவை நிஜ

மனமிரங்குங்கள்!

மானவை. அவர்கள் காதில் உண்மையிலேயே ஓர் அன்னியக் குரல் ஒலிக்கிறது. 'அதைச் செய், இதைச் செய்' என்று உத்தரவிடுகிறது. அக்கட்டளைகளை மீற முடியாமல் அவர்கள் கட்டுப்படும்போது, பார்ப்போருக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களை அவர் செய்வதாகத் தோன்றும்; பைத்தியக்காரத்தனமாக அவர் நடந்து கொள்வதாகத் தோன்றும்'' என்றார்.

மன நோயுடன் வருபவர்களை ஸ்கார்ஃப் ஏற்று குணப்படுத்தினாலும் அதன் முக்கிய நோக்கம் மனச்சிதைவுக்குச் சிகிச்சை பெற்று ஓரளவோ அல்லது பூரணமாகவோ குணமடைந்தவர்கள், தங்களது பழைய வாழ்க்கை முறைக்குத் திரும்பி, சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டு, ஒரு சராசரி மனிதனாக இருக்க உதவுவதுதான். இந்த உதவிகளை முழுக்க முழுக்க இலவசமாக அளித்து வருகிறது ஸ்கார்ஃப். நல்லெண்ணம் படைத்த ஒரு சிலரின் நன்கொடைகளைக் கொண்டு துவங்கப்பட்டு, டாக்டர் சாரதா மேனனின் தலைமையில் கடந்த மூன்று ஆண்டுகளாக இயங்கி வருகிறது. மனச்சிதைவைப் பற்றிய உண்மைகளைப் பொது மக்களிடையே பரப்பி, அந்நோயால் பாதிக்கப்பட்டு, குணமடைந்து, சமூக வட்டத்துக்குள் திரும்புவோரை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளச் செய்வதும் ஸ்கார்ஃபின் நோக்கங்களுள் ஒன்று.





* சமையல் அறையில்

இந்தச் சீரிய நோக்கங்களை நிறைவேற்ற நூதன முறைகளையும் கையாள்கிறது. நாடகச் சிகிச்சை என்றொரு வகை சிகிச்சை முறையை உருவாக்கியுள்ளார் உதவி இயக்குனர் டாக்டர் ருத்ரன். ஸ்கார்ஃபின் உதவி நாடி வருவோர் எல்லோரும் இணைந்து ஒரு கதையை உருவாக்குகிறார்கள். வட்டமாக அமர்ந்து கொண்டு ஒருவர் ஒரு வரியைச் சொல்ல, அடுத்தவர் அத்துடன் தொடர்புள்ள மற்றொரு வரியைச் சொல்ல, மூன்றாமவர் மேலும் ஒரு வரியைக் கூற, ஓர் எளிய கதை உருவாகிறது. இந்தக் கட்டத்தில் நோயாளிகளின் சிந்தனைக்கு வேலை தரப்படுகிறது.



* டாக்டர் ருத்ரன்

அடுத்த கட்டமாகக் கதையின் முக்கிய கதாபாத்திரத்தை வர்ணிக்கும்படி நோயாளிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அப்படி வர்ணிக்கையில் ஒவ்வொருத்தரும் தங்கள் ஆழ்மனத்தில் உள்ள ஆதர்ச குணத்தையோ தோற்றத்தையோ அந்தக் கதாபாத்திரத்திற்குத் தருகிறார்கள். அதன் மூலம் நோயாளியின் குண இயல்புகளை டாக்டரால் மேலும் புரிந்து கொள்ள முடிகிறது.

பாத்திரப் படைப்பு முடிந்த பிறகு நாடகம் மேடையேறுகிறது. நோயாளிகளே பாத்திரங்களை ஏற்று நடிக்கிறார்கள். நடிக்கும்போது, அந்தக் கதாபாத்திரத்துக்குள் அவர்கள் நுழைவதால் ஒரு குறிப்பிட்டச் சந்தர்ப்பச் சூழ்நிலையில் மனிதர்கள் எப்படி இயல்பாக நடந்து கொள்கிறார்கள் என்பது அந்த நோயாளிகளுக்குப் புரிகிறது. வாழ்க்கையைச் சந்திக்கவும் சிறப்பாக வாழவும் அந்த அனுபவம் அவர்களுக்கு உதவுகிறது. 'இதைத்தான் செய்ய வேண்டும். இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும்' என்று போதனை செய்வதைக் காட்டிலும் அந்த நாடகச் சிகிச்சை மூலம் விஷயங்களை உணர்த்துவதால் அதிக பலன் கிடைக்கிறது.

அமெரிக்காவில் பல வருடங்களாக நாட்டிய சிகிச்சை முறையைக் கையாண்டு நோயாளிகளைக் குணப்படுத்தி வரும் ஒரு நிபுணர், டாக்டர் ருத்ரனின் நாடகச் சிகிச்சை முறையைக் கண்டு வியந்து பாராட்டினார்.



* சாதுவத்திக் தயாரிப்பு

ஆனால், இவ்வகைச் சிகிச்சையை, நோய் கட்டுப்பாட்டுக்குள் வந்த பிறகு, நோயாளியின் புனர்வாழ்வுக்கு உதவும் வகையில் தான் அளிக்க முடியும். நோய் முற்றிய நிலையில் என்ன செய்வது?

டாக்டர் ருத்ரன் கூறினார்:

"மனநோய்களில் பல வகை உண்டு. அவற்றுள் மனச்சிதைவு நோய் மிக மோசமானது. உடல் நோய்களுள் கான்ஸருக்குச் சமமாக இந்த மனநோயைச் சொல்லலாம். கான்ஸரைப் போலவே, ஆரம்ப கட்டத்தில் இந்நோய் கண்டறியப்பட்டால் இதைக் குணப்படுத்துவதற்கும் நூறு . சதவிகித வாய்ப்பு இருக்கிறது. தனிமையை விரும்புவது, தூக்கமின்மை, வெறித்த பார்வை, சாப்பாட்டில் நாட்டமின்மை, வேலையில் ஆர்வமின்மை, இனப்படிச் செயல்களில் குறிப்பிடத்தக்க சீரழிவு. இவை நோயின் ஆரம்ப அறிகுறிகள். இந்த நிலை இரண்டு மாதங்களுக்கு நீடிக்கும். பிறகு இந்நோயாளியின் காதில் ஓர் அன்னியக் குரல் ஒலிக்க ஆரம்பிக்கிறது; காரணமில்லாமல் சில தவறான, பொய்யான நம்பிக்கைகள் அவர் மனத்துக்குள் வேரூன்றுகின்றன. உதாரணமாக, தமக்கு எதிரில் இருப்பவர் தம்மைக் கொல்லப் போகிறார். அவர் பாக்கெட்டில் கத்தி இருக்கிறது என்று உறுதியாக ஒரு நோயாளி நம்புவார். பாக்கெட்டைக் காலி செய்து காட்டினாலும்கூட அவர் மனம் மாறாது. பொய்த் தோற்றங்களும் உருவங்களும் அவரெதிரே தோன்றுவதுதான் நோயின் உச்ச கட்டம். இது தற்கொலையில் கூடக் கொண்டு போய்விடலாம்.

"1955 வரை இந்நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. அந்த ஆண்டில் அதிர்ஷ்டவசமாகக் கண்டுபிடிக்கப்பட்ட **Chlorpromazine** என்ற மருந்தை 1960 முதல் இந்தியாவில் சிகிச்சைக்குப் பயன்படுத்தி வருகிறோம். நான்கு வித மாத்திரைகள் உருவிலும் ஓர் இன்ஜெக்ஷன் உருவிலும் மட்டுமே இந்த மருந்து தற்போது கிடைக்கிறது. இதைத் தவிர மின்சார அதிர்ச்சி அளித்தும் நோயைக் குணப்படுத்தலாம். மயக்க நிலையில் மின் அதிர்ச்சி அளிக்கப்படுவதால் நோயாளிக்கு வலி தெரிவதில்லை. ஆனால் இம்முறையில் ஆபத்து அதிகம். மிகுந்த எச்சரிக்கையுடன் இதைக் கையாள வேண்டும்.

"வருத்தத்துக்குரிய விஷயம் என்னவென்றால், நோயின் ஆரம்ப கட்டத்திலேயே யாரும் மருத்துவ உதவியை நாடுவதில்லை என்பதுதான். மனநோய் நிபுணரிடம் செல்வோர் எல்லோருமே 'பைத்தியங்கள்' என்று நமது சமூகம் முத்திரை குத்திவிடுகிறது. மனநோயாளி உள்ள குடும்பத்துடன் நெருங்கிப் பழகவோ, சம்பந்தம் செய்து கொள்ளவோ மிகவும் தயங்குகிறது. இதனால், சராசரி மனிதர்கள் தங்கள் குடும்பத்தில் ஒருவருக்கு மனநோய் இருப்பதை மூடி மறைக்க விரும்பி, டாக்டரிடம் போகாமலே இருந்து விடுகிறார்கள். டாக்டரிடம் போனால் நோய் இருப்பதை ஒப்புக் கொண்டதாகிவிடுமே! நோயாளியைக் குணப்படுத்த வேண்டும் என்று ஒரு கட்டத்தில் அவர்கள் தீர்மானித்த பிறகு, முதல் முயற்சியாக மந்திரம், மாந்திரிகம், பரிகாரம் என்று மூட நம்பிக்கைகளைப் பற்றிக் கொண்டு நோயை முற்ற விடுகிறார்கள். எல்லாம் கை மிஞ்சிப் போன பிறகுதான் டாக்டரிடம் அழைத்து வருகிறார்கள். நாங்கள் அளிக்கும் சிகிச்சையினால் மூன்றே நாட்களில் நோயாளியிடம் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் காணப்படும். இந்த நல்ல மாறுதலைக் கண்டு உறவினர்கள் பூரித்துப் போகிறார்கள். ஆனால் ஆரம்ப முன்னேற்றத்தின் வேகம் தொடர்ந்து நீடிக்காது. நோயாளி பூரணமாகக் குணமடையப் பல மாதங்களாகும். இதற்குள் அவரது உறவினர்கள் உற்சாகமிழந்து சோர்ந்து போகிறார்கள். மனநோய்களைப் பொறுத்தமட்டில் மருத்துவருக்கும் சரி, நோயாளியின் உறவினர்களுக்கும் சரி மிகுந்த பொறுமையும் விடா முயற்சியும் தேவை.

"சிகிச்சை காலத்தில் எந்த வேலையும் செய்யாமலிருந்து பழகிவிட்ட நோயாளி, உடல் குணமானதும் மீண்டும் பழையபடி வேலைக்குப் போக மிகவும் கஷ்டப்படுகிறார். சனி, ஞாயிறு விடுமுறைக்குப் பிறகு திங்களன்று மீண்டும் பள்ளி கல்லூரிக்கோ அல்லது அலுவலகத்துக்கோ செல்ல வேண்டுமே என்று சராசரி மனிதர்களுக்குத்

* சாக் கட்டிகள் பெட்டிகளில் அடுக்கப்படுகின்றன.



தோன்றும் அலுப்பைப் போன்றதுதான் இந்த அலுப்பும். போதாக்குறைக்கு, சிகிச்சை பெற்றுத் திரும்புபவரை எல்லோரும் ஒரு வித எச்சரிக்கை உணர்வுடனேயே அணுகுகிறார்கள். அவர் சாதாரணமாகக் கோபம் அடைந்தாலோ, சிரித்தாலோ கூட சந்தேகத்துடன் பார்க்கிறார்கள். இந்த மனப்பான்மை அவரது முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கிறது.

''சிகிச்சைக்குப் பிறகு தோன்றும் பிரச்னைகளை எதிர்கொள்ள ஸ்கார்ஃப் உதவுகிறது. நோயாளிகளைத் தினமும் வரச் சொல்கிறோம். காலை முதல் மாலை வரை இங்கு இருக்கச் செய்கிறோம். இரண்டு மூன்று தினங்களுக்கு அவர்கள் எதுவும் செய்யாமலேயே கூட இருக்கலாம். அதற்குப் பிறகு சாக்பீஸ் செய்வது, ஊதுவத்தி செய்வது, பெண்களாக இருந்தால் தையல், சமையல் போன்றவை செய்வது என்று சிறிய வேலைகளை அவர்களுக்குத் தருகிறோம். ஆரம்பத்தில் அவர்கள் அந்த வேலைகளைச் செய்ய மறுப்பார்கள். 'சாக்பீஸ் செய்வதால் என் வாழ்க்கைக்கு என்ன உபயோகம்?' என்று கேட்பார்கள். அப்போது, 'இன்று சிறிய வேலைகளைச் செய்தால் நாளை அலுவலகம் போய் வழக்கம் போல் பணியாற்றலாம்' என்று பொறுமையாக விளக்குகிறோம். வேலை செய்ய ஆரம்பித்த பிறகு அவர்களுக்கு அன்றாட ஊதியமாக ஒரு சிறு தொகை தருகிறோம். மிகக் குறைந்த தொகையே ஆனாலும் அவர்களுக்குத் தன்னம்பிக்கையையும் சுய கௌரவத்தையும் அது அளிக்கிறது. போதிய அளவு பயிற்சி பெற்ற பிறகு, அவர்களுக்குத் தகுந்த வேலைகளை வாங்கித் தரவும் முயற்சி செய்கிறோம். ஸ்கார்ஃப்பிலிருந்து வெளியேறியவர்களுள் சிலர் தங்கள் பழைய வேலைகளுக்கே திரும்பியுள்ளனர்.

''நோயாளிகளின் குடும்பத்தினரை அவ்வப்போது சந்தித்துக் கலந்துரையாடுகிறோம். அவர்கள் நோயாளிக்கு எந்த வகையில் உதவ முடியும் என்று எடுத்துச் சொல்கிறோம். இந்த உதவிகள் அனைத்தையும் ஸ்கார்ஃப் இலவசமாக அளிக்கிறது. அதைத் தவிர, நோயாளிகள் அன்றாடம் வந்து போவதற்கு அவர்களுக்கு பஸ் பாஸும் வாங்கிக் கொடுத்து உதவுகிறது. ஏற்கெனவே நோயாளிக்காக நிறையச் செலவு செய்துள்ள குடும்பத்தார் தினமும் பஸ்ஸுக்கு வேறு தண்டமாக அழ வேண்டுமா என்று சலித்துக் கொண்டு, அவரை அனுப்பாமலே இருந்து விடுவார்கள். பஸ் பாஸினால் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடிகிறது.

''மனச்சிதைவு நோயாளிகளைப் பூரணமாகக் குணப்படுத்தி அனுப்ப இயன்றதையெல்லாம் செய்கிறோம். அதற்குப் பிறகும் அவர்களுக்குச் சமூகத்தில் முழு அங்கீகாரம் கிடைப்பதில்லை. எனவே, சமூகத்துக்கும் இந்நோயைப் பற்றி விளக்கிக் கூற முயன்று கொண்டிருக்கிறோம். தொலைக்காட்சி நாடகம் ஒன்று தயாரிப்பில் உள்ளது. 'இனி' என்று ஒரு பரீட்சார்த்த நாடகம் சமீபத்தில் அரங்கேறியது. கிராமங்களில் முகாம்கள் நடத்தி இந்நோயைப் பற்றிய உண்மைகளை எடுத்துச் சொல்லத் திட்டமிட்டுள்ளோம். ஸ்கார்ஃப் இயக்குனர் டாக்டர் சாரதா மேனனும் இங்கு பணியாற்றும் மற்ற ஊழியர்களும் லட்சிய நோக்குடன் செயல்படுவதால் எங்கள் கூட்டு முயற்சி இதுவரை வெற்றி அடைந்துள்ளது'' என்று முடித்தார் டாக்டர் ருத்ரன்.

ஸ்கார்ஃப்ன் பல்வேறு பிரிவுகளைச் சுற்றிக் காண்பித்தார் டாக்டர் ருத்ரன். பெண்கள் பிரிவில் சமையல் அறை துப்புரவாக இருந்தது. பயிற்சி பெற வந்தவர்கள் தயாரித்த ஜாம், ஜூஸ், கெச்சப் பாட்டில்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒரு மூலையில் இரண்டு பெண்கள் ஒயர் கூடைகளைப் பின்னிக் கொண்டிருக்க மற்றொரு பெண் எம். பி. ஏ. பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தார்! வெறித்த பார்வையுடன் சலனமின்றி அமர்ந்திருந்த ஓர் இளம் பெண்ணைத் தவிர ஏனையவர்கள் கலகலப்பாக, சராசரிப் பெண்களாகவே தோன்றினார்கள். அறையின் நடுவே ஒரு ஹார்மோனியம் இருந்தது. எம். பி. ஸ்ரீனிவாசன் இசை வகுப்புகள் நடத்தி வருகிறாராம்.

ஆண்கள் பகுதியில் எல்லோரும் தரையில் அமர்ந்தபடி சாக் தயாரிப்பிலும் ஊதுவத்தித் தயாரிப்பிலும் மும்முரமாக இருந்தார்கள். புகைப்படங்கள் எடுத்த போது புன்னகையுடன் நன்றி கூறினார்கள். மிகக் கூர்ந்து கவனித்தால் மட்டுமே ஓரிருவரிடம் மனநோய்க்கான அறிகுறி தென்பட்டது.

இயற்கையின் இரக்கமின்மையை எண்ணி வருத்தப்படும் அதே நேரத்தில் ஸ்கார்ஃப்பின் சேவையை நினைத்து மகிழ்ச்சியும் பெருமையும் தோன்றுகின்றன.

"அரசின் மாற்றுந்தாய் மனப்பான்மை!"

டாக்டர் சாரதா மேனனிடம் நம்மை அறிமுகப்படுத்தினார் டாக்டர் ருத்ரன். சென்னை கீழ்ப்பாக்கம் மனநோய் மருத்



டாக்டர் சாரதா மேனன்

துவமனையின் தலைவியாக இருந்து ஓய்வு பெற்ற தமது நீண்ட நாள் அனுபவத்தின் அடிப்படையில் அவர் பேசினார்:

''அரசாங்கத்தைப் பொறுத்தவரை சுகாதாரத்துறை எந்தப் பட்டியலிலும் கடைசி இடத்தைத்தான் பெறுகிறது. அதிலும் மனநோய் மருத்துவத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன்தான் அணுகுகிறார்கள். இத்துறைக்குப் போதுமான அளவு ஊக்கமோ பொருளாதார ஒதுக்கீடோ செய்யப்படுவதில்லை. போதாக்குறைக்கு அரசியல் தடைகளும் முட்டுக்கட்டைகளும் வேறு சீரிய செயல்பாட்டைக் கெடுக்கின்றன. அதனால், இத்துறையில் நமது மருத்துவர்கள் ஆர்வத்துடன் முன்னேறி அனைத்துலகத் தரத்தை எட்டியிருந்தாலும் அதன் முழுப் பலனை நோயாளிகள் அனுபவிக்க முடியாமல் போகிறது.

''மனநோய் சிகிச்சையையும், மருத்துவத்தையும் மேலும் முன்னேற்ற வேண்டுமானால் எம். பி. பி. எஸ். நிலையிலேயே அதற்கு அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டும். தற்போது எம். பி. பி. எஸ். மாணவர்களுக்கு மனவியலில் தனித் தேர்வு கிடையாது.

''உடல் ஊனமுற்றோருக்குப் பல சலுகைகளை அரசாங்கம் வழங்குகிறது — வேலை வாய்ப்பு, இலவச பஸ் பயணம், கல்வியுதவி போன்ற இந்தச் சலுகைகள் எதுவுமே மனநோயினால் பாதிக்கப்பட்டுக் குணம் அடைந்தவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை.

''மனநோய் என்ன காரணத்தினால் ஏற்படுகிறது என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. வாழ்க்கையில் எல்லா விதத்திலும் சாதாரணமாக, சராசரியாக இருந்து வருபவர் துரதிர்ஷ்டவசமாகத் திடீரென்று மனநோய்க்கு ஆளாகிறார். எம். பி. ஏ., எம். பில், பி. எச். டி பட்டதாரிகள் கூட பாதிக்கப்படுகிறார்கள். இத்தகையவர்களுக்குப் புனர் வாழ்வு அளிக்க உதவுவது அரசாங்கத்தின் கடமை அல்லவா? இவர்கள் உடல் ஊனம் அடையாவிட்டாலும் மனம் ஊனமடைந்துள்ளதை மறுக்க இயலுமா? மனம் வேறு உடல் வேறு என்று பிரிக்கத்தான் முடியுமா?

''மனநோயாளிகளுக்கு அரசாங்கம் என்னென்ன செய்ய வேண்டும் என்று பட்டியல் போடுவது ஒருபுறம் இருக்கட்டும். முதல் கட்டமாக இந்த நோயை ஏதேனும் ஓர் அமைச்சகத்தின் பட்டியலில் இடம்பெறச் செய்யவேண்டும். தற்போதுசுகாதார அமைச்சகப் பட்டியலில் இது இடம் பெறவேயில்லை! சமூக நலத்துறை அமைச்சகத்தின் பட்டியலிலும் இடம் பெறவில்லை!''

டாக்டர் சாரதா மேனன் இறுதியாகக் கூறிய தகவல் நமக்கு ஆச்சரியமும் அதிர்ச்சியும் அளித்ததோடு நமது அரசாங்கத்தை எண்ணி அவமானத்தில் தலைகுனியவும் வைக்கிறது. இப்போதும் காலம் கடந்து விடவில்லை. எடுத்துச் சொல்ல சாரதா மேனன் போன்றோர் இருக்கிறார்கள். அரசாங்கம் செவி சாய்க்குமா, செயல்படுத்துமா என்பதுதான் கேள்வி.

— சீதா ரவி

புகைப்படங்கள்: கே. வி. ஆனந்த்

அடுத்த இதழ்:

வடாற்காடு மாவட்டத்தில் கல்கி--1



''தாயை இழந்தோம்
அரசின்
தயவையும் இழந்தோம்!''
— கவர் ஸ்டோரி

ஜவ்வாது மலைக்கு ஒரு விசிட்!
— மலைவாழ் மக்களின் அவலம்!



நகராட்சிப் பள்ளியும் நல்ல பெயர் எடுக்கும்!



• பத்மாவதி

ஆச்சரியமான சாதனை படைத்திருக்கிறார் பத்மாவதி.

பிளஸ் டூ வகுப்பில் பூகோளப் பாடத்தில் பள்ளியிலேயே முதலாவதாக வந்தது ஆச்சரியமல்ல; 182/200 மார்க் வாங்கி மாநிலத்திலேயே முதலாவதாக வந்ததும் ஆச்சரியமல்ல; சென்னை மாநகராட்சிப் பள்ளியில் படித்து இந்தச் சாதனையைப் புரிந்திருக்கிறார் என்பதுதான் ஆச்சரியம்!

"என் வீட்டைச் சுற்றி எந்த நேரம் பார்த்தாலும் சண்டை, சச்சரவு என்று ஒரே இரைச்சல்தான். வசதி படைத்தவர்கள் வாழும் பகுதி போல் அமைதி நிலவாது. அதனால் நிம்மதியாகப் படிக்கவே முடியாது. தினம் அதிகாலை நாலு மணிக்கு எழுந்துவிடுவேன். ஆறு மணி வரை படிப்பேன். அப்புறம் சந்தடிகள் ஆரம்பமாகிவிடும். அதேபோல், இரவு எட்டு மணி வரை படிக்கவே முடியாது. அப்புறம் உட்கார்ந்து பத்து மணி வரை படிப்பேன். அன்று நடந்த பாடங்களை அன்றைக்கே படித்து விடுவேன். ஆறும் வகுப்பு முதல் நான் வேப்பேரியிலுள்ள கார்ப்பரேஷன் ஸ்கூலில்தான் படிக்கிறேன். ஒவ்வொரு கிளாஸிலும் நான்தான் முதல் ராங்க். "பூகோளம்தான் எனக்கு ரொம்பப் பிடித்த சப்ஜெக்ட்" என்கிறார் முகத்தில் சந்தோஷம் பொங்கப் பத்மாவதி.

"நான் படித்தது தெலுங்கு மீடியத்தில். இதிலே முக்கிய விஷயம் என்னவென்றால், தெலுங்கு மீடியத்தில் பிளஸ் டூ படிப்புக்குப் புத்தகங்களே கிடையாது. ஆங்கில மீடியப் புத்தகங்களை வைத்துக் கொண்டு, வகுப்பிலே ஆசிரியர்கள் தந்த நோட்ஸ்களைப் படித்தே நான் இத்தனை மார்க் வாங்கினேன்!" என்கிறார் பத்மாவதி.

சென்னை பி அண்டு ஸி மில்லில் வைண்டர் வேலை பார்க்கும் நரசைய்யா, புரசைவாக்கத்தில் சாமானிய மக்கள் வாழும் படாளம் பகுதியில் ஓர் ஆஸ்பெஸ்டாஸ் கூரை வீட்டில் வசிக்கிறார். இவரது இரண்டாவது பெண் பத்மாவதி. நரசைய்யாவுக்குச் சுமார் எண்ணூறு ரூபாய் போலச் சம்பளம் வந்தாலும் நூற்றைம்பது ரூபாய் வீட்டு வாடகைக்கே போய் விடுகிறதாம். மீதியை வைத்துக் கொண்டு, தமது பெரிய குடும்பத்தைக் கஷ்டப்பட்டுக் காப்பாற்றி வருகிறார்.

பத்மாவதி முதலாவதாய் வந்ததைப் பாராட்டி சென்னை மாநகராட்சி இவருக்கு ஆயிரம் ரூபாயும் பி அண்ட் ஸி மில் நிர்வாகம் ஐந்நூறு ரூபாயும் பரிசளித்துள்ளன. இப்போது ராணிமேரி கல்லூரியில் பி.எஸ்ஸி. சேர்ந்திருக்கிறார். "எம். எஸ்ஸி. படிக்க எனக்கு ஆசைதான்; ஆனால் குடும்பத்தில் நிதி வசதி போதாது. எனவே ஆசிரியர் பயிற்சியை முடித்துவிட்டு ஆசிரியையாக — அதுவும் ஒரு கார்ப்பரேஷன் பள்ளிக்கூடத்திலேயே ஆசிரியையாகப் பணிபுரிய வேண்டும் என்பது என் ஆசை" என்று கூறும் பத்மாவதி, ஓய்வு நேரங்களில்



* டி. கே. மனோகரி

* முனிரத்தினம்



பை பின்னுதல், தையல் போன்றவற்றில் ஈடு படுவதுண்டாம்.

பத்மாவதியைச் சந்தித்து விட்டு அவர் படித்த மாநகராட்சிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கூடத்துக்குப் போனோம். சுமார் 3200 மாணவிகள் படிக்கும் அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியை டி. கே. மனோகரியைச் சந்தித்தோம். ''கார்ப்பரேஷன் பள்ளிக்கூடங்களில் கல்வியின் தரம் அவ்வளவு உயர்வாக இல்லை என்பது ஒப்புக் கொள்ள வேண்டிய உண்மைதான். ஆனால் இதற்கு அடிப்படையில் என்ன காரணம்? வருகிற மாணவ, மாணவிகளின் குடும்பப் பின்னணி மற்றும் சூழ்நிலை அப்படி. எங்கள் பள்ளிக்கூடத்தில், எஸ். எஸ். எல். சி.யில் இரண்டு முறை தவறி, மூன்றாம் தடவையில் பாஸ் செய்தவர்கள் கூட ப்ளஸ் டூவில் சேர வருகிறார்கள். வருகிற மாணவர்களுக்கும் படிப்பின் மேல் போதிய அக்கறை கிடையாது. ஆனாலும் சில புத்திசாலிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். அத்தகையவர்களைக் கண்டெடுத்து, அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் பயிற்சி அளித்து, நல்ல மார்க் பெற வைக்க எல்லா வழிகளிலும் முயற்சிகள் செய்து கொண்டுதான் இருக்கிறோம். அதன் விளைவுதான் எங்கள் மாணவி பத்மாவதி 'ஸ்டேட் ஃபர்ஸ்ட்' வாங்கினது. இது எங்களுக்கு உற்சாகமூட்டும் ஒரு டானிக் போல'' என்று சொன்னார் தலைமை ஆசிரியை.

பத்மாவதியின் வகுப்பு ஆசிரியர் பெயர் முனிரத்தினம். பூகோள ஆசிரியர் பெயர் ஷண்முகம். இருவரையும் சந்தித்த போது ஒரேவிதமான கருத்தையே சொன்னார்கள்: ''எங்கள் வகுப்பில், மிக நன்றாகப் படித்த மூன்று மாணவிகள் பத்மாவதி.

* ஷண்முகம்



''கீதாசாரியன் ஆசிரியரின் கூற்று கண்டனத்துக்குரிய கருத்து!''

(கல்கி 21.6.87 இதழில் இடம் பெற்ற 'கீதாசாரியன்' ஆசிரியர் எம்.ஏ. வேங்கட கிருஷ்ணனின் கடிதத்துக்கு மறுப்புத் தெரிவித்து நமக்குப் பல கடிதங்கள் வந்துள்ளன. அவற்றுள் விஷயத் தெளிவாலும் எழுதப் பட்டுள்ள விதத்தாலும் சிறந்து விளங்கும் ஒரு கடிதத்தை மட்டும் பிரசுரிக்கிறோம். இத்துடன் இந்த விவாதம் முற்றுப் பெறுகிறது — ஆசிரியர்.)


''ஆழ்வார்களின் அருளிச் செயல், மிலேச்சர்களால் மிலேச்ச பாஷையில் செய்யப்பட்டது; அதைப் படிப்பது தவறு'' என்று வடகலையார் கூறுவதாக கீதாசாரியன் ஆசிரியர் வேங்கட கிருஷ்ணன் எழுதியிருப்பது உண்மைக்குப் புறம்பானது.

'அதிகார சங்கிரகம்' என்னும் நூலில் ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் முழங்குகிறார்:—

பொய்கை முனி பூதத்தார் பேயாழ்வார் தண்
பொருநல்வருங் குருகேசன் விட்டுசித்தன்
துய்ய குலசேகரன் நம் பாண நாதன்
தொண்டரடிப்பொடி மழிசை வந்தசோதி
வையமெல்லாம் மறை விளங்க வாள்
வேலேந்தும்
மங்கையர் கோன் என்றிவர்கள் மகிழ்ந்து
பாடும்
செய்யதமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித்
தெளியாத மறை நிலங்கள் தெளிகின்
றோமே''

தமிழுக்குக் கொடுத்துள்ள அடைமொழியினைப் பாருங்கள், ஆழ்வார்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அடைமொழிகளைப்

* நரசைவ்வா குடும்பம்



லட்சுமி, விஜயா. இந்த மூவருக்குள்ளும் படிப்பில் எப்போதும் போட்டி இருக்கும். எங்கள் வகுப்பு மாணவிகளுக்கு எந்தப் பாடத்தில் எப்போது சந்தேகம் ஏற்பட்டாலும் தயக்கம் காட்டாமல் பள்ளிக்கூடத்தில், அல்லது லீவு நாட்களானால் வீட்டில் வந்து சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளலாம் என்று சொல்லி வைத்திருக்கிறோம். மாதா மாதம் தேர்வுகள் நடத்துவோம். தவிர, தினம் ஸ்கூல் விட்டதும், ஒரு மணி நேரம் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு பாடம் என்று சிறப்புப் பயிற்சி சிலருக்கு அளித்தோம். பத்மாவதி பள்ளியில் முதல் மாணவியாய் நிச்சயம் வருவாள் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் மாநிலத்திலேயே முதல் மார்க் எடுத்துத் தேறி எங்களைப் பெருமையடையச் செய்திருக்கிறாள்!''

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

படங்கள்: **யோகா**



மெக்ஸிகோவில் ஒரு வாலிபனை நல்ல பாம்பு கையில் கடித்துவிட்டது. அவன் நண்பர்கள் ஓடி வந்து, பாம்பை அடித்துக் கொன்றார்கள். கொட்டுவாய்க்கு மேலாகக் கயிற்றினாலோ, துணியினாலோ கட்டினால்தானே விஷம் பரவுவதைத் தடுக்க முடியும்? இதற்கு அந்த நண்பர்கள் செத்த பாம்பையே பயன்படுத்தினார்கள்! வைத்திய உதவி வந்தது. கடியுண்டவனும் உயிர் பிழைத்தான்!

ஆதாரம்: உலகம் பலவிதம்

தொகுப்பு: ஆர். சம்பத்குமாரன்



''அங்கே போறாரே, அவர் சினிமாப் படம் எடுத்து லட்சாதிபதி ஆயிட்டார்!''

''இதுக்கு முன்னால எப்படி இருந்தார்?''

''கோடீசுவரரா இருந்தார்!''

— எஸ். முகம்மது யூசுப்

பாருங்கள். ஆழ்வார்களின் அருளிச் செயலைப் படித்து வேதத்தைக் கசடறக் கற்றுக் கொண்டதாகச் சொல்லுவதைக் கவனியுங்கள். மிலேச்ச பாஷை, மிலேச்சர்கள் என்று நினைத்திருந்தால் இவ்வடைமொழிகள் வருமோ, இக்கூற்றும் வருமோ?

தேசிகனின் ''ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்'' முழுவதுமே குருகூர்ச் சடகோபனும் நம்மாழ்வார் வணக்கமே.

இன்னும் பரக்கப் பேசின் பாரதமாகும்.

இன்றும் வடகலையார்,

''நானிலமும்தான் வாழ நான்மறைகள்
தாம் வாழ
மாநகரின் மாறன் மறைவாழ — ஞானியர்கள்
சென்னியணிசேர் தூப்புள் வேதாந்த
தேசிகனே
இன்னுமொரு நூற்றாண்டு இரும்.''

என்று வீட்டில், கோயிலில் தினமும் பாடி வருகின்றனர். ''மாறன் மறைவாழ'' என்பது எதைக் குறிக்கின்றது என்று எண்ணுகிறார், கீதாசார்யன் ஆசிரியர்?

இவை மட்டுமல்ல, இன்று செயற்கரிய மாபெரும் செயலாம் ஸ்ரீரங்க ராஜகோபுரம் கட்டி நம்மிடையே வீற்றிருக்கும் ஜீயர் செய்தருளிய திருப்பாவை விளக்கவுரையை 'கீதாசார்யன்' ஆசிரியர் படித்ததில்லையா? படித்த தென்கலை மஹா வித்வான்கள், ''இவரோ திருப்பாவை ஜீயர்'' என்று வியந்ததை மறந்துவிட்டாரா 'கீதாசார்யன்' ஆசிரியர்?

'வடகலை' 'தென்கலை' என்பவை ஸ்ரீமத் ராமாநுஜரின் கருத்துக்களை விளக்கியதில் ஒருவருக்கொருவர் மாறுபட்டு நின்றதுவேயல்லால் வேறில்லை. தென்கலையார் திருவடிகளை வணங்குவதால் திருவடி யினைச் சாற்றிக் கொள்வதாகவும், வடகலையார் பாதுகைகளை வணங்குவதால் பாதுகைகளைச் சாற்றிக் கொள்வதாகவும் உள்ளதே இக்குறியீட்டுப் பேதம்.

'கீதாசார்யன்' ஆசிரியர் வீண் விவாதங்களையும், அபவாதங்களையும் தவிர்த்து, சம்பிரதாய முன்னேற்றத்தில் மட்டுமே கவனத்தைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடி. எம். வெற்றிவேல்சுவாமி

அத்தியாயம் — 2

அந்தப் பெண்ணின் பெயர் ஆன்னி என்பதையும் அவள் ஒரு ஃபேஷன் மாடல் என்பதையும் கண்டுபிடிப்பது ஜேம்ஸுக்குக் கஷ்டமாக இல்லை. காரணம் அந்த நடுத்தர வயதுப் பெண்மணி புரட்டிக் கொண்டிருந்த ஃபாஷன் பத்திரிகையின் அட்டைப் படத்தில் இருந்ததே இவனுக்கு அருகில் இப்போது அமர்ந்திருக்கும் இந்த இளம் நங்கைதான்! இதை அந்த நடுத்தர வயதுப் பெண் உணர்ந்தாளோ அல்லது தெரிந்தும் அற்பப் பொறாமை காரணமாகத் தெரிந்து கொள்ளாதது போல நடித்தாளோ. எவ்வாறாயினும் இடையில் ரீடிங் ஸ்டேஷனில் அவள் இறங்கிப் போய்விட்டாள். ஜேம்ஸுக்கு ரொம்பச் சௌகரியமாகப் போய் விட்டது. இடம் மாறி எதிர் ஸீட்டில் அமர்ந்து ஆன்னியை ஆராய்ந்தான்.

கரும் பழுப்பு நிறத்தில் பளபளக்கும் கேசம், மெலிதான எடுப்பான மூக்கு. அகன்ற கண்கள், கரத்திலிருந்த புத்தகத்தில் லயித்திருந்தன. தான் எதிரே அமர்ந்திருப்பதைச் சற்றும் கவனியாதது போல் அவள் இருப்பது நடிப்பா, உண்மையா என்று யோசித்தான் ஜேம்ஸ். உண்மைதான் என்ற முடிவுக்கு வந்தான். அதனால் இன்னும் தைரியம் அடைந்து பார்வையைப் படர விட்டான். அவளுடைய நெஞ்சகங்கள் அளவான வளைவுகளாக மிருதுவான பட்டிலே பொதிந்திருந்தன. இடை ஒரு ஃபாஷன் மாடலுக்கே உரிய முறையில் சிறுத்திருந்தது. கால்கள் எப்படி என்று பார்க்கக் கழுத்தை ஒடித்தான். திரும்பவும் முகத்தை ஏறிட்டான். இப்போது அவள் அவனை நேருக்கு நேராகப் பார்த்துக் கொண்டிருந்தாள்! இவனுடைய ஆய்வுப் பார்வையைக் கேலி செய்யும் புன்னகை அவளுடைய அளவான உதடுகளில் தவழ்ந்தது. ஜேம்ஸ் தர்மசங்கடத்துடன் நெளிந்தான்.

''பாட்ரிக் என் பழங்கால நண்பன். அற்புதமாகப் படமெடுத்திருக்கிறான்.''

—இறங்கிப் போனவள் விட்டுச் சென்று விட்ட ஃபேஷன் பத்திரிகையின் மேல் அட்டைப் படத்தைச் சுட்டிக்காட்டிச் சொன்னான் ஜேம்ஸ்.


அவள் பாட்ரிக்கை இந்த ஜன்மத்தில் பார்த்ததில்லை என்பது அவனுக்குப் புரிந்தது. ஒரு புருவத்தை உயர்த்தினாள் — மாறாத கேலிப் புன்னகையும் நீடித்தது.

''ஆனால் அவனால் கூட உன் அழகை முழுதுமாகப் படத்தில் சிறைப்பிடிக்க முடியவில்லை'' என்றான் ஜேம்ஸ். ''காமிரா மிகைப்படுத்துமேயொழிய பொய் சொல்லாது என்பார்கள். ஆனால் உன்னிடத்தில் காமிரா தோற்றுத்தான் போய்விட்டது.''

அவளுடைய புன்னகை, 'களுக்'குச் சிரிப்பாக மலர்ந்தது. அப்புறம் எல்லாம் சகஜமாகி விட்டது. பேசுவதும் நெருங்கி வருவதும் எளிதாகி விட்டது. லண்டனில் பாடிங்டன் ரயில் நிலையத்தை ரயில் அடைவதற்குள் ஒரு ஃபேஷன் மாடலின் வாழ்க்கையைப் பற்றி நிறையத் தெரிந்து கொண்டான் ஜேம்ஸ்.

''என்னுடைய காரை ஸ்டேஷனுக்கு வெளியே கிரேவன் தெருவில் நிறுத்தி வைத்திருக்கிறேன். உன்னை உன் வீட்டில் இறக்கி விட்டு விடுகிறேன்'' என்றான். மறுக்காமல் ஏறிக் கொண்டாள். வாசலில் அவள் இறங்கியதும் காரைச் செலுத்திக் கொண்டு போய் விட்டான்.

ஆன்னிக்கு வியப்பாக இருந்தது. சாதாரணமாக ஃபேஷன் மாடல் என்றாலே அவளை வசப்படுத்துவது சுலபம் என்று எண்ணுகிறவர்களைத்தான் அவள் கண்டிருக்கிறாள். இவனோ காரை விட்டு இறங்கவேயில்லை.




அவளை அவளுடைய ஃப்ளாட் வாசல் வரை கொண்டு விடும் சாக்கில் உடன் நடந்து வந்து பிறகு உபசாரத்துக்காக உள்ளே அழைக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை அவளுக்கு ஏற்படுத்தவில்லை. ஏன், ஃபோன் நெம்பரைக் கூடக் கேட்கவில்லை!

பணத்துக்குப் பணம்;

ஆனால் ஜேம்ஸ் திட்டமிட்டே இவ்வாறு நடந்து கொண்டான். அவள் எதிர்பார்த்த படி இவன் நடந்து கொண்டால் எல்லா ஆண்களையும் போல் இவனும் ஒருவனாகி விடுவான். அவளுக்குச் 'சீ' என்று போய் விடும். அவள் சற்றும் எதிர்பாராத தருணத் தில் அவளை மறுபடி அணுக வேண்டும். அப் போது மனம் பூரித்துப் போவான்.

ஹார்வியைப் பழிவாங்கத் திட்டமிட வேண்டிய ஜேம்ஸ் ஆன்னியை எப்படித் தன் வசப்படுத்துவது என்றே யோசித்துத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தான். ஆயினும் ஸ்டீஃபன் தன்னிடம் தந்திருந்த ஃபைலைப் புரட்டிப் பார்க்க அவன் தவறவில்லை. படித்த போது மோசடி மன்னன் ஹார்வி யின் அசாதாரண ஆற்றலை அவனால் உணர முடிந்தது. அவனிடம் மதிப்பும் மரியாதை யும் கூடப் பெருகின! ஹார்வி அப்படி



என்னதான் செய்திருந்தான்?

பிரிட்டனுக்கு நேர் மேலே, வடக்குக் கடலில் பெட்ரோலியம் எண்ணெய் கிடைக் குமா என்ற ஆராய்ச்சிகள் சில ஆண்டுக ளுக்கு முன் மேற்கொள்ளப்பட்டன. பிரிட் டிஷ் பெட்ரோலியம் என்ற நிறுவனம் இதில் தீவிரமாக ஈடுபட்டுக் கடலின் அடி

பழிக்குப் பழி!

ஜெஃப்ரி ஆர்ச்சர்



"இன்னிக்குத்தான் சரியா பத்தரை மணிக்கு நீங்க ஆபீஸுக்கு வந்து பார்க்கிறேன்!"

"ஹி..... ஹி..... மன்னிக்கணும் சார்.. இன்னைக்கு ஒரு நாள் லீவு கேட்பதற்குத்தான் வந்தேன்!"

— அ. தெய்வசிகாமணி

வாரத்தில் பூமிக்கடியில் குடைந்து பெட்ரோலியம் இருப்பதைக் கண்டுபிடித்தது. வியாபார ரீதியில் அதனைச் சுத்திகரித்து விற்கவும் செய்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஹார்வியும் ஏகமாக விளம்பரம் செய்து பிராஸ்பெக்டா ஆயில் என்ற நிறுவனத்தை ஆரம்பித்தான். ஓர் எண்ணெய் குடையும் கப்பலை வாடகைக்கு எடுத்து ஆய்வுகள் நடத்தினான். இந்த நிறுவனத்தின் ஷேர்களை பங்கு மார்க்கெட்டில் வைத்தான். ஆனால் வாங்குவார் இல்லை. காரணம், பிராஸ்பெக்டா ஆயில் நிறுவனம் எண்ணெய் குடைந்தெடுக்கும் முயற்சியில் வெற்றி பெறும் என்று யாரும் நம்பவில்லை. அடிமட்ட விலையில் கூட யாரும் சிந்துவாரின்றிக் கிடந்தன பங்குகள்.

ஹார்வியும் அவசரப்படவில்லை. இரண்டு ஆண்டுகள் சென்று பத்திரிகையில் ஒரு விளம்பரம் தந்தான். "வடக்குக் கடலில் எண்ணெய் குடைந்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனத்துக்கு அதன் நிதி நிர்வாகத்தைக் கவனிக்க இளம் அதிகாரி ஒருவன் தேவை. அதற்குரிய படிப்பும், அனுபவமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்." — ஒரு பெரிய தொகையைச் சம்பளமாக விளம்பரத்தில் அறிவித்தான் ஹார்வி. இந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு வந்து சிக்கியவன் டேவிட் கெஸ்லர்.

ஹார்வி, தானே நேரடியாக நேர்முகத் தேர்வை நடத்தவில்லை. ஒரு காரியாலயத்தை 'செட் — அப்' செய்தான். அதில் தனது கூட்டாளிகள் இருவரை இருக்கச் செய்தான். அவர்கள் நேர்முகத் தேர்வுக்கு வந்த அனைவருடனும் பேசிவிட்டுக் கடைசியில் டேவிட்டைத் தேர்ந்தெடுத்தார்கள்.

அவர்கள் மூலம் டேவிட், பிராஸ்பெக்டா ஆயில் நிறுவனத்தின் மேன்மைகளைப் பற்றித் தெரிந்து கொண்டான். நியூயார்க்கில் தலைமையகம், மாண்ட்ரியால், லண்டன், பாரீஸ், புருஸெல்ஸ் ஆகிய நகரங்களில் கிளைகள். பல வங்கிகள் ஏராளமான பணத்தை இவர்களது முயற்சிக்கு ஆதரவாகக் கொடுத்து உதவியுள்ளன......

"ஆனாலும் பார், டேவிட்! ஒரு நிறுவனத்துக்குப் பணத்தினால் மட்டும் பெருமை வருவதில்லை. மக்கள்தான் உயிர்நாடி. அவர்கள் நம்மை மதித்தால் நம் பெருமை உயரும். இதற்குத்தான் உங்களை நியமிக்கிறோம். மக்களிடம் நம் நிறுவனத்தின் கீர்த்தி பரவ வேண்டும். இதற்கு உங்களிடம் நிறையவே எதிர்பார்க்கிறோம்."

"மக்களிடம் அவர்கள் நம்பிக்கையை வளர்க்குமாறு எடுத்துச் சொல்ல என்ன இருக்கிறது?" என்றான் டேவிட்.

'நிறைய இருக்கிறது" என்று ஒரு ஃபைலை அவன் முன் வைத்தான், அந்த 'அதிகாரி'— ஹார்வியின் கூட்டாளி. "உண்மையில் ஒரு பெரிய எண்ணெய் வயலை நாம் கண்டு பிடித்தாகிவிட்டது. அது பற்றிய பூமி இயல் நிபுணர்களின் அறிக்கைதான் இது. ஆனால் இதை உடனே வெளியிடுவது உசிதமில்லை. அதற்குரிய நேரம் வந்துவிட்டதா என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்."

"எதற்காக நாம் காத்திருக்க வேண்டும்?" என்று கேட்டான் டேவிட்.

"புரியவில்லையா? எண்ணெய் வயல் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது என்ற விவரம் வெளி வந்தால் உடனே நமது நிறுவனத்தின் பங்குகளை எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு வாங்க ஆரம்பிப்பார்கள். பங்குகளின் விலை மளமளவென்று உயரும். ஆனால் இப்போது கிடைத்திருக்கும் எண்ணெய் வயலை வியாபார ரீதியாகப் பயன் படுத்த முடியுமா; அந்த அளவுக்கு எண்ணெய் கிடைக்குமா என்பதை நாம் முதலில் தீர்மானிக்க வேண்டும். அவசரப்பட்டு செய்தியை வெளியிட்டால் இன்று ஷேர்களை வாங்குவோர் நாளை ஏமாற்றமடையலாம் அல்லவா?"

"புரிகிறது" என்றான் டேவிட். "வியாபார ரீதியாகப் பயன்படுத்தக் கூடிய அளவில் நிறையவே எண்ணெய் கிடைப்பதாக வைத்துக் கொள்வோம்...."


"அதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவே உள்ளதாகத்தான் உன்னிடம் இப்போது தரப்பட்டுள்ள அறிக்கை கூறுகிறது."

"அப்படியானால் பங்குகளின் விலை எவ்வளவு உயரும்?"

"ஏன், இருபது மடங்குவரை கூட உயரலாம்! ஒரு பவுண்டு மதிப்புள்ள பங்கு இருபது பவுண்டு வரை விற்கப்படலாம்!"

வியப்பில் திறந்த டேவிட்டின் வாய் மூடிக் கொள்ள சிறிது நேரமாயிற்று. ஹார்வியின் கூட்டாளி தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அன்று மாலை ஆக்ஸ்ஃபோர்டுக்கு ரயிலேறி தன் நண்பன் ஸ்டீஃபனைச் சந்திக்கப் போனான் டேவிட். இதற்குள் அவன் பூமி இயல் நிபுணர்களின் அறிக்கையைப்



தனக்கு ஏற்ற மனைவியைத் தேர்ந்தெடுத்துத் தருமாறு இளைஞன் ஒருவன் கம்ப்யூட்டரின் உதவியை நாடினான்.

கம்ப்யூட்டர், அவனுக்கு ஏற்ற பெண்ணை இரண்டாயிரம் பெண்களில் ஒருத்தியாகத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தது! — அவன், ஒன்பது மாதங்களுக்கு முன் அவன் விவாகரத்து செய்து கொண்ட அதே பெண்தான்!

முன்னாள் தம்பதிகள் இருவரும், ஒருவருக்கு ஒருவர் தெரியாமல், ஒரே கம்ப்யூட்டரை உதவி கேட்டதால் ஏற்பட்ட பலன் இது! துருக்கியில் அண்மையில் இது நடந்தது!

— காரவானிலிருந்து 'சேலம் சக்தி'

படித்து முடித்திருந்தான். அவன் மனக் கண் முன்பிராஸ்பெக்டா எண்ணெய்க்கிணற்றில் பெட்ரோலியம் பீச்சி அடித்தது! அதே உயரத்துக்குப் பங்குகளுடைய மதிப்பும் உயர்ந்து கொண்டே போயிற்று! அந்த அளவுக்கு அந்த அறிக்கை எண்ணெய் வளத்தை 'ஆஹா, ஓஹோ' என்று வர்ணித்துவிடாமல் எதிர்பார்ப்பை மட்டும் தூண்டியது. சாமர்த்தியமாக எழுதப்பட்ட அறிக்கை அது!

அன்று இரவு விருந்துக்கு வருமாறு டேவிட்டை அவனுடைய நண்பன் ஸ்டீஃபன் அழைத்திருந்தான். சாப்பிடும்போதே ஸ்டீஃபனிடம் தனது புதிய உத்யோகம் பற்றியும் பிராஸ்பெக்டா ஆயில் நிறுவனத்தின் ஒளிமயமான எதிர்காலம் குறித்தும் விலாவாரியாக உற்சாகமாகப் பேசினான் டேவிட்.

ஸ்டீஃபன் தன்னிடமிருந்த சேமிப்பு முழுவதையும் பிராஸ்பெக்டா ஆயில் பங்குகளில் முடக்கப் போவதாகத் தெரிவித்தான்.

"அதைச் செய்!" என்றான் டேவிட். "ஒவ்வொரு பங்கின் மதிப்பும் இருபது மடங்குவரை உயர்வதற்கான வாய்ப்பு இருக்கிறது!"

ஸ்டீஃபன் 40000 பங்குகளை வாங்க, டேவிட்டுக்கும் ஆசை விடவில்லை. தன்னிடம் இருந்த சொற்பப் பணத்தைப் போட்டு ஒரு ஷேர் புரோக்கர் மூலம் 500 பங்குகளை வாங்கினான்!

அதற்கு மறுநாள் தனது டாக்டரைச் சந்தித்தபோது 500 பங்குகள் வாங்கிய தனது சாமர்த்தியத்தைப் பற்றி மார் தட்டிக் கொண்டான் டேவிட். அதன் மதிப்பு ஏற்கெனவே இரு மடங்காக உயர்ந்துவிட்டதைப் பெருமையோடு உணர்த்தினான். மருந்துச் சீட்டுடன் அவன் விடை பெற்றுச் சென்ற பிறகு,டாக்டர் ராபின் தனது ஷேர் புரோக்கருக்கு போன் செய்தான். 35,000 பங்குகளைத் தன் பெயரில் வாங்கச் சொன்னான்.

ஷேர் மார்க்கெட்டில் ஒரு நிறுவனத்தின் ஷேர்கள் வாங்கப்படுகின்றன என்றால் அந்தப் பங்குகளின் மதிப்பு உயர்ந்து கொண்டே போகும். மேலும் பலர் லாபத்துக்கு ஆசைப்பட்டு வாங்கவும் ஆரம்பிப்பார்கள். ஹார்வியோ இதே நேரத்தில் பைசா பெறாத தனது பங்குகளை மார்க்கெட்டில் விற்பனைக்குத் தள்ளிவிட்டுக் கொண்டேயிருந்தான். டேவிட், ஸ்டீஃபன் ஆகியோர் முதலீட்டின் போது இரு மடங்காகிய பங்குகளின் மதிப்பு, டாக்டர் ராபினின் முதலீட்டுக்குப் பிறகு மும்மடங்காகி ஹார்விக்குக் கொள்ளை லாபத்தை ஈட்டித் தந்து கொண்டிருந்தன!

இதற்கிடையில் டேவிட் தனது அத்தியந்த நண்பர்களான இருவரைச் சந்தித்தான். "ஆருயிர் நண்பர்களான உங்களுக்கு இந்த அருமையான நல்ல வாய்ப்பு பற்றிக் கூறாமல் இருக்க என்னால் முடியவில்லை" என்று ஆரம்பித்து, பிராஸ்பெக்டா ஷேர்களின் மதிப்பு உயர்வது குறித்தும், 20 மடங்கு வரை உயரப் போவது பற்றியும் ஜாஜ்வல்யமாக வர்ணித்தான். "ரகசியமாக வைத்துக் கொள்ளுங்கள்; வெளியே விட வேண்டாம்" என்றும் எச்சரித்தான். பியர்ரி, 25,000 ஷேர்களை வாங்கினான். ஜேம்ஸ், 35,000 ஷேர்களை வாங்கத் தீர்மானித்து அதற்கு முன்பாகக் கடன் வாங்கினான்! 'எவ்வளவு வட்டி தந்தால்தான் என்ன, இருபது மடங்கு மதிப்பு உயரப் போகிறதே' என்று கணக்குப் போட்டான். இப்போது ஹார்வி தனது உதவாக்கரை ஷேர்களைப் பங்கு மார்க்கெட்டில் விற்று அவற்றுக்குப் புரோக்கர் மூலம் ஆறு மடங்கு விலை பெற்றுக் கொண்டிருந்தான்!

ஒரு வாரம், பத்து நாட்கள் போல் ஓடிச் சென்ற பிறகு, ஒரு நாள், வழக்கம் போல் டேவிட் காரியாலயத்துக்குப் போனபோது, அது பூட்டப்பட்டிருந்தது! கட்டடத்தின் சொந்தக்காரரை விசாரித்தபோது, "கணக்குத் தீர்த்து விட்டுக் காலி பண்ணிக் கொண்டு போய் விட்டார்களே, உனக்குத் தெரியாதா?" என்று வியப்புடன் வினவினார்.

பகீரென்றிருந்தது டேவிட்டுக்கு. 'ஏமாந்து விட்டோம்' என்று புரிந்தது. தான் மட்டுமல்ல! தனது நண்பர்கள், தனது டாக்டர் எல்லாரும் ஏமாந்து போய்விட்டார்கள்! அதற்குக் காரணம் தானே தான்! டேவிட் பயந்து போனான். தலைமறைவானான்!

(தொடரும்)



"புதுசா மூக்குக் கண்ணாடி கடை தொடங்கியிருக்கிறாயாமே. கடைக்கு என்ன பேரு?"

"ஃப்ரேமாலயா."

— லஞ்ஜனு



"நம்ம ஆபீஸ் ஊழியர்கள் அனைவருக்கும் ஒட்டு மொத்தமா ஒரேயொரு மனக்குறைதான்...."

"என்னன்னு சொல்லுங்க! உடனே சரி பண்ணிடுவோம்...."

"வேற ஒண்ணுமில்லே, நீங்க மானேஜரா இருக்கிறதுதான்!"

— மணியன் தர்மலிங்கம்




"என் காதலியின் டைரியைப் படித்துப் பார்த்தேன். வெட்கமாய்ப் போய்விட்டது."

"ஏன்? பச்சை பச்சையாக எழுதி வைத்திருந்தாளா?"

"இல்லே.. இல்லே... நான் அவளிடம் அவ்வப்போது ஐந்தும் பத்துமாய் வாங்கின கடன்களையெல்லாம் ஒன்றுவிடாமல் எழுதி வைத்திருக்கிறாள்!"

— லலிதா செல்லப்பா.



"உங்க பையனுக்குத் திடீர்னு புத்தி வந்துட்டதா எதை வைச்சுச் சொல்றீங்க?"

"'நான் பரீட்சையிலே பாஸ் செஞ்சுட்டா, என்னோட காலேஜ் அட்மிஷனுக்காக நீதானேப்பா, கஷ்டப்பட்டு அலையணும்? அதனாலேதான் நான் பரீட்சையை நல்லாவே எழுதலே'ன்னு சொல்றான்!"

— ஆர். அப்துல் சலாம்



மனைவி: குழந்தை பசி கூடத் தெரியாம பாவம், அசந்து தூங்கிட்டே இருக்கிறான். ரொம்ப நேரமாச்சு, எழுந்திருக்கவே இல்லே!


கணவன்: நீ வேணா ஒரு தாலாட்டுப் பாடிப் பாரேன்.....!

— அ. தெய்வசிகாமணி

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 4 3154 3 4 34 157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034.
போன்: 4 7 3389.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—; வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—; விமானத் தபால் ரூ 650/—.
(ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)

நியூட்ராமுல் சக்தி







உரம் வளம்கொழிக்கும் அமுல் பால். பலம் தரும் மால்ட். இன்சுவையிக்க கோக்கோ. ஒன்றாகும்! இவற்றின் கூட்டுப்பலனைத் தான் வழங்குகிறது நியூட்ராமுல். எதனுடனும் மிஞ்சமுடியாத சுவையிலேயே கிடைக்கிறது!

	1000 gms.	500 gms.	Refill.
நியூட்ராமுல்	37.21	19.29	–
மால்ட்டோவா	43.75	24.65	22.79
பூஸ்ட்	–	24.89	23.06
போர்ன்விட்டா	47.48	24.67	22.81

Prices as on 1st January, 1987. Local taxes extra.

நியூட்ராமுல்

விளங்குங்கள் நியூட்ராமுல் வஸ்தாத்தாக

விற்பனை விநியோகம்:
குஜராத் கோ ஆபரேட்டிவ் மில்க்
மார்க்கெட்டிங் ஃபெட். லி.,
ஆனந்த் 388 001.

daCunha/GCM/135/86 TAM



The choice of everyone

Sabnam®
Sabnam
Sabnam
Sabnam

T-SHIRTS

For trade enquiries: **Sabnam Hosiery Works,** 2/24, Rocky Industrial Estate, Ishwarbhai Patel Road, Goregaon (E), Bombay 400 063. Phone: 683763

dolphin/S